மொழிஞாயிறு

இலக்கணச் செம்மல்
புலவர் இரா.இளங்குமரனார்

தமிழ்மண் பதிப்பகம்

மொழிஞாயிறு

ஆசிரியர்

இலக்கணச் செம்மல்

புலவர் இரா. இளங்குமரனார்

2 சிங்காரவேலர் தெரு

தியாகராயர் நகர்

சென்னை - 17

நூற்குறிப்பு

நூற்பெயர்	மொழிஞாயிறு
ஆசிரியர்	புலவர் இரா. இளங்குமரனார்
பதிப்பாளர்	கோ. இளவழகன்
மறு பதிப்பு	2003
தாள்	17.0 கி. மேப்லித்தோ
அளவு	1/8 தெம்மி
எழுத்து	10 புள்ளி
பக்கம்	8 + 72 = 80
படிகள்	1000
விலை	உரு. 35
நூலாக்கம்	பாவாணர் கணினி 2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை - 17.
அட்டை வடிவமைப்பு	பிரேம்
அச்சு	வெங்கடேசுவரா ஆப்செட் 36, புதுத்தெரு, மாதிரி பள்ளி சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006
கட்டமைப்பு	இயல்பு
வெளியீடு	தமிழ்மண் பதிப்பகம் 2 சிங்காரவேலர் தெரு தியாகராயர் நகர் சென்னை - 600 014. தொலைபேசி : 5538 9712

அணிந்துரை

தமிழர் தம் தாய்மொழியாகிய தமிழை 'ஞாயிறு' என்று வழங்கினர். அதனால், உலகுக்கு வாய்த்த ஞாயிறு என்னும் கதிரோனும், தம் தாய்மொழியாக வாய்த்த தமிழ் என்னும் கதிரோனும் ஒப்பானவை என உவந்து பாராட்டினர்.

"ஓங்கல் இடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழிச் செங்கதிரோன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

என்று நயந்தனர் (தண்டியலங்காரம்).

இப்பாடலைத் தம் நூல்களில் பல இடங்களில் சுட்டிக் காட்டியவர் பாவாணர். தமிழ்மொழி உலக முதன் மொழி யாகவும், ஆரிய மொழிக்கு மூலமாகவும், திரவிட மொழி களுக்குத் தாயாகவும் இருப்பதை நிறுவிக் காட்டியவர். அதற்கெனவே, முதல் தாய்மொழி, ஒப்பியன் மொழி நூல், திரவிடத் தாய், வடமொழி வரலாறு என்னும் நூல்களை இயற்றியவர்.

பாவாணரின் ஆய்வையும் அதனை நிலைப்படுத்திய சிறப்பையும் உணர்ந்தவர்கள் அவரை மொழி ஞாயிறு பாவாணர் என வழங்கினர். பாவாணர் என்னும் பெயர் குறிப்பிடாமலும் மொழிஞாயிறு என்றாலே பாவாணர் தாம் எனச் சொல்வாரும், சொல்லக் கேட்பாரும் ஏற்றுப் போற்றினர்.

ஞாயிறு 'தன் ஒளி' உடையது. அதில் இருந்து பிரிந்து வந்தவையே திங்கள், செவ்வாய், அறிவன், (புதன்) வியாழன், வெள்ளி, காரி (சனி) என்னும் கோள்கள். அதுபோல் தமிழ் மொழி தன்னொளி உடையது; அதில் இருந்து அதன் ஒளியைப் பெற்றுக் கொண்டனவே உலக மொழிகள் என்பது பாவாணர் முதலிய ஆய்வாளர் முடிபு.

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலை யாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்"

என்பது பேராசிரியர் சுந்தரனார் தமிழ் வாழ்த்து.

கால்டுவெலார் தமிழ் வழிப்பட்ட திரவிட மொழிகள் திருந்திய மொழிகள் திருந்தாமொழிகள் என ஆறு, ஆறு கூறினார். அதன்மேல் ஆய்வாக இந்நாளில், இருபதுக்கு மேற் பட்டவை திரவிட மொழிகள் என ஆய்வாளர் காட்டுகின்றனர்.

'மொழியாராய்ச்சி' என்னும் கட்டுரையில் பாவாணர் மேலை யாரிய மொழிகளில் அறுநூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இருத்தலை எடுத்துக் காட்டினார். இவ்வகையால் உலகுக்கு ஞாயிறு என ஒன்று இருப்பினும் தமிழர்க்கு அதனொடு தம் தாய்மொழியாம் தமிழும், தம் தமிழ் உலக முதன்மொழி என நிலைநாட்டிய பாவாணரும் ஞாயிறாகவே எண்ணிக் கூறப்பட்டனர். ஆதலால், ஞாயிறு ஒன்றுடன் தமிழ் ஞாயிறு ஒன்றும், மொழியாய்வில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பாவாணர் என்னும் மொழி ஞாயிறு ஒன்றும் ஆக மூன்றும் ஞாயிறுகள் எனச் சிறப்பிக்கப் படுதல் அறியத்தக்கதாம்.

பாவாணர் வாழ்வு, ஆய்வு, சால்பு என்னும் மூன்றைப் பற்றியும் சுருங்கக் கூறும் இச்சுவடி, பாவாணர் மொழித் திறம் மொழித்தொண்டு என்பவை கருதிப் புலமையாளர்களால் வழங்கப்பட்ட 'மொழிஞாயிறு' என்னும் பெயர் பெற்றதாம்.

பாவாணர் ஆய்வும் புலமையும் பலப்பலரை உருவாக்கி யுள்ளன. உருவாக்கியும் வருகின்றன. மொழியாய்வு செய்வார் எவரும் அவரை.அடியொற்றாது ஆய்வு செய்தற்கு இல்லை என்னும் அளவில் வழிகாட்டியுள்ளார் அவர். ஆதலால் பாரதியார் பரம்பரை, பாவேந்தர் பரம்பரை என்பது போலப் பாவாணர் பரம்பரை எனச் சுட்டத்தக்க ஒருவரிசையர் தமிழ் கூறு நல்லுலகில் பல்கி வருதல் மகிழ்வு மிக்கதாம். அவர்கள் படைப்புகள் தொடர்தல் மொழியாக்கமாகத் திகழ்வனவாம்.

பாவாணர் வாழ்வு இயல்பானது; எளிமையானது; உழைப்பின் உயர்வை வெளிப்படுத்துவது; மூளைக் கூர்ப்பின் திறத்தைப் பளிச்சிட்டுக் காட்டுவது.

பாவாணர் ஆய்வு இயற்கை தழுவியது; வேரும், வேரடி வித்தும் விரிவாக்கமும் எல்லாம் ஓர் இயற்கை ஒழுங்கு நிலையில் இயல்வதைக் கையில் கனியாகக் காட்டுவது. சொல்லியல் நெறிமுறை வழிப்பட்ட ஆக்கமும், பொருள் பொதி வளமும், இயற்கை ஒலி நயமும் பின்னிப் பிணைந்து நின்று "எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்னும் முன்னோன் மொழியை நிறுவிக் காட்டுவதாம். பாவாணர் சால்பு அருமையும்

பெருமையும் மிக்கது. சாதிமை கருதாச் சால்பு, சமயப் பிணக்கிலாச் சால்பு, நம்பாமதம் நம்பு மதம் ஏற்புச் சால்பு, நன்றியறிதல் நயன், மதித்துப் பாராட்டும் மாண்பு, குறைகளையும் வேட்கை, மொழி இன நலனுக்கு மாறானவரையும் மாறானவற்றையும் மதியாமை இன்ன சால்புகள் போற்றக் கூடியவையாய்த் திகழ்கின்றன.

வாழ்வு ஆய்வு சால்பு என நூல் முத்தலைப்புப் படினும், மூன்றும் ஒன்றனோடு ஒன்று தொடர்பாகவும் இணைந்தும் இயல்வனவே. ஆதலால் ஒவ்வொன்றிலும் இம்மூன்றும் ஊடும் பாவுமாக விளங்குதல் நோக்குவார்க்குப் புலப்படுதல் உண்மை.

பாவாணர் நூற்றாண்டு கண்டும், அவர்தம் படைப்புகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக வெளியிடும் பேறு வாய்த்தும் சிறக்கும் இந்நாளில் 'மொழிஞாயிறு' உலாக் கொள்ளல் உவப்புறுத்தும். இதனைப் பொழிவு நூலாக்கத் தூண்டிய வெங்காலூர் அன்பர் மதிவாணரும், பொழிவுப் பொறுப்பேற்ற வெங்காலூர்த் தமிழ்ச் சங்கத்தாரும், இக்கால் நூலாக்கம் செய்யும் கருவி நூற்பதிப்புக் களஞ்சியமாகத் திகழும் தமிழ்மண் பதிப்பக நிறுவனர் திரு. கோ. இளவழகனாரும் நம் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியர்.

இன்பமே சூழ்க.

இரா. இளங்குமரன்

பதிப்புரை

தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்ந்த மொழிஞாயிறு பாவாணரின் வரலாற்றைச் செந்தமிழ்ச் செம்மல் அய்யா இளங்குமரனார் தமிழ் உலகிற்குக் கொடையாகத் தந்துள்ளார். இந் நூல் ஒரு பேரறிஞரின் வரலாற்றைக் கூறும் நூல் மட்டுமன்று. பாவாணர் வாழ்ந்த நாளின் மொழி, இன, நாடு தழுவிய ஓர் இயக்க வரலாற்றைக் கூறும் நூல். படிப்பார் கண்களுக்கு முதலில் சிறு சுவடியாய்த் தோன்றும். படித்து முடித்த பின் தாம் கற்றது பெருநூல் என்பதை உணர்வார். உண்மை, உழைப்பு, துணிவு, ஒழுக்கம் தழுவிய தனிமாந்தப் பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தவரின் வரலாற்றைக் கூறும் நூல். தமிழ் வாழ்வைத் தவவாழ்வாய்க் கொண்டு வறுமையிலும் செம்மாப்பாய், எதிர்ப்பிலும் மனம் குலையா உறுதியராய், ஊக்குதல் கிடையாத போதும் உறுதி குன்றா நிலையராய், அறிஞர்களுக் கெல்லாம் அறிஞராய் வாழ்ந்து காட்டிய தனித்தமிழ் ஞாயிற்றின் வரலாற்றைக் கூறும் நூல்.

பாவாணர் வாழ்வு; தமிழ் வாழ்வு, தமிழர் வாழ்வு, தமிழ் நாட்டு வாழ்வு, ஆரியத்தை வன்மையாய் எதிர்த்த அடலேற்றின் வாழ்வு, தமிழ்ப் பண்பாட்டு வாழ்வு, தமிழ நாகரிக மேம்பாட்டு வாழ்வு, தமிழ் ஆய்வை மேற்கொள்வார்க்கு வழிகாட்டும் வாழ்வு. உலக மொழிகளில் தமிழின் வேர் வடிவும், வேருறுப்பும், வேரோடி கிடக்கிறது என்பதைத் தம் ஆழ்ந்தகன்ற அறிவுப் புலமையால் உலகுக்கு உணர்த்திய வாழ்வு. கோடி கொடுப்பினும் கொள்கை தவறாக் குன்றமென வாழ்ந்த வாழ்வு. சொல்லாய்வைப் புதுவரவாய்த் தமிழ் மொழிக்குக் கொண்டு வந்து சேர்த்த வாழ்வு.

நூலின் பிழிவுகள்

கடைக்குட்டி என்னும் குறுந் தலைப்பில்(பக். 17)குறித்துள்ள செய்திகள் தம் பெற்றோருக்குக் கடைசிப் பிள்ளையாகப் பிறந்த அய்யா இளங்குமரனாருக்கும் பொருந்தும். எனக்கு 'வீடுமில்லை'; 'காடுமில்லை'; 'இருப்புமில்லை'; 'எடுப்புமில்லை' எனும் கொள்கை அழுத்தமும், 'தலை இழக்கினும்; தமிழை இழக்கிலம்' (பக். 27) எனும் வரிகள் இந் நூலைப் படிப்பார் அனைவரும் நினைக்கத்தக்க வரிகளாகும்.

தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்திய மேலை அறிஞர் கால்டுவெல், ஒப்புயர்வற்ற பெருந்தமிழ் அறிஞர் மறைமலையடிகள், தமிழ்த்தென்றல் திரு.வி.க., தென்கலைச் செல்வர் உ.வே.சா., பரிதிமாற் கலைஞர், பி.தி. சீனிவாசய்யங்கார்., சேசைய்யங்கார், இராமச்சந்திர

தீட்சிதர், கிருட்டிணசாமி ஐயங்கார், மருத்துவர் மல்லையா, யாழாசிரியர் இராசகோபாலையர், மயிலை சீனி. வேங்கடசாமி, அவ்வை துரைசாமி, பைந்தமிழ் அறிஞர் சி. இலக்குவனார், தமிழ்ச்செம்மல் வசுப. மாணிக்கனார் போன்ற பெருமக்களை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டுப் பாராட்டியது நோக்கத்தக்கது. தனிக்கசப்புகள் மொழிக் கசப்பாய், நாட்டுக்கசப்பாய், இனக்கசப்பாய், கட்சிக்கசப்பாய், மல்கி இருக்கும் இக்காலத்தில் பாவாணரின் பண்பு நலன் வியக்கத்தக்கது; வணங்கத்தக்கது. (பக். 29 - 35)

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனும் பழந்தமிழ்ச் செய்தியும், ஈக உணர்வும் தமிழ் ஆய்வைத் தவமாய்க் கொண்ட உணர்வுகளும் (பக். 45-46) படிப்பாரின் உள்ளத்தை நெகிழச் செய்பவை.

தம் குடும்பம், தம் சமூகம், தம் சாதி, தம் மதம் என்னும் கட்டுக்குள் அடங்காது தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு எனும் உயர் கொள்கைகளுக்காக வாழ்ந்து மறைந்தவர் மொழிஞூல் கதிரவன் பாவாணர். அவரின் தடம் பற்றி வாழும் அய்யா இளங்குமரனார் பொது வாழ்வை மேற்கொள்வார்க்கும், எதிர்காலத் தமிழ்க் குமுகாயத்தைக் கட்டி எழுப்ப இருக்கும் மாணவர்க்கும் பயன்படும் வகையில் பாவாணரின் வரலாற்றுச் சுவடுகளைத் தமிழர்களுக்குக் கொடையாகத் தந்துள்ளார். படித்து மகிழ்வோம்!

பதிப்பாளர்

பொருளடக்கம்

1.	பாவாணர் வாழ்வு	1
2.	பாவாணர் சால்பு	24
3.	பாவாணர் ஆய்வு	47

1. பாவாணர் வாழ்வு

'ஞா.தே' எனச்சுருக்கமாகவும், 'ஞா. தேவநேயன்' என விளக்க மாகவும் கையொப்பமிட்ட பாவாணர், 'மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்' என்று பெருக்கமாகவும், 'பாவாணர்' என்று சுருக்கமாகவும், தமிழ்ப்பற்றாளர்களால் வழங்கப்பட்டார். அவர் வரலாறு பெருக்க மிக்கது! அதன் சுருக்கத்தின் சுருக்கமே இவ்வரலாறு ஆகும்!

சுருக்க வரலாறு

பாவாணரைப் பற்றிய பெருக்க வரலாறே, "தொடர்மழை விரும்பு வார்க்குத் தூவானம் போல்வது" எனவும், "காவாணம் விழைவார்க்குக் கைக்குடை போல்வது" எனவும் கருதப்பட்டது. ஆயின் இச்சுருக்கத்தின் சுருக்கம் எத்தகையதெனக் குறிக்க வேண்டுவதில்லை. சிலப்பதிகார நூற்கட்டுரை கண்ணாடி ஒன்றில் கருமலையைக் காட்டுவது போல என்பதை,

> "ஆடிநன் னிழலின் நீடிருங் குன்றம்
> காட்டுவார்போல் கருத்துவெளிப் படுத்து"

என்று கூறுமானால், இதனை எவ்வாறு கூறுவது?

தாத்தா

நெல்லை மாவட்டத்துப் பனைவடலி என்னும் ஊரில் முத்துசாமி என்பார் ஒருவர் இருந்தார். அவர் துணைவியார் வள்ளி யம்மை என்பார். முத்துசாமி, அந்நாளில் சிறித்தவத் தொண்டாற்றிய ஆங்கிலத் துரை மகனார் தோக்கசு (Stokes) என்பார் வளமனைக் காவற்காரராகப் பணி செய்தார்.

தந்தை

முத்துசாமி - வள்ளியம்மை இல்வாழ்வுப் பயனாக ஓராண்மகவு பிறந்தது. மகவு பிறந்த சின்னாள்களிலேயே பெற்றோர் அடுத்தடுத்து இறந்தனர். புகலற்ற குழந்தைக்கு வளர்ப்புத் தந்தையானார் தோக்கசு. குழந்தைக்கு 'ஞான முத்து தோக்கசு' எனப்பெயர் சூட்டி வளர்த்து ஆளாக்கினார்; ஆசிரியரும் ஆக்கினார். சங்கரன் கோயிலில் இருந்த தொடக்கப்பள்ளி ஒன்றில் ஆசிரியப் பணியாற்றி வந்தார் ஞான முத்தனார்.

தாய்

ஞானமுத்தரின் உறவுப்பெண் சொக்கம்மாள் என்பார். அவரைக் கிறித்தவ முறைப்படி 'மரியாள்' எனப் பெயரிட்டு, மணவினை நிகழ்த்தினார் தோக்கசு. ஆனால், அவ்வம்மையாரின் உறவினர் ஈழத்தில் இருந்தமையால் அவர் நாட்டம் கணவனை விடுத்து, ஆங்குச் செல்வதாயிற்று. அதன்பின், கோயில்பட்டியை அடுத்துள்ள பாண்டவர் மங்கலத்தில் ஓதுவாராக (உபதேசியாராக) இருந்த குருபாதம் என்பாரின் திருமகளார் பரிபூரணம் என்பாரை ஞானமுத்தருக்கு வாழ்க்கைத் துணையாக்கினார் தோக்கசு. பரிபூரணம் பாளையங்கோட்டை சேராடக்கர் கல்லூரியில் மூன்றாம் படித்தரம் (எட்டாம் வகுப்பு) தேறி ஆசிரியப்பணி செய்தவர். சமயப்பற்று மிக்கவர் ; கணவரொடு கருத்தொருமித்து வாழ்ந்தவர்.

பிறப்பு

ஞானமுத்தர் பரிபூரணத்தம்மையார் இல்வாழ்வில் மக்கள் பதின்மர் பிறந்தனர். மகளிர் அறுவர்; ஆடவர் நால்வர். அவருள் பத்தாம் மகவாகவும் நாலாம் மகனாகவும் பிறந்த 'கடைக்குட்டி' நம் பாவாணர். பிறந்த இடம், சங்கரன் கோயில். சங்கர நயினார் கோயில் சங்கர நாராயணர் கோயில் என்பனவும் இது. பிறந்த நாளும் பொழுதும், 1902ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் ஏழாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி!

இழப்பு

1906இல் ஞானமுத்தர் இயற்கை எய்தினார். அடுத்தே அன்னையாரும் மறைந்தார். ஆதலால், தம் ஐந்தாம் அகவையிலேயே பெற்றோரை இழந்துவிட்டார் தேவநேயர். அவர்தம் மூத்த அக்கையார் வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூரில் வாழ்ந்தார். அவர் அரவணைப்பில் வளர்ந்தார் தேவநேயர்.

தொடக்கக்கல்வி

சங்கர நயினார் கோயில் வட்டத்தின் வட எல்லையில் உள்ள, சீயோன்மலை என்னும் முறம்பில் யங் துரை என்பார் இருந்தார். ஆங்கு ஓர் உயர்தரப் பள்ளியை உருவாக்கி உண்டுறை விடுதியும் அமைத்திருந்தார். குறைந்த கட்டணம் செலுத்தி இயலும் உண்டுறை விடுதியும், கட்டணமே இல்லாமல் இயலும் உண்டுறை விடுதியும் என இருவகை விடுதிகள் ஆங்கு இருந்தன. அவற்றுள் பின்னதன் உதவி பெற்றுத் தொடக்கப்பள்ளிப் படிப்பை முடித்தார் தேவநேயர் அக்கால் இவர்க்கு ஆசிரியராக இருந்தவர் முத்துசாமி என்பார்.

கல்வி

பின்னர், அவர் அக்கையார் இருந்த வடார்க்காடு மாவட்டம் ஆம்பூர் (M.E.L.M.) நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை கற்றுத்

தேர்ச்சியுற்றார். மேற் கல்வியைப் பெற விரும்பிய தேவநேயர்க்குச் சீயோன் மலை 'யங்' துரை உதவ முன் வந்தார். கல்விக்கு ஆகும் தொகையைக் கடனாக வழங்கினார். அத்தொகை உதவியால் பாளையங்கோட்டை (C.M.S.) உயர்நிலைப்பள்ளியில் 4, 5, 6ஆம் படிவங்கள் பயின்று சிறந்த தேர்ச்சி பெற்றார். அதன்பின் ஆசிரியப் பயிற்சியும் பெற்றார்.

பணிநிலை: ஆசிரியப்பணி

ஆசிரியப் பயிற்சி பெற்ற தேவநேயர் சீயோன் மலையில் ஆசிரியப் பணியை முதற்கண் மேற்கொண்டார். தம் கல்விக்கு உதவிய 'யங்' துரை மகனார் உதவிய கடனை அடைப்பதற்காகவே ஆங்கே வேலை செய்தார். திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் உருபா பதினாறு பெற்றமை பள்ளிச் சம்பளப் பட்டிவழியே அறிய வருகின்றது. அப்பொழுது ஆறாம் வகுப்பு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் தேவநேயர். தலைமையாசிரியர் இராசேந்திரன் என்பார்.

தமிழாசிரியப்பணி

சீயோன்மலையில் ஈராண்டளவு பணிசெய்த தேவநேயர் தம் அக்கையார் இருப்பதும், தாம் எட்டாம் வகுப்பு வரை பயின்றதுமாகிய ஆம்பூர்ப் பள்ளியில் ஆசிரியப்பணி மேற்கொண்டுள்ளார். அது தமிழாசிரியப் பணியாகும்.

கவிவாணர்

அந்நாளில், தமிழ்ப்பாடம் கற்பிப்பதற்கு இவர் தக்கார் என ஒரு பெரும் புலவர் சான்று வழங்கினால்போதுமானது. அதனைக் கொண்டே தமிழாசிரியப் பணி பெறலாம். ஆனால், அச்சான்று தக்கார்க்கு அன்றிப் பிறர்க்குக் கொடுக்கப் புலமையாளர் முன்வரார். தகுதிச் சான்று பெற்றவர் தம் தகுதியை நிலைநாட்டுவதுடன், சான்று வழங்கியவர் தகுதியையும் மெய்ப்பிக்க வேண்டும் என்னும் கடமை உணர்வு கொண்டே சான்று வழங்கினர். பாவாணர்க்குப் பாளையங்கோட்டையில் தமிழாசிரியராக இருந்த பண்டிதர் மாசிலாமணி என்பவரே சான்றிதழ் வழங்கினார். அச்சான்றிதழில் தேவநேயரை 'தேவநேசக் கவிவாணன்' என்று குறிப்பிட்டிருந்தார். அக்காலத்திலேயே கவிதை இயற்றும் திறமும் இசையொடு பாடும் திறமும் தேவநேயர் பெற்றிருந்தமையாலேயே அவ்வாறு குறிப்பிட்டார். அவர்தந்த 'கவிவாணர்' என்னும் பட்டமே பின்னாளில் பாவாணராக நிலை பெற்றதாகும்.

ஆம்பூர்

பாவாணர் ஆம்பூர் நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியப் பணி மேற்கொண்ட அடுத்த ஆண்டிலேயே அப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்தமையால் பாவாணரும் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியரானார். அத்தகுதியை நிலைப்படுத்திக் கொள்ளுதற்கும், முதன்மைத் தமிழாசிரியராக இருத்தற்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய

பண்டிதத் தேர்வு வெற்றி பெற வேண்டும் என்னும் எண்ணம் பாவாணர்க்கு உண்டாயிற்று. அதனால் 1924 ஏப்பிரல் 7, 8, 9ஆம் நாள் களில் நடைபெற்ற பண்டிதத் தேர்வு எழுதி அவ்வாண்டில் அவரொரு வரே வெற்றி பெற்றார். அவர் பெற்ற வெற்றியும் இரண்டாம் வகுப்பே! முதனிலை (பிரவேச பண்டிதம்) இடைநிலை (பாலபண்டிதம்) என்னும் தேர்வுகளை எழுதாமலே ஒரே ஆண்டில் இறுதிநிலை (பண்டிதம்) எழுதி வெற்றி பெற்ற பாவாணர் புலமைத் திறம் மதிப்பு மிக்கதும் பெருமைப் படத் தக்கதுமாம்.

"1924 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வெழுதித் தேறினேன். அதனால் எழுந்த செருக்கினாலும் தமிழ் வெறியினாலும் ஆங்கிலத்தை அறவே புறக்கணித்து நான் ஆங்கிலம் பேசக்கூடாது என்றும், பிறர்பேசின் செவிமடுக்கக் கூடாது என்றும் சூளிட்டுக் கொண் டேன். அம்மயக்குப் பத்தாண்டு தொடர்ந்தது. அதனால் தமிழாராய்ச்சி யில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டத்தைக் கண்டேனாயினும் ஆங்கிலப் பேச்சாற்றலை இழந்து விட்டதனால் ஆங்கிலப் பட்டம் பெறும் வரை கல்லூரியுட் கால்வைக்க முடியாது போயிற்று. அதனால் பதவியுயர்வும் பொருளியல் முன்னேற்றமும் இல்லாது போயின" என்கிறார் பாவாணர்.

பாவாணர் பாளையங்கோட்டையில் பயின்ற நாளில் ஆங்கிலப் பற்றாளராகவும், பேச்சாளராகவும், மாணவர் ஆங்கில இலக்கியமன்றச் செயலாளாகவும் ஆங்கில இலக்கியத்தைக் கரைகண்டு ஆக்கசுப் போர்டு (Oxford) என்னும் எருதந்துறையில் பணிகொள்ளும் விருப் பாளராகவும் இருந்தார். அவர்தம் ஆர்வமும் வேட்கையும் தமிழின்பால் மடைமாற்றம் பெற்றமை வியப்புக்குரியதே. அவ்வியப்பு அவர்க்கும் தோன்றியிருக்கிறது. அதனால், "ஆறாம் படிவத்தில் தமிழ் (த் தொகுதி களைச் சிறப்புப் பாடமாக எடுத்துக்) கற்றதனாலும், இசைப்பாட்டும் செய்யுளும் இயற்றி வந்ததனாலும், இசைத்தமிழ்ப் பித்தன் ஆனதனாலும் நான் அறியாவாறு இறைவன் என் மனப்பாங்கை மாற்றியதனாலும்" தாம் தமிழாசிரியப் பணி மேற்கொண்டதாகக் கூறுகிறார்.

சென்னை

தேவநேயர் ஆம்பூரில் மூன்றாண்டுகள் பணி செய்தார். பின்னர்ச் சென்னைக்குச் சென்றார். அங்கே, பிரம்பூர் கலவல கண்ணனார் உயர் நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி கெல்லற்று உயர்நிலைப்பள்ளி, தாம்பரம் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் உதவித் தமிழாசிரியராகவும், தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

கிறித்தவக் கல்லூரி உயர்பள்ளியில் பாவாணர் பணியாற்றிய காலத்தில் (1926) திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கத் தனித் தமிழ்ப் புலவர் தேர்வு எழுதி இவர் ஒருவராக வெற்றி பெற்றார். அதன் பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வும், கீழைக் கலைத் தேர்வும் (B.O.L) எழுதி வெற்றி பெற்றார்.

கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளிப் பணியில் இருந்து விலகி, மன்னார்குடி 'பின்ட்லேக்' கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகச் சென்றார் பாவாணர்.

மன்னார்குடி

மன்னார்குடியில் இலக்கணப் புலவர் சோமசுந்தரம் என்பார் காவல்துறையில் பணியாற்றி வந்தார். அவர் தொடர்பு, ஏற்பட்டமை "இலக்கணத்தில் எனக்கு எல்லை இல்லாத பைத்தியம் உண்டு" என்னும் பாவாணர்க்கு மிக வாய்ப்பாயிற்று!

இசைப்பாவன்மையும், கருவி இசைக்கும் திறமும் பெற்றிருந்த பாவாணர் 1926இல் கும்மி, ஆனந்தக் களிப்பு, நொண்டிச்சிந்து முதலிய மெட்டுகளில் மருதநிலப்பாடல் என ஒரு நூல் இயற்றி வெளியிட்டார். அவ்விசைத்திறம் மேலும் சிறக்குமாறு மன்னார்குடியில் இருந்த இசையாசிரியர் யாழ்ப்புலவர் இராசகோபாலரிடம் முறையாகப் பயில வாய்த்தது. இக் காலத்தே முடிக்கல அளவில் (கிரௌன்) 200 பக்கம் வரும் 'இசைத்தமிழ்ச் சரித்திரம்' என்னும் நூல் இயற்றினார்.

சென்னையில் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொடர்பால், இம்மன்னார்குடிக்கு வந்தபின் செந்தமிழ்ச் செல்வியில் 1931 சூன் - சூலைத் திங்களிதழ் (செந்.செல்.9 : 275) முதலாகப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுத வாய்த்தது. 'கிறித்தவக் கீர்த்தனம் - முதற்பாகம்' என்னும் இசை நூலும், 'துவாரகை மன்னன் அல்லது பூபாரந்தீர்த்த புண்ணியன்,' என்னும் துணை நூலும் இம்மன்னார்குடிக் காலத்திலேயே (1932) பாவாணர் இயற்றினார். இக்காலத்திலேதான் பாவாணர் பன்மொழிப் புலமை பெறுதற்குத் தக்க ஒய்வும் வாய்ப்பும் கிடைத்துள்ளன. இவற்றால், பாவாணர் புலமை ஊற்றம் சிறக்க ஊற்றுக் கண்ணாக வாய்த்த இடம் மன்னார்குடி எனலாம்.

மன்னார்குடி 'பின்ட்லே' கல்லூரியின் வளர்ச்சிகுன்றி வந்தது. இளங்கலை வகுப்பு முதற்கண் நீங்கியது. பின் இடைநிலையும் தேய்ந்தது; உயர்நிலைப் பள்ளியாகச் சுருங்கியது. அந்நிலையில் இளநிலை ஆசிரியர்கள் வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டது. பாவாணர்க்கு அவ்விடர் இல்லை எனினும், ஆங்கு வேலை செய்த கோபால கிருட்டிணர் என்னும் தமிழாசிரியர்க்கு உதவி செய்யு முகத்தால் பாவாணர் வெளியேறினார்.

கோபால கிருட்டிணர் பிராமணர் எனினும் தம் கருத்துக்குப் பெரிதும் உடன்பாடானவர் என்றும், அவர் குடியிருந்த வீடு மழைக்குத் தாங்காமல் இடிந்து விழுந்து விட்டது என்றும், அந்நிலையில் அவர் வேலையும் இழந்து வெளியேறினால் மனைவி மக்களொடு மிக அல்லல்படுவார் என்றும் கருதித் தாமே வேலையை விடுத்து வெளியேறி அவர்க்குப் பாதுகாப்பளித்தார். அந்த அளவுக்குப் பாவாணர் என்ன

பெருவாய்ப்பானரா? பாவாணர்க்கு உள்ளம் இருந்தது. "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்பது குமர குருபரர் வாக்கு.

திருச்சிராப்பள்ளி

மன்னார்குடியில் ஆறு ஆண்டுகள் (1928-1934) பணியாற்றி வெளியேறிய பாவாணர் திருச்சி பிசப்பு ஈபர் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பது ஆண்டுகள் (1934-1943) வேலை செய்தார். பாவாணர் பன்மொழிப் பயிற்சிப் பெருக்கத்திற்கும், நூல்கள் இயற்றுதற்கும். நாடு மொழி இனத் தொண்டுகளில் நன்கு ஊன்றுதற்கும் பெருவாய்ப்பாக இருந்த காலம் இத்திருச்சிராப்பள்ளிக் காலம் எனலாம். பாவாணரைத் தமிழுலகுக்கு நன்கு இனங்காட்டிய ஒப்பியன் மொழிநூல் என்னும் நூல் ஒன்று இக்காலத்திலேதான் (1940) வெளிவந்தது. 'வேர்ச்சொற் சுவடி' என எழுதியதும் இக்காலமே. இந்தி எதிர்ப்பு, தமிழ்க் காவல் ஆகிய தொண்டுகளில் எத்தமிழாசிரியரும் அக்கால் செய்யாத தனிவீறுடன் கிளர்ந்து பாவாணர் தொண்டாற்றியதும் இக்காலமேயாம்!

"இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?" என்னும் பெயரிய நூல் இயற்றியவர் பாவாணர். அதன் ஆங்கில ஆக்க நூலும் செய்தவர் அவர். இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் என்பதை உணர்ந்து உணர்த்திய இடம் பிசப்பு ஈபர் உயர்நிலைப்பள்ளி என்பது தெளிவாகின்றது.

"நான் திருச்சிப் புத்தூர் ஈபர் மேற்காணியார் உயர் நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியனாயிருந்த போது ஒருநாள் 6ஆம் படிவ வகுப்பில் இந்திச்சொற்கள் பலவற்றின் தமிழ் மூலத்தையும் கூழைத் தன்மையையும் ... விளக்கினேன்."

விளக்கி முடித்தவுடன் பாடம் நடத்தத் தொடங்கி 'இன்னும் எத்தனை பாட்டு நடத்த வேண்டும்' என்று மாணவரை வினவினேன். ஒருவன் 'அஞ்சபாட்' என்றான். உடனே எனக்கு, இந்தி தமிழ் நாட்டிற்கும் பொது மொழியாக வந்தால் நாளடைவில் தமிழ் இந்நிலைதான் அடையும் என்னும் உணர்வு பிறந்தது. நான் சொன்ன இந்திச் சொற்களின் கூழைவடிவம் அம்மாணவன் உள்ளத்தில் ஆழப்பதிந்ததால் அவ்வச்சிலேயே அவனை அறியாது எழுந்த சொற்கள் 'அஞ்சபாட்' என்பன. அவன் குறும்புத்தனமாகக் கூறியனவல்ல. அவன் குறும்பனுமல்லன்" என்று அவர் எழுதுவதால் இக்குறிப்பு விளங்கும் (இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? பக். 19- 20).

'கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் - செந்தமிழ்க் காஞ்சி' என்னும் நூல் இயற்றி 'தேசாபிமானத் தமிழ்த் தொண்டன்' என்னும் பெயரால் அதனை வெளியிட்டார் (1937) பாவாணர். திருச்சிப்பகுதியில் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் கூட்டிய பாவாணர், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மதுரை, சென்னை, சேலம் முதலாய இடங்களுக்குத் தாமே தம் செலவில் சென்றும் பொழிவு செய்தார். சிற்றூரரைத் திரட்டவும், மாணவர்க்கு வெளிப்படுத்தவும், தமிழ்ப்புலவர்

களையும் தமிழறிஞர்களையும் தட்டியெழுப்பவும் கடனாற்றினார். தமிழன்பர் மாநாடு, தமிழறிஞர் கழகம், கலைச் சொல்லாக்கக் குழு என்பவற்றிலெல்லாம் பங்குபற்றி அரும்பணி செய்தார்.

திரவிட மரபு தோன்றிய இடம் குமரி நாடே என்னும் இடு நூலை (Thesis) எழுதிப் பல்கலைக் கழகத்தில் 'M.O.L.' பட்டத்திற்காக ஒப்படைத் தார். 11-2-36 இல் அவ்விடு நூல் பல்கலைக் கழகத்தால் ஏற்கப் படாமல் தள்ளப்பட்டது. அதுகுறித்து, "இனிமேல் இந்தியாவிற்குள் எனக்கு ஒருதேர்வும் இல்லை. ஆகையால் எனது நூல்களையெல்லாம் ஒவ்வொன்றாய் வெளியிடப் போகிறேன்" என முடிவெடுக்கிறார். அம்முடிவுப் படியே தொடர்ந்தார். 1952 இல் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளமை கல்லூரிப் பேராசிரியத் தகுதி கருதிய கட்டாய முயற்சி யாகலாம்!

மீண்டும் சென்னை

1943 ஆம் கல்வியாண்டு தொடங்கிச் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளிக்குச் செல்கிறார் பாவாணர். ஆங்கு ஓராண்டே பணியாற்றினார். இக்காலத்திலே தொல்காப்பிய எழுத்ததி காரம், சொல்லதிகாரம் ஆகிய பதிப்புகளுக்குக் குறிப்புரையும் ஆய்வுரையும் எழுதியுள்ளார். பின், தம் வாழ்வில் 'பசுஞ்சோலை' எனக் குறிக்கும் சேலம் நகராண்மைக் கல்லூரி, வேலை வாய்த்து ஆங்குச் சென்றார் பாவாணர்.

சேலம்

சேலம் நகராட்சித் தலைவராக அந்நாளில் திகழ்ந்தவர். திரு. இரத்தின சாமியார் : அவரே சேலம் நகராட்சிக் கல்லூரித் தாளாளரும் ஆவர். சேலம் நகராட்சிக் கல்லூரித் தலைவராக இருந்தவர் இராம சாமியார். இரத்தினசாமியாரும் இராமசாமியாரும் தமிழ்ப்பற்றும் தமிழினப் பற்றும் மிக்கவர்கள் : சீர்திருத்தச் செம்மல்கள். இதே காலத் தில் நகராட்சியின் ஆணையராக ஆட்சி மொழிக் காவலர் கீ. இராம லிங்கனார் இருந்தார். இப்பெருமக்கள் கூட்டுறவால் பாவாணர் அமை வாகப் பணிசெய்யும் வாய்ப்புக் கிட்டிற்று. முதல்வர் இராமசாமியார் மேல் பாவாணர் கொண்ட பற்றும், நன்றியுணர்வும், ஒரு பதிகமாக வெளிப்பட்டது (தமிழ் வரலாறு. பக் 198) அதில் ஒரு வெண்பா :

> "சேலங்கல் லூரி சிறந்திராம சாமியின்றேல்
> ஞாலம் பரவுதமி ழாராய்ச்சி - நூலியற்றும்
> தேவநே யன்எங்கே? தென்மொழித் தொண்டெங்கே?
> பாவுதமிழ் மீட்பெங்கே? பார்!"

என்பது.

உயர்தரக் கட்டுரை இலக்கணம் முதற்பாகம் (1950) இரண்டாம் பாகம் (1951) பழந்தமிழாட்சி (1952), முதல் தாய்மொழி அல்லது

தமிழாக்க விளக்கம் (1953) தமிழ்நாட்டு விளையாட்டுகள் (1954) தமிழர் திருமணம் (1956) என்பவை பாவாணர் சேலம் கல்லூரியில் பணியாற்றிய காலத்து இயற்றி வெளியிட்ட நூல்கள். இவற்றுள் சொல் லாராய்ச்சிக் கட்டுரை முகப்பில், "என்னைப் பல்லாற்றானும் ஊக்கி இந்நூல் விரைந்து இயல்தற்குக் காரணமாயிருந்த சேலம் நகராண்மைக் கல்லூரித் தலைவர் திரு. அ. இராமசாமிக் கவுண்டர் M.A., L.T., அவர்க ளுக்கு யான் என்றுங்கடப் பாடுடையேன்" எனவுரைகின்றார். சேலத்தில் பணி செய்த காலத்தில் பாவாணர் தமிழ்நாட்டு எல்லை மாநாடு கூட்டி எல்லைக் குழுவினிடம் அறிக்கை தந்து காலத்தால் கடனாற்றத் தூண்டிய முயற்சி அறிய வருகின்றது. ஏனெனில், மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட புலவர் சிலர் உளர். ஆனால் நாட்டு எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டார் அரியர்! பாவாணர்க்கு அச்சிறப்பும் உண்டு.

19-4-1946இல் பாவாணர், மறைமலையடிகளாரிடம் தம் தமிழ்ப் புலமைக்குச் சான்றிதழ் வழங்குமாறு வேண்டியமை அடிகளார் நாட் குறிப்பால் தெரிகின்றது. அதன்படியே அடிகளார் அரிய சான்று வழங்கி யுள்ளார். விரிவான அச்சான்றிதழின் நிறைவு, 'சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித்திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றோம்' என்பதாம். அடிகளார் தம் புலமை மீது கொண்ட உறுதிப்பாட்டை - ஒரு சான்றால் சுட்டுகிறார் பாவாணர்.

"ஒரு தமிழ்ப் புலவர் ஒருகால் தம் தவறான சொல்லாராய்ச்சி யொன்றைக் கூறியபோது அது பொருத்தமன்றென (அடிகள்) மறுத் துரைக்க, அஃது என் (பாவாணர்) ஆராய்ச்சி என்று அப்புலவர் பொய்த்த பின் 'அங்ஙனமாயின் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்' என்று திருவாய் மலர்ந்தார்களாயின் அவர்கள் என்னை மொழி நூற் றுறையில் எத்துணை மதித்திருந்தார்கள் என்பதை அறிந்து கொள்க" என்கிறார் (தென்மொழி 7.9.12) அடிகளார் செய்த செயற்கருஞ் செயலை,

> "மூவா யிரமாண்டு மோது வடமொழியாற்
> சாவாந் தகைநின்ற தண்டமிழை - மேவாக்
> குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர்
> அமரர் மறைமலை யார்"

என்கிறார்.

பாவாணர் சேலம் நகராட்சிக் கல்லூரியில் பன்னிரண்டாண்டுகள் பணி செய்தார்.

அண்ணாமலை நகர் வாழ்க்கை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணிசெய்வதற்குப் பாவாணர் பல்கால் அவாவினார். 1956 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழி ஆராய்ச்சித்துறை ஏற்பட்டது. அப்பொழுது பாவாணர்க்கு அகவை 54. சேலம் கல்லூரியில் ஓர் ஆண்டு மட்டுமே பணி

தொடரும். பல்கலைக் கழகப் பணியாயின் ஐயாண்டேனும் பணி நீடும் வாய்ப்பு உண்டு. அக்கால எல்லைக்குள் தமிழ்வேர்ச் சொல் அகர முதலியை ஒருவாறு தொகுத்து விடலாம் எனக் கருதினார்.

பாவாணர்க்கு அமர்த் தோலை வந்தது. அதனைத் தொடர்ந்தே, அவர் பணியை மேற்பார்க்குமாறு வங்கநாட்டு வடமொழிப் பேராசிரியர் சுநீதிக்குமார் சட்டர்சியைத் தலைவராகக் கொண்ட ஒன்பதின்மர் குழு ஏற்படுத்தப் பட்டமை அறிவிக்கப்பட்டது. 12-7-56இல் பாவாணர் வாசகர் (Reader) வேலையை ஒப்புக் கொண்டார். 8-4-57இல் திரவிட மொழி நூல்துறைத் தொடக்கக்கூட்டம் நடைபெற்றது. அதில் தலைமை யுரை யாற்றிய சட்டர்சி 'இந்திய நாகரிகமெல்லாம் சமற்கிருத இலக் கியத்திலேயே எழுதப்பட்டுள்ளது. ஆதலால், இந்திய நாகரிகம் ஆரியரதே' என்றார்.

"இந்திய நாகரிகமெல்லாம் முதன்முதல் தமிழிலக்கியத்தி லேயே எழுதப்பட்டிருந்தது. அவ்விலக்கியம் முழுதும் இறந்து பட்டபின் அதன் மொழி பெயர்ப்பான சமற்கிருத இலக்கியமே மூலம் போற்காட்சி யளிக்கிறது" எனப் பாவாணர் மறுத்தார். அம் மறுப்பு சட்டர்சிக்கும் பேராசிரியர் இரா.பி.சேது முதலியவர்க்கும் எதிரிடையாயிற்று.

சொற்பிறப்பியல் அகரமுதலிப் போலிகையாக 50 சொற்களுக்கு வேரும் வரலாறும் பொருளும் விளக்கமும் எழுதிக் காட்டுமாறு பணித்தனர். அதனை அடுத்தே அப்பணியையும் செய்யாவண்ணம் தேராதூனில் (Dehradun) நிகழும் கோடை மொழியியற் பயிற்சிக்குச் சென்று வருமாறு துணைக் கண்காணகர் ஏற்பாடு செய்தார். அப்பயிற் சிக்குச் சென்று, வென்று திரும்பிய பின்னரும் நிலைமை சீராகாமை யுடன் மேலும் சீர்கெட்டும் போயிற்று.

தமிழர் குமரிக் கண்டத்தினின்று வந்தவர் என்னும் உண்மை வரலாற்றையும், அச்சன் என்பது அத்தன் என்னும் தென் சொல்லின் திரிபு என்னும் வரலாற்றையும் ஒப்புக் கொள்ள மறுத்த சட்டர்சி, "நீர் தன்னந்தனியாகப் போர் புரிகின்றீர்" என்று கூறியதுடன், வாய்மொழி யாகவும் எழுத்து வழியாகவும் தந்த விளக்கங்களையும் ஏற்றார் அல்லர். அதனால், மொழிநூல் துறையில் இருந்து பொதுத் துறைக்கு மாற்றப் பட்டார் பாவாணர்.

அதனை, "வடநாட்டுப் புகலிலி போன்ற அயன்மை உணர்ச்சி எனக்கு நீண்ட நாள் இருந்தது" என்றும், தாம் பொதுத் துறையில் இருந்தது "ஓர் அரசியல் தூதன் அயல்நாட்டில் இருந்தது போன்றது" என்றும், "சந்தையின் நடுவே ஓகத்தில் அமர்ந்திருப்பது போன்றே தோன்றிற்று" என்றும் குறிக்கிறார்.

பாவாணர்க்கு நேரிட்ட இந்நிலையை அறிந்த பாவேந்தர்,

"நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? - பாவிகளே
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்"

என்று, எச்சரித்துப் பாடியும், பல்கால் குயிலில் குரல் எழுப்பியும் பயன்படவில்லை. அதனால், "1961ஆம் ஆண்டு செபுத்தெம்பர் மாதம் 23ஆம் பக்கல் அண்ணாமலை நகரைவிட்டு வெளியேறினேன்! என்னோடு தமிழும் வெளியேறியது" என்கிறார் பாவாணர்.

காட்டுப்பாடி

பாவாணர் வெளியேறியபோது தமிழும் வெளியேறியது என்னும் வெளியேற்றம் மட்டுமா அறிய முடிகின்றது. பாவாணரோடு உடனாகி யும் ஒன்றாகியும் வந்த வறுமையை அவர் தவிர்த்துவிட முடியுமா?

திங்கள் தோறும் வருவாய் வந்த நாளிலேயே திண்டாட்ட மிக்க வாழ்வுடையராக இருந்தவர் பாவாணர். எனக்கு "வீடும் இல்லை காடும் இல்லை" "இருப்பும் இல்லை எடுப்பு மில்லை" "என் செல்வமெல்லாம் நூல் நிலையமே" என்னும் அந்த வாழ்வுக்கு வறுமை பின்னடைந்து நிற்குமா? எய்ப்பினில் வைப்பாக உதவும் 'ஓய்வு ஊதியம்' என ஒன்று தானும் உள்ளதாக எண்ணிப் பார்த்த காலமா அது?

அண்ணாமலை நகர் நீங்கிய பாவாணர் வட ஆர்க்காடு மாவட்டம், காட்டுப்பாடி விரிவு, இரண்டாம் மேற்குக் குறுக்குச் சாலை ஆ1135 ஆம் எண் இல்லத்தில் குடிபுகுந்தார். இந்நிலையில் குடும்பம் எப்பாடுபட்டிருக்கும்? நிற்க.

குடும்ப வாழ்வு

பாவாணர் தம்மை வளர்த்து ஆளாக்கிய அக்கையார் தீர்மானித்த எசுத்தர் என்பாரை மணந்தார். அன்பான வாழ்வாகவே அமைந்தது; அவ்வாழ்வால் ஓராண் மகவும் உருவாயிற்று. அம்மகவுக்கு மணவாள தாசன் என்று பெயரிட்டனர். அம்மகவுக்கு ஓரகவை எய்து முன்னரே அன்னையார் எசுத்தர் இயற்கை எய்தினார். கைக்குழந்தை, பாவாணர் கைவயத்தது ஆயிற்று.

இரண்டாம் மணம்

பாவாணரின் இளைய அண்ணனார்க்கு மகப்பேறு வாய்க்க வில்லை. அதனால் அவர் விருப்பின்படியே மணவாளக் குழந்தை தத்தாயிற்று! இந்நிலையில் அக்கையார் 'மணமகள்' தேடத் தொடங்கி னார். அவரல்லரோ எசுத்தரைப் பார்த்து மணத்தில் வைத்தவர்! பாவாணர் தம் அக்கை மகளாரையே நாடினார்; அவரும் பாவாணரை விரும்பினார். அதனால் அக்கையார் தம் மகளார் நேசமணியைத் தம் தம்பிக்குத் துணையாக்கினார். "தேவநேயர் - நேயமணியர்" திருமணம் 1930இல் நிகழ்ந்தது.

மக்கட்பேறு

நேயரும் நேயமணியாரும் ஒருயிரும் ஈருடலுமாக வாழ்ந்தனர். புனைவு அன்று இது! பாவாணரே புகலும் செய்தி! அவ்வினிய வாழ்வில் மக்கள் அறுவர் தோன்றினர். ஆடவர் ஐவர்; மகளார் ஒருவர்; அவருள் பைந்தமிழ் வளர்ந்த பாண்டியன் குழமகநிலையிலேயே 24-12-39இல் இயற்கை எய்தினான். எஞ்சிய ஐவரும் துணைவியாரும் பாவாணரும் ஆகிய எழுவர் குடும்பத்தில் முன்மக்கள் மூவரே அந்நாளில் இருபது அகவை கடந்தவர். பின்மக்கள் இருவரும் பதினான்கும், பதின்மூன்று மாம் அகவையர்.

பாவாணர் மக்கள்

நச்சினார்க்கினிய நம்பி
சிலுவையை வென்ற செல்வராயன்
அருங்கலை வல்லான் அடியார்க்கு நல்லான்
மடந்தவிர்த்த மங்கையர்க்கரசி
மணிமன்ற வாணன்.

என்பார்.

நம்பியும் செல்வராயனும் ஆசிரியப்பணி கொண்டவர்; நல்லான் சிறித்தவக்குருவர்; இவர்கள் வெவ்வேறு இடங்களில் பணி கொண்டிருந் தனர். மங்கையும் மணியும் உடன் இருந்தனர். இன்மை வரும் போது நால்வர் என்ன? நாற்பதின்மர் என்ன?

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது"

என்பது வள்ளுவம்

துணைவியார் மறைவு

27-10-1963 ஆம் நாள் பாவாணர் வாழ்வில் பேரிடியாக அமைந்து விட்ட நாள். அவர் கூறியவாறு ஒருயிரும் ஈருடலுமாக இருந்த உடல்கள் இரண்டனுள் நேசமணியார் உடல் வீழ்ந்து விட்ட நாள்! பொற்றாலி யோடு எவையும் போம் என்பதைப் புலப்படுத்திவிட்ட நாள். காட்டுப் பாடிக்கு வந்த ஈராண்டளவிலே ஏற்பட்டுவிட்ட கொடுமை இது.

"என் மனைவியார் அருத்தோபர் 27ஆம் பக்கல் இறந்தார். அன்று மருத்துவச் சாலைக்கு வாடகை இயங்கியில் அனுப்ப என்னிடம் 10 உருபா இல்லாதிருந்தது; அனுப்பியிருந்தால் பிழைத்திருப்பார்" என்று திரு.வி.பொ. பழனிவேலனார்க்குப் பாவாணர் எழுதிய எழுத்தைப் பார்க்கும் எவரும் அக்கொடுமையை உணர்ந்து புண்படாமல் இரார். மணமாகாத என் இரு மக்கட்காகவே உடல் தாங்கிக் கொண்டிருக் கிறேன் என்று திரு.வி.அ. கருணையார்க்கும், என் மனைவியார் இறந்ததை எண்ணி வருந்தியதால் இன்று நெஞ்சாங்குலை ஈளைநோய் என்னைத் தாக்கியது என்று திரு. மி. மு. சின்னாண்டார்க்கும் எழுதிய

கடிதங்களின் வழியே அந்நாள் பாவாணர் உளநிலையும் உடல் நிலையும் தெளிவாம்.

> "பின்னாளிலும் இத்துயரை எண்ணி,
> புற்று நோயினால் போனாள் மனை"

எனப்பாடுகிறார்.

இதழ்களும் கழகங்களும்

புலவர்கள் ஒருசாராரால் மட்டும் அறியப்பட்டிருந்த பாவாணரைப் பாவேந்தர் குயில் பொதுமக்களும் இளைஞரும் அறியத் தூண்டிற்று. 1963ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் முதல் பாவாணரைப் பரப்பும் பணியைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தென்மொழி எடுத்துக் கொண்டது. பாவாணர் தென்மொழியின் சிறப்பாசிரியரானார். அதனால் அவரைப் பற்றிய செய்திகளும் அவர்தம் படைப்புகளும் உணர்வுடன் வெளிப்பட்டன. 17-5-64இல் துறையூரில் புலவர் சேந்தமாங்குடியார் பாவாணர் தலைமையில் தனித்தமிழ்க் கழகம் என ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். 6-10-68இல் திருச்சியில் உலகத் தமிழ்க் கழகம் உருவாக்கியது. அதில் தனித்தமிழ்க் கழகம் (உ.த.க.வுடன்) ஒன்றிவிட்டது. பாவாணர் புலமை நலம் தமிழ் உலகுக்குப் பயன்படும் வண்ணம் நூல் வெளியீட்டுக் குழுக்கள் 1966 முதல் கிளர்ந்தன. இவ்வமைப்புகளெல்லாம் பாவாணர்க்கு உதவுதல் என்னும் பெயரால் தமிழ் மொழிக்கு உதவிய உதவுதல்கள் ஆகும்.

விழாக்கள்

பாவாணர் தனி ஒருவரல்லர்; அவர் ஓர் இயக்கம் என்பதை மெய்ப்பித்ததும் மெய்ப்பித்து வருவதும் உலகத் தமிழ்க் கழகம் என்னும் உ.த.க. ஆகும். எடுத்த எடுப்பிலேயே பன்னூறு கிளைகளைக் கொண்ட பேரால மரமெனக்கிளர்ந்தது. அரசியல் பெருமா நாடென்று கருதுமாறு ஆட்டை விழாக்களை எடுத்தது. அது எடுத்த ஆட்டை விழாக்களில் பறம்புக் குடியில் எடுத்த முதலாம் ஆட்டை விழாவும் (28-12-1969), தஞ்சையில் எடுத்த தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு விழாவும் (31-12-72) சுட்டத்தக்க பெருமை வாய்ந்தவை.

நூல் வெளியீட்டுக் குழுக்கள்

பாவாணர் நூல்கள் பைந்தமிழ்ச் சொத்து, அவற்றைப் பதிப் பித்துத் தமிழுலகில் பரப்புதல் தம் கடன் என உணர்ந்தோரால் ஆங் காங்கு நூல் வெளியீட்டுக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றின் பொருளுதவியால், பாவாணர் எழுதி வெளிவராமல் இருந்த நூல்கள் வெளிவந்தன. அவற்றின் விற்பனைத் தொகை பாவாணர்க்கு உதவியாய் அமைந்தது, திருச்சி மாவட்டப் பெரம்பலூர் வட்டச் செட்டிகுளம் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் உதவியால் 'பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்' என்னும் நூல் (1966) வெளிவந்தது.

முக்கூடல் அரிராம் சேட்டு நினைவுக்குழு உதவியால் 'The Primary Classical Language of the World' என்னும் ஆங்கில நூல் வெளி வந்தது (1966). திருச்சி மாவட்டப் பாவாணர் நூல் வெளியீட்டுக்குழுவின் செங்கை (செங்காட்டூர்)ப் பகுதியின் கொடையால் தமிழ் வரலாறும் வடமொழி வரலாறும் வெளிவந்தன (1967). புத்தனாம் பட்டி பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவின் உதவிகொண்டு திருக்குறள் தமிழ் மரபுரை வெளிவருமென விழாவில் பாவாணர் கூறினார் (1968). புன்செய்ப் புளியம் பட்டி மறைமலையடிகள் மன்றப் பாவாணர் நூல் வெளியீட்டுக் குழுவினர் தண்டிய உதவியால் 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?' என்னும் நூல் (1968) வெளிவந்தது.

மதுரை, பாவாணர் மணிவிழாக் குழு நன்கொடையால் தமிழர் வரலாறு வெளிவந்தது. (1972).

சிங்கபுரி முல்லைவாண முல்லைச் செல்வியர் முதலியவர்கள் கொடையால் தமிழர்மதம் வெளியாயிற்று. (1972).

நெய்வேலி உலகத் தமிழ்க் கழகக் கொடையால் 'மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை' வெளிவந்தது (1978).

சிங்கபுரி கோவலங்கண்ணனார் தனித்து வழங்கிய கொடையால் தமிழ் இலக்கிய வரலாறு வெளிவந்தது (1979).

தனிப்பட்ட அமைப்புகளும் தனிப்பட்ட அன்பர்களும் தம் நூல் வெளியீட்டுக்கு உதவும் வள்ளன்மையைப் போற்றிய பாவாணர் "தமிழக அரசினரும் பல்கலைக் கழகங்களும் செய்ய வேண்டிய பணி, தனிப்பட்ட தமிழன்பர் வாயிலாக நிறைவேற வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம் போலும்" என வியந்து எழுதினார்.

தென்மொழித் திட்டம்

நூல் வெளியீட்டுக் குழுவினர் உதவியால் மட்டும் வெளியிடுதற்கு இயலாத ஒருபெரும் பணி செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி எழுதுவித்து வெளியிடலாகும். அதற்கு அரசின் உதவி வாயாத நிலையில், தென்மொழி வகுத்துத் தந்த, 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம் ஒன்று வெளிப்பட்டது. அதனை 'வல்லான் வகுத்தவழி' எனப் பாவாணர் பாராட்டினார்.

சுருங்கல் திட்டம்

திங்களுக்குப் பத்து உருபா தரும் உறுப்பினர் இருநூற்றுவரைக் கொண்டது இத்திட்டம். திங்களுக்கு வரும் ஈராயிர உருபாவில் ஓரா யிரம், பாவாணர் நூலாக்கத் திட்டத்திற்கும் மற்றோராயிரம் நூல் அச்சீட்டுத் திட்டத்திற்கும் எனப் பகுத்துக் கொள்ளப்பட்டது.

தொடக்கம் நிறைவாக இருப்பினும் வரவர உதவுவார் எண் ணிக்கை சுருங்கலாயிற்று. அரசின் உதவி வேண்டும் என்னும் நிலையும் உண்டா யிற்று இந்நிலையில் தவத்திரு. குன்றக்குடி அடிகள் முதலிய

சிலர் தூண்டுதலால் பாவாணரை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப் பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தமிழ்நாட்டு அரசால் உருவாக்கப் பட்டது. (8-5-74) எனினும் அலுவலக வாய்ப்போ, துணையாளர்கள் அமர்த்த வாய்ப்போ அலுவலக ஏந்துகளோ போற்றப் படவில்லை. பாவாணர் வாழ்வுக்கு அமைந்திருந்த பொருள் முட்டுப் பாட்டை நீக்கிய அளவிலேயே இயக்ககச் செயல் தொடர்ந்தது. அவர்க்கு வேண்டும் கருவி நூல்கள் அவர்தம் திங்கள் வருவாயில் இருந்து செலவிட்டே வாங்கும் இடர், காலமெல்லாம் இருந்தது.

"என் பணிக்கு வேண்டிய இரு துணையாளரை இன்னும் அமர்த்த வில்லை. ஓர் இயங்கியும் தொலை பேசியும் வேண்டுமென்று எத்தனை முறை சொல்லியும் செவிசாய்க்கவில்லை. முந்திய ஆட்சியும் இங்ஙனமே. என் சொந்த நூலகத்தைக் கொண்டே பணி நடந்து வருகின்றது. சம்பளத்தில் பாதி பொத்தகத்திற்குச் செலவாகிறது" என 5-1-79இல் கூடப் பாவாணர் எழுதினார்.

பன்னிரு மடலங்களாகக் கொணர விரும்பியது அது அகர முதல் ஆசைமொழி என்பது ஈறாகவே பாவாணரால் எழுதப்பட்டது. அவர் காலத்திலேயே அதனை அச்சிடுதற்குத் தக்க வாய்ப்புகள் செய்துதராமல் அவர் காலத்திற்குப் பின்னரே அகரப் பகுதியாகிய முதன் மடலம் வெளிவந்தது (1985).

விருது

பாவாணர்க்குப் பல்வேறு காலங்களில் பல்வேறு அமைப்புகள் விழா எடுத்தும் விருது வழங்கியும் சிறப்பித்தன.

சேலம் தமிழ்ப் பேரவை, 'திராவிட மொழிநூல் ஞாயிறு' என்னும் பட்டமும் வெள்ளித் தட்டமும் வழங்கிப் பாராட்டியது (1955). இவ் விழாத் தலைமை ஏற்றவர் தந்தை பெரியார் ஈ.வே. இராமசாமி.

பாவாணரின் ஆட்சித் துறைக் கலைச் சொல்லாக்க நலம் பாராட்டித் தமிழ்நாட்டு அரகச் சார்பில் ஆளுநரால் பாராட்டு வழங்கப்பட்டது (1960).

மதுரைத் தமிழ்க் காப்புக்கழகம் 'தமிழ்ப் பெருங்காவலர்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டெடுத்தது (12-2-64).

மதுரை பாவாணர் மணிவிழாக் குழுவின் சார்பில் 8-9-67 இல் மணிவிழா எடுக்கப்பட்டது. அவ்விழாவில் 'மொழி நூல் மூதறிஞர்' என்னும் பட்டம் வழங்கியும் பொற்கிழியளித்தும் சிறப்பிக்கப்பட்டது.

பறம்புமலைப் பாரிவிழாவில் 'செந்தமிழ் ஞாயிறு' என்னும் பட்டம் சூட்டிப்பாராட்டு வழங்கப்பட்டது (5-5-71). தமிழ்நாட்டு அரசு 15-1-79ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளில் வள்ளுவர் கோட்டத்தில் பெருவிழா வெடுத்துச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது.

நிறைவு

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடந்தது. அதன் வரவேற்புக் குழு உறுப்பினருள் பாவாணரும் ஒருவர். மாநாட்டுத் தொடக்கம் 4-1-81ஆம் நாள். பாவாணர் 5-1-81ஆம் நாள் பொது நிலைக் கருத்தரங்கில் 'மாந்தன் தோற்றமும் தமிழர்மரபும்' என்பது பற்றிய பேருரையாற்றினார். அலைமோதும் மக்கள் தலைகளெல்லாம் பழங் குமரிப் பரப்பும் குமரிக் கடலுமாகத் தோன்றியவோ என்னவோ ! பாவாணர் கடல்மடை திறந்த வெள்ளமென -பொங்குமா கடலென - ஊழியிறுதியிலாம் ஆழிப்பேரலை யெனப் பொழிந்தார் ! அப்பொழிவு உடல் நலங்குன்றியிருந்த அவர் நெஞ்சாங்குலையைத் தாக்கி விட்டது ! மதுரை அரசினர் இராசாசி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிறிய மருத்துவம் செய்தும் காக்கமுடியா வண்ணம் 14-1-81இல் மீண்டும் ஒரு தாக்கம் ஏற்பட்டது. 15-1-81 இரவு மொழிஞாயிறு பாவாணரின் பேச்சொடும் மூச்சும் ஒருங்கே ஒடுங்கிவிட்டன. வாராது வந்து மாமணியைத் தமிழுலகு இழந்தது ! 16-1-81இல் பாவாணர் உடலம் சென்னைக்கு அரசுச் சார்பில் கொண்டு செல்லப்பட்டு அவர் குடியிருந்த கருணாநிதி நகர் இல்லத்தில் இறுதிச் சடங்குக்கு வைக்கப்பட்டது. அரசுச் சிறப்புடன் அறிஞர்கள் இரங்கலுடன் தமிழ் உணர்வாளர்களின் அவலத்துடன் 17-1-81இல் கீழ்பாக்கம் கல்லறையில் பாவாணர் உடலம் அடக்கம் செய்யப் பட்டது.

பல்வேறு இடங்களில் பல்வேறு அமைப்புகளின் சார்பில் இரங்கல் கூட்டங்கள் நிகழ்ந்தன. தமிழ் மாநிலம் கடந்த அயல் மாநிலங் களிலும் கடல்கடந்த நாடுகளிலும் இரங்கல் கூட்டங்கள் நிகழ்ந்தன. பல்வேறு இதழ்கள் இரங்கல் செய்திகளைத் தாங்கிப் பாவாணர் படத் துடன் வெளிவந்தன. நினைவகங்களும் ஆங்காங்குத் தோன்றின.

வாழ்வு ஆய்வு

வரலாற்று மூலங்கள்

பாவாணர் வரலாற்றுக் குறிப்புகளாகச் சுருங்கிய அளவில் - தமிழில் நான்கும் ஆங்கிலத்தில் ஒன்றுமாக - ஐந்து கிடைத்துள. அவை, பணியமர்த்தம் வேண்டிய விண்ணப்ப இணைப்புக்காகவும், புலவர் வரலாற்றுத் தொகுப்புக்காகவும், தம் குடிப்பிறப்பை மெய்ப்பிப்பதற் காகவும் எழுதப்பட்டவை. இறுதியது ஒன்றும் விரிவானது. பிற குறிப்புகள் எவற்றிலும், வேறு எழுத்துகளிலும் கிடையாத குறிப்புகள் சிலவற்றைத் தன்னகத்துக் கொண்டது.

1931 முதல் 1963 வரை கிடைத்துள்ள கடிதங்கள் எல்லாம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ.சு. அவர்கள் வழியாகக் கிடைத்தவை. ஏறத்தாழ 1400 எண்ணிக்கை யவை. 1963 முதல் பாவாணர் மற்றையோர்க்கு எழுதிய கடிதங்களும் கிடைத்

துள்ளன. இவையே பெரும்பாலும் பாவாணர் வரலாற்றுச் சான்றுகளாய் அமைந்துள்ளன.

பிறப்பிடமும் குடியும்

பாவாணர் செந்தமிழ் நாட்டு நெல்லை மாவட்டத்தில் பிறந்தமை தமிழின் கொழுமை வளமை பரப்பு இன்னவற்றை இயல்பாக அறிந்து போற்றிக் கொள்வதற்கு வாய்த்த பேறாகும். இவ்வாற்றான், பிறந்த மண்ணின் பேறு பிறப்பார் பேறாகவும் வாய்த்தல் வரலாற்றுத் தெளிவு. மேலும், தமிழ்ப் பெரும் முதுகுடியிலே பிறந்தமையும் தனிப்பெரும் வாய்ப்பாயிற்று. பிறந்தநாள் முதல் செவியாரக் கேட்டதும், வாயாரமிழற்றியதும், நெஞ்சார நிறைந்ததும் தமிழேயாக அமையும் இயற்கைக் கொடை அஃதாயிற்றாம்.

சமயம்

ஞான முத்தனார் அவர் பெற்றோர்க்கு ஒரே ஒரு மகவாகப் பிறந்தவர். பிறந்த சின்னாள்களிலேயே பெற்றோரையும் இழந்தவர். பிள்ளைக்குப் பெயர் சூட்டு முன்னரே பிரிந்தமையால், வளர்ப்புத் தந்தையே குழந்தையின் தந்தைபெயரும் விளங்கப் பெயர் சூட்டினார். அக்குழந்தையின் உற்றார் உறவினர் எவரும் முன் வந்து பேணினர் அல்லர் என்பதால், பெரு நலத்தோக்கசே வளர்ப்புத் தந்தையாக நேர்ந்தது. அவர் கொண்ட சமயமே குழந்தையின் சமயமாயிற்று! பேணி வளர்க்காத, போற்றிக் காவாத, கல்வி தந்து உதவாத, பிறவிச் சமயம் மாற்றமடைகின்ற நிலைமை ஈது! உதவிக்குக் கைந்நீட்டாத ஒருவர் - கட்டாயம் உதவி வேண்டும் போதும் கைந்நீட்டாத ஒருவர் - கை இருக்கும் உறவினராவரா? "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்னும் பழமொழி மெய்யாயிற்று.

சான்றோர் ஒருவர்

தோக்கசு உலகியல் தெளிந்தவர் ; உணர்வியலும் உணர்ந்தவர் ; அதனால் ஞானமுத்தனார் தம் காலிலேயே நிற்கும் வகையில் கல்விதந்து ஆசிரியரும் ஆக்கினார். அவர் சுருங்கிய உளத்தர் எனின், 'எடுபிடி' யாகவே வைத்திருக்கலாம். காவற்கார வழிமுறையையே கொடுத்திருக்கலாம். தடுப்பார் எவர்? சிந்திக்கும் கூர்ப்பையே மழுக்கி அதுவே தலைவிதி என்னும் வழிவழி எண்ணத்தை மாற்றா திருந்தால் அவரை எவர் தடுக்க முடியும்? 'காட்டுக் கம்பெடுத்து மாட்டை ஓட்டுபவனுக்குக் கல்வி எதற்கு' என்று கேட்டார் இலரா?

புகலிலியாம் ஞானமுகத்தருக்கு, மற்றொரு புகலிலியையோ, வேறு குடிவழியையோ கருதி மணப்பெண் தேடியிருக்கலாம்! ஆனால், ஞான முத்தனாரின் உறவைத் தேடிக் கண்டே மணப்பித்திருக்கிறார் தோக்கசு! அது சீர்படாமையாலேயே, 'ஆசியர்க்கு ஆசிரியை' துணை

யாய் அமையின் ஒருதொழில் உரிமையும் ஓரிடத்துப்பணி உரிமையும் வாய்த்து, வாழ்வும் வளமும் சிறக்குமெனத் திட்டப்படுத்தியே இரண்டாம் மணத்தை நிகழ்த்தியிருக்கிறார், இவை, அயல் நாட்டினர் எனினும் அயன்மொழியினர் எனினும் அயற்சமயத்தர் எனினும் அவர் எப்படி 'ஊடும் பாவுமாய்' அமைந்து மாந்த நேயத்தொடு கடனாற்றினர் என்பதற்குச் சான்றுகள்.

கடைக்குட்டி

ஒரே ஒருவராய்ப் பிறந்த ஞானமுத்தரின் பத்தாம் குழந்தை - கடைக்குட்டிக் குழந்தை பாவாணர். உடல் வலிமை குன்றி மூளை வலிமை பெருகிய காலமாம் முதுமையில் பிறக்கும் குழந்தை மூளைக் கூர்ப்புமிக்கதாக விளங்குதல் உலகறிந்த உண்மை. காந்தியடிகளும் தாகூரும் கடைசிப்பிள்ளைகள்! காந்தி அடிகள் காபா காந்தியின் நான்காம் மனைவியின் கடைசிப்பிள்ளை! தேவேந்திர நாததாகூரின் பதினான்காம் குழந்தையாக - கடைசி மகனாகப் பிறந்தவர் தாகூர்! விதிவிலக்குகள் இருக்கலாம்! ஆனால் கடைசிக் குழந்தையின் மூளைக் கூர்ப்பு, உலகோர் அறிந்ததாகலின், கதைகளிலும் அக்குழந்தையின் திறமே பளிச்சிடப் புனைதல் உலகளாவியது!

வறுமை

குடும்பமோ பெரியது ; பாவாணர் ஐந்தாம் அகவையின் போதே பெற்றோரை இழந்து விடுகிறார். "கொடிது கொடிது வறுமை கொடிது ; அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்பதற்கு இலக்காகி விடுகின்றது பாவாணர் வாழ்க்கை.

தொடக்கப் பள்ளிப் படிப்பே பிறர் உதவியை நாடி இயல்வதாயிற்று. உயர்நிலைக் கல்வி, கடன் பெற்றே பயில வேண்டியதாயிற்று ! இத்தகு வறுமைச் சூழல் உறுதியில்லா உளத்தரை வாட்டாமல் விடுமோ? ஆனால் பாவாணர் இடத்து அவ்வறுமை என்ன ஆயிற்று? தோல்வியே கண்டது! இல்லாக்கால், எருதந்துறையில் பணி யாற்றுதற்குத் தக்க ஆங்கிலத் தகுதியை உண்டாக்கிக் கொள்ள ஊக்கி இருக்குமோ? "இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர்" என்பதற்குச் சான்றானார் பாவாணர்.

தம் எழுபதாம் அகவை முற்றவும், 'இடும்பைக்கு இடும்பை' படுத்த வாழ்வாகவே அமையப் பெற்றார். அரசின் அகரமுதலி இயக்கக இயக்குநர் நிலை எய்திய பின்னரே, "இன்றை ஊணுடை உறைவுக்கு என்ன செய்வோம்?" என்னும் இக்கட்டு இலராக வாழ்ந்தார். எதிர்கால வாழ்வுக்குப் பயிற்சிக் களம் போலவே இளமையில் பெற்ற இழப்பும் வறுமையும் அமைந்தன.

மற்றொரு சான்றோர்

கல்விக்காகப் பெற்ற கடனைக் கற்பித்தல் வகையால் ஈடு செய்ய எத்துணைப் பேர்க்கு வாய்க்கும்? அது பேறாக மட்டுமா விளங்குகின்றது? பாவாணர் சால்பைப் படம்பிடித்துக் காட்டுவதன்றோ அது ! 'தோக்க'சே போல 'யங்' துரைமகனாரும் எவ்வளவு பாராட்டுக்கு உரியர்!

> "சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!
> ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
> சான்றோரும் உண்டு கொல்! சான்றோரும் உண்டுகொல்."

என்று சிலம்புக் கண்ணகி, மாநகர் மதுரைத் தெருக்களில் ஓலமிட்டுரைத்த மொழிக்கு 'இதோ உள்ளேம்' எனத் தலைப்பட்டார் எத்துணைய? 'தோக்கசு'ம் 'யங்'கும் அச்சான்றோர் வரிசையர் ஆகின்றமை பாவாணர் வரலாற்றால் தெளிவாகின்றது.

சான்றிதழ்

முறையான பாடத்திட்டம் வகுத்து, முறையான பயிற்சி தந்து, முறையாகத் தேர்வு நடாத்தி முறையாகத் தேர்ச்சி முடிவு செய்வதாகக் கூறப்படும் இந்நாளில் 'பட்டம் பெறுதல்' 'என்பதன்றிப்' பட்டம் வாங்குதல் என்னும் முறைகேடு நடைமுறைபோல் இருப்பதை அறிவார், அந்நாளில் ஒரு புலவர் 'இவர் தக்கார்' என்று கூறுவதைக் கொண்டு வேலைதந்ததை எண்ணித் திகைப்படைதல் உறுதி. ஆனால், அந்நாள் ஒரு நூலுக்குச் சாற்றுக்கவி தருவதாயினும் தகுதியின்றேல் தருவது இல்லை ! ஒரு நூலுக்கு மதிப்புரை தருவதற்கும் தக்க தகுதி இருந்தாலன்றித் தருவது இல்லை ! மறைமலையடிகளாரிடம் தகுதிச்சான்று கேட்டோர் பலர் ; நூல் மதிப்புரை வேண்டினோரும் பலர். ஆனால், அவர் தம் புலமைத் தலைக்கோல் கொண்டு அளந்தறிந்தன்றித் தகவுரை வழங்கினார் அல்லர்.

தமிழாசிரியப் பணியில் புக விரும்பினாரும் அழுத்தமான இலக்கண இலக்கியப் புலமை பெற்றிருந்தால் அன்றிப் பணி கிடைத்தால் போதும்' என்பதற்காக முயன்றார் அல்லர்; வேலைக்கு அமர்த்து முன்னர் எவ் வெவ்வாறெல்லாம் வினாக்கள் எழுப்பித் தெளிந்து அமர்த்தப்பட்டனர் என்பதைப் பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதர், முகவை இராமாநுசக் கவிராயர் இன்னோர் வரலாற்றை அறிவார் நன்கு அறிவர்.

பாவாணர், மறைமலையடிகளாரின் சான்றிதழ் விரும்பினார். அடிகளார் பாவாணரை முழுதுற ஆராயாமல் சான்று வழங்கினார் அல்லர்.

7-5-1945ஆம் நாள், நாட்குறிப்பில், "சேலம் நகராட்சிக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் திரு. தேவநேயப் பாவாணர் சில தமிழ்ச் சொற்களின் பிறப்புக் குறித்து ஆழ்மான உரையாற்றினார். அவர்தம் உரையில்

பொதிந்திருந்த ஆழ்ந்த அறிவும் நகைச்சுவையும் கேட்போரைப் பிணித்தன" என எழுதியுள்ளார்.

19-4-1946 நாட்குறிப்பில், "பண்டிதர் தேவநேயப் பாவாணர் வந்தார். தம் தமிழ்ப் புலமைக்குச் சான்றிதழ் வழங்குமாறு வேண்டினார். கொடுக்க இணங்கினேன். தம்முடைய நூல்களான 'திரவிடத்தாய்' 'கட்டுரை வரைவியல்', 'சுட்டு விளக்கம்' ஆகியன எனக்குக் கொடுத்தார்" என எழுதியுள்ளார்.

பாவாணர் தமக்குச் சான்றிதழ் வேண்டிக் கொண்ட அளவில் அமையாமல் தம் தகுதியை ஆய்ந்து கொள்வதற்குத் தக்க நூற் கருவி களையும் அடிகளாரிடத்து வழங்கியமை 'இடுநூல்' தந்து பட்டம் பெறுவதொப்பக் கருதும் நடைமுறையேயாம்.

பணிநிலை கருதிய அளவில் எனின் மாசிலாமணியார் சான்றி தழே சாலும்! அது கொண்டே வேலையில் சேர்ந்து விட்டாரே ! பின்னர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வும், நெல்லைப் புலவர் தேர்வும், சென்னை வித்துவான் தேர்வும் பெற்ற பயன், புலமைச் சான்றாவதன்றிப், பொருணிலைப் பதவியேற்றம் கருதியதன்றாம். 'விசாரத்து' என்னும் இந்தித் தேர்வு பெற்றதும் அன்னதே ! கீழைக்கலைத் தேர்வு (B.O.L.) கலைமுதியர் தேர்வு என்பன கல்லூரிப் பணிக்கு உதவுமெனக் கொண்டு எழுதியவையாம்.

இத்தேர்வுகளை வென்ற அளவில் பாவாணர் மொழிக்கல்வி அமையவில்லை. இருபத்து மூன்று மொழிகளைக் கற்றார். அதனினும் மும்மடங்கு மொழிகளில் தமிழ் வேர்ச்சொற்களுக்கு ஒப்பு விளக்கம் காட்டினார். இயல்பான மூளைக் கூர்ப்பும் மொழிகற்கும் வேட்கையும் இருப்பின் ஒருவர் ஐம்பது மொழிகளை எளிமையாகக் கற்றுக் கொள்ள முடியும் என்று கூறும் அவர் கூற்று, அவர்தம் பட்டறிவினின்று கிளர்ந்தது என உறுதி செய்யலாம்.

தமிழ்த்துறை

ஒருவர் பயின்ற துறை ஒன்று : பதிந்த துறை மற்றொன்று ; ஒருவர் ஆய்ந்த துறை ஒன்று : ஆழ்ந்த துறை இன்னொன்று ; ஒருவர் இசைந்த துறை ஒன்று; ஈடுபாடு கொண்டதுறை பிறிதொன்று - என்பவை எல்லாம் வரலாற்றாலும் வாழ்வாலும் கண்கூடாகக் காணக் கூடியவை.

பொறியர் பா. வே. மாணிக்கர் தமிழ் ஒலியியல் நுணுக்க ஆய்விலே தோய்ந்தார். நடுவர் சி. வை. தாமோதரனாரும் காவல் துறை ச. பவானந்தரும் பதிப்புத் துறையிலே பதிந்தனர். காவல்துறை சோம சுந்தரர் தொல்காப்பியக் கடலாகத் திகழ்ந்தார். சட்டத் துறையிலே பட்டம் பெற்ற வ. உ. சிதம்பரனாரும், தமிழ்க் கா. சு. வும், இரா. பி. சேதுவும் வையாபுரியாரும், நாவலர் பாரதியாரும் பிறரும் தமிழ்த் துறையைத் தழுவினர். சமயப் பரப்புதலுக்கு வந்த கால்டுவெலார், போப்பு, வீரமாமுனிவர் இன்னோர் தமிழாளி யாகத் திகழ்ந்தனர்.

இவ்வாறே ஆங்கிலப் புலமையில் திறவோராய்த் திகழ விரும்பிய பாவாணர் தமிழ்மலை பாராட்டும் தனிமலையாகத் திகழ்ந் தார். அவருக்கே எதிர்பாரா வியப்புப் போல் தோன்றியமையாலேயே, "நான் அறியாவாறு இறைவன் என் மனப்பாங்கை மாற்றியதனாலும்" தாம் தமிழாசிரியப் பணி ஏற்றதாகக் கூறுகிறார். பாவாணர் வரவால் தமிழ் பெற்ற பேற்றை உணர்ந்தே.

> "வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கில்
> படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
> அந்தமிழே ஆதியெனும் தேவ நேயர்தாம்
> எந்தமிழர் எவ்வார்க்கும் வேந்து"

எனப் பாவேந்தர் பாடினார்.

மக்கட் பெருக்கக் கருத்து

பத்தாம் மகவாகப் பிறந்தவர் பாவாணர் ; பலமக்களைப் பெற்ற வரும் பாவாணர் ; தந்தையின் மக்கட்பேற்றுப் பெருக்கமும் தம் மக்கட் பேற்றுப் பெருக்கமும் நீங்கா வறுமையும் தம் நெஞ்சை விட்டு அகலா திருந்தமை '**மண்ணில் விண்**' என்னும் நூலில் நன்கு விளக்குமாகின்றது

"கூட்டுடமைக்குப் பெருந்தடையாயிருப்பது மட்டிற்கு மிஞ்சிய மக்கட் பெருக்கம். நம் கண்ணெதிரிலேயே தனிப்பட்ட ஓர் ஆடவனும் ஒரு பெண்டும் கூடிச் சிறுகுடும்பந் தோன்றுவதையும், சிறுகுடும்பம் பெருங் குடும்பமாகவும், பெருங்குடும்பம் கூட்டுக்குடும்பமாகவும், கூட்டுக் குடும்பம் ஒரு குலக்கிளையாகவும், பெருகுவதையும் ; நம் காலத்திலேயே, ஒரு சில வீடுகள் சேர்ந்து சிற்றூர் தோன்றுவதையும், சிற்றூர் பேரூராக வும், பேரூர் நகரமாகவும், நகர் மாநகர் அல்லது நகரமாகவும், நகரம் மாநகரமாகவும் விரிவடைவதையும், காண்கிறோம்" எனத் தொடங்கி மக்கட் பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளைப் பலபட விரித்துரைத்து (55-65) மணவாமை போற்றல், மண அகவை உயர்த்தம், மண ஆண்டு குறிப்பு, பிள்ளைப்பேறு இல்லாதவரைப் பாராட்டல், இருபிள்ளை வரம்பும் கட்டாய மலடாக்கமும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திணைக் களம் (Dept) தோற்றுவித்தல், கல்லூரிக் கல்விப் பாடத் திட்டத்தில் மக்களியல் (Demography) சேர்த்தல், செய்தியறிவிப்பு வாயில்களில் குடும்பக் கட்டுப்பாட்டை விளக்கல், மக்கட் குறைப்புத் திட்ட ஈகியர்க்கு (தியாகிகட்கு)ச் சலுகை காட்டல், மக்கட் பெருக்கத் தீமையும் குடும்பக் கட்டுப்பாட்டு நன்மையும் பற்றிச் சிறந்த புதினம் (Novel) எழுதுவார்க்குப் பரிசளிப்பு, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றியாக நிறை வேற்றும் ஊராட்சி மன்றத் தலைவரை ஊக்குவிப்பு, இளைஞர்க்கும் மணவாத மாணவர்க்கும் காதல் திரைப்படங்களை விலக்கிக் கல்வித் திரைப் படங்களைக் காட்டல் எனப் பன்னிரு குறுந்தலைப்புகளில் விளக்குகின்றார் பாவாணர். அவர்தம் நுண்ணிய நூலறிவாலும் உண்மை யறிவாலும் இவற்றைக் கூற வல்லார் எனினும் பட்டறிவும் சாலத் தூண்டியமையே அத்துறை ஆய்வாளரும் கண்டறியாக் கடுமையில்

"நோயின் கடுமைக்குத் தக்கவாறு மருந்தின் கடுமையும் இருக்கும். மருந்தின் கடுமை நோக்கி அதை விலக்குபவன் நோயை வளர்த்து மாய்பவனே யாவன்" என்று எச்சரிக்கத் தூண்டுகின்றதெனலாம்.

பணி நீக்கமும் பணியாக்கமும்

பாவாணர் பல நிலைகளிலுமாக 42 ஆண்டுகள் பணியாற்றி யிருக்கிறார். ஓரிடம் ஈரிடம் அல்ல. பல இடங்கள். ஓராண்டு முதல் பன்னீராண்டுகள் அளவு வரை ஓரிடத்துப் பணி அமைந்துள்ளது. அப் பணிகளும் இடமாறுதல்களும் எவரையும் உணர்ந்து பார்க்க வைக்க வில்லை. 'பணி செய்வார்க்கு மாறுதல் இயற்கை. மாற்றுதலும் இயற்கை' என்றே கொள்ளப்பட்டன. ஆனால், ஆங்கெல்லாம் பாவணரே விலகிச் சென்றாரே அல்லாமல் விலக்கப்பட்டார் அல்லர்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் ஒப்பந்தப் படியான ஐந்தாண்டுகள் பாவாணர் பணியிலே இருக்கவே செய்தார். மேல் நீட்டிப்பு இல்லை என்பதும், உண்டு என்பதும் பணிநிலையில் அமர்த்தி னாரையும் அமர்ந்தாரையும் பொறுத்தது. ஆனால், அண்ணாமலையில் பாவாணரைப் பணி செய்யவிடவில்லை; செய்த பணியையும் ஒப்ப வில்லை; ஓராற்றான் முடித்து வைக்கவும் கால நீட்டிப்புத் தரவில்லை ! இவ்வெல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்க் காப்புக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் என்றே தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் நோக்குக்கு மாறாகத் துணைக் கண்காணகரும், தமிழ்த் துறையினரும் தமிழ்க் கேடராக அமைந்ததும், தமிழ் எழுதப் படிக்க அறியாத வங்கத்து வடமொழிப் பேராசிரியர் சட்டர்சியைப் பாவாணர் செய்யும் பணியை மேற்பார்க்கும் மேலாண்மைக் குழுவின் தலைவராக அமர்த்தியதும், அவர் தாம் ஆங்கில வழியாகப் பயின்றதும் தமிழைப்பற்றித் தவறாகக் கூறப்பட்டிருந்ததும் ஆகிய கருத்துகளையே அளவு கோலாகக் கொண்டு பாவாணர் ஆய்வைக் குறை கூறியதும், தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் வாய்மூடிக் கிடந்தும் ஒழியாமல் சட்டர்சியைச் சார்ந்து நின்றதும் பாவாணர்க்குக் கொதிப்பை உண்டாக்கின ! இஃதியற்கை தானே !

"எனக்கு வயிறும் உண்டு; மனைவி மக்களும் உண்டு ; இவற்றுக்கு மேல் மானமும் உண்டு" என்னும் பாவாணர் மடங்கிக் கிடக்க முடியுமா? "தமிழைப் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்ல ஏன் அஞ்ச வேண் டும்? இங்ஙனம் எத்தனை நாளைக்கு அஞ்சியஞ்சி அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் தமிழன் மூழ்கிக் கிடப்பது? ஆரியச் சார்பினர் கருங்காக்கையை வெண்காக்கை என்று எத்தனை துணிச்சலோடும் இடாரிக்கத்தோடும் கூறி வருகின்றனர்" என்று கூறும் பாவாணர் உணர்வு வீண் போகவில்லை ! "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்னும் தொல்லாசிரியர் உரைப்படி, பாவாணர் உணர்வு பாவேந்தரை உருக்கி- '!! உலுக்கியது ! அண்ணா மலைப் பல்கலைக் கழகம் என்னும் தலைப்பில் குயிலில் நான்கு வாரங்கள் கண்டித்து எழுதினார். அவ்

வெழுத்துகளே தமிழார்வலர்களிடத்துப் பாவாணர் செய்தியைக் கொண்டு சேர்த்தன. பாவாணரின் நாற்பது ஆண்டுப் பணிக்காலம் ஏற்படுத்தாத தமிழுணர்வைக் குயில் நான்கு வாரங்களில் தமிழார்வலர்க ளிடத்தில் உண்டாக்கிவிட்டது! அவ்வுணர்வே பல்கலைக்கழகம் செய்யத் தவறியதையும் அரசு செய்யாததையும் 'யாமே செய்வோம்' என இயக்கமாகவும், நூல் வெளியீட்டுக் குழுக்களாகவும், கொடைமை யாளர்களாகவும் கிளர்தற்கு வழி வகுத்தது. அவ்வகுப்பே, பாவாணரைத் தனிமாந்தராக விட்டு வைக்காமல் இயக்கமாக மாற்றியது! இவ் வகையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பங்கு மிகப் பெரிதாகும். குயில் சுட்டிக்காட்டி அமைந்த செய்தியை மின்வெட்டாக்கிப் பளிச்சிட்டுக் காட்டியது தென்மொழியே; உலகத் தமிழ்க் கழகத்தின் உயிர்ப்பாற்ற லாகவும், போர்ப் பறையாகவும் திகழ்ந்தது அதுவே! ஆதலால் அண்ணா மலைப் பல்கலைக் கழகத் தடைப்பாடுகள் பாவாணரை எத்தமிழ்ப் புலவர்க்கும் வாயாத பேறாக இயக்கமாக்கின என்க.

பாவாணர் விரும்பிய வண்ணம் காலங்கடந்தேனும் அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் துறையைத் தோற்று வித்தது. பாவாணரைப் புரிந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் முதலிய பலர் தூண்டுதலும் அந்நாள் முதல்வர் கலைஞர் ஏற்புமே அத்துறை தோன்று தற்கு மூலம் எனலாம். ஆனால் இயக்ககம் இயக்ககமாகாமலே - தேக்கக மாகவே பாவாணர் நாளெல்லாம் கழிந்தது! கல்வித்துறை கருதவில்லை; செயலகம் சிந்திக்கவில்லை; அலுவலர் ஆருக்கென்ன என்று இருந்தனர்!

'அரசில் அன்று என்பது ஆறுமாதம் ஆகின்றது' என்று வருந்தினார் பாவாணர். மணிக்கணக்கில் அமைச்சரைப் பேட்டி காணக் காத்துக் கிடந்து மறுபடி மறுபடி என மனம் புண்பட்டது! "எந்த அரசாவது அகராதித் துறையை எடுத்துக்கொண்டு செய்கின்றதா?" என்று கூறும் மேலாண்மையர் கை, தடுக்க நீளுமேயன்றிக் கொடுக்க நீளுமா?

ஆலை அமைப்புக்கும், நகரமைப்புக்கும், நகரப் போக்கு வரத்து ஒழுங்குக்கும், நகரத் தூய்மைக்கும் எத்தனை குழுக்கள் - எத்தனை ஆய்வுகள் - எத்தனை நாட்டுச் செலவுகள்! அகர முதலித்துறை தமிழ் நாட்டில் மட்டும்தானா இயங்குவதாயிற்று. ஏன், அயலார் ஆட்சி நடந்த காலத்தில் அகராதித் துறைக்குச் செய்யப்பட்ட வாய்ப்புகள் எவை என அவ்வகரமுதலி முகப்பே காட்டுகின்றதே! இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா, பிரான்சு என அயல்நாட்டை நோக்காவிட்டால் கூட, தில்லி வடமொழி அகரமுதலி இயக்ககத்தைப் பார்க்கக்கூடாதா?

நாடாளுமன்ற உறுப்பினர் ஒரிருவர் சென்றேனும் அதனைக் கண்டு அறிக்கை தர ஏவக்கூடாதா? ஏன்? கேரளம், கருநாடகம் ஆந்திரம் ஆகிய அண்டை மாநில அரசுகள் அகரமுதலிக்குச் செய்துவரும்

ஏந்துகளை ஒருபார்வை பார்த்தேனும் ஒரு முடிவுக்கு வரக்கூடாதா? "தென்னை வைத்தவர்" தின்று சாவார்; பனை வைத்தவர் பார்த்துச் சாவார் என்பது போல் பாவாணர் தாம் எழுதி முடித்த 'ஆசைமொழி' வரைக்குக்கூட அச்சில் காணாமலே மறைந்தாரே!

பொற்குடத்தைப் போட்டு உடைத்துவிட்டு 'அப்படிக் குடம்; இப்படிக் குடம்' என்பதால் ஆவதென்ன? உயிரோடு இருக்கும்போது உருப்படியாக உதவாமல் உயிர் போனபின்னே தெய்வமாக்கி ஆவதென்ன? திருவிளக் கேற்றித் தேரிழுத்தாவதென்ன?

நாட்டுக்கும் அரசுக்கும் என்று படிப்பினையாக இஃதமையுமோ, அன்றுதான் இத்தவறுகள் மீண்டும் தோன்றாமல் இருக்கும்.

2. பாவாணர் சால்பு

"பல நல்ல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளும் தன்மை சான்றாண்மை ஆகும். சாலுதல் நிறைதல். சான்றாண்மை சால்பு எனவும் படும்" என்பது திருக்குறள் மரபுரைச் சான்றாண்மை முகப்பு விளக்க மாகப் பாவாணர் கூறுவதாகும்.

அறிவான் நிறைந்தோர் 'ஆன்றோர்' என்றும், பண்பான் நிறைந் தோர் 'சான்றோர்' என்றும் பகுத்துக் கண்ட காலமும் உண்டு. "பண்பிலா அறிவு எத்துணை நிரம்பினும் அறிவாகாது ; அறிவின் சிறப்பு பண்பின் சிறப்பாலேதான் போற்றப்படும்" என்பவை அறவோரிடைத் தோன்றி யமையால் தான், 'சான்றோராவார் அறிவானும் பண்பானும் நிறைந்தோர்' என்னும் பொருளுக்குரிய ராயினர். அதனால், சங்கப்புல வர்கள் 'சங்கச் சான்றோர்' என உரையாசிரியர்களால் வழங்கப்பட் டனர்.

பாவாணர் எத்தகைய அறிவுக் கூர்ப்பர் !

"சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப்பற்ற தனித்திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும்" என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றோம்.

"மேலும், திரு. தேவநேயனார் பதியச் சொல்லும் ஆசிரியரும் இன்புறுத்தும் சொற்பொழிவாளருமாவர். பல தமிழ்க் கழக ஆண்டு விழாக்களில் எமது தலைமையின்கீழ் அவர் சொற்பொழிவுகள் ஆற்றி யுள்ளார். அவை கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய் அமைந்து அவை யோரைக் கிளர்ச்சியுறச் செய்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின. அவர் வருந்தியுழைத்து ஆராய்ச்சி செய்து வரும் அறிஞர்." என்று பாராட்டு கிறார் மறைமலையடிகளார். அவர் மும்மொழிப் புலமையர் என்பதும் தனித்தமிழ் மலை என்பதும் நாடறிந்த செய்திகள்.

தமிழ் கிரேக்கம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமை யாளரும், பாவாணர் பாளையங்கோட்டையில் பயின்ற நாளில் தமிழாசிரியராக இருந்தவருமாகிய பேரா. துரைசாமி என்பார். "ஆசிரியரின் ஆராய்ச்சி வன்மை சொல்லிறந்து நிற்பது, இப்பேரறிவாளர் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ள பேருதவியைத் தமிழ் உரிமை மிக்குடைய தமிழ்மக்கள் யாவரும் பாராட்டுங்கடப் பாடுடையர். தமது நலத்தைக் கருதாது உழைக்கும் இத்தகைய கலைவல்லாரைத் தமிழ்நாடு பொன்னேபோல் போற்றுதல் வேண்டும்" என்கிறார்.

"பாவாணர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர்.

"அவருடைய புலமையும் தெளிவும் துணிவுமிக்கது. தமிழ்மொழியின் தூய்மையும் வளமும் எத்தகையது என்பதனை ஆய்ந்தறிந்து தெரிவித்த பெரு மகனாரிடம் தமிழிடம் பற்றுக் கொண்ட எவருக்கும் பெருமதிப்பு ஏற்படாதிருக்க முடியாது" என்று பாராட்டுகிறார் பேரறிஞர் அண்ணா.

"உரையும் பாட்டும் உடையோர் விசும்பின் வலவன் ஏவா வானவூர்தியும் பெறுவர்" என்பது புறப்பாடல். பாவாணர் புலமைத் திறத்தைப் புலமைமிக்க மூவர், உரையால் பாராட்டிய பாராட்டுகள் இவை ! இவை பாராட்டுகளா? இல்லை ! மெய்யுரைகள் ! பாவால், பாவேந்தர் இசைமுழக்கம் செய்கிறார். ஒரு பாடலா? இரு பாடலா? ஒரு பத்துப் பாடல்கள் : அவற்றுள் இரண்டு :

"தமிழில் தமிழ்சார்ந்த கன்னடந்தெ லுங்கில்
அமைகே ரளந்துளுவில் ஆர்வம் - கமழ்கின்ற
ஆங்கிலத்தில் ஏனை அயல்மொழியில் வல்லுநர்எப்
பாங்கிலுளர் பாவாணர் போல்."

"வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கில்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழே ஆதிஎன்னும் தேவநே யர்தாம்
எந்தமிழர் எவ்வார்க்கும் வேந்து"

பாவாணரைப் பற்றிய இந்நான்கு புலமைப் படப்பிடிப்புகளிலும் வெளிப்படையாகவும் உட்படையாகவும் பொதிந்து கிடக்கும் செய்திகள் எத்தகைய மேதகையவை !

ஒருவர், சிவனிய அழுத்தர் ! ஒருவர், கிறித்தவ அழுத்தர் ! ஒருவர், 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றவர்! ஒருவர் நம்பாமதத்தர்! நால்வேறு நிலையரும் நயனுறத் தூக்கியாயும் புலமைத் தலைக்கோலர்! புலமை சமயங்கடந்த ஒருபொருள் என்பதைப் புலப்படுத்தும் சான்றுகள் இவை.

"பாவாணர் ஒப்பற்ற தனித்திறத்தர்; அவருக்கு ஒப்பாக இருப்பவர் அரியர்"

"பாவாணர் ஆய்வு வன்மை சொல்லிறந்தது; தம் நலம் கருதாது உழைப்பவர் அவர்"

"பாவாணர் புலமையும் தெளிவும் துணிவுமிக்கது! நம் அனைவர் நிலையையும் உயர்த்தியவர் அவர்".

"பாவாணர் போல் வல்லுநர் இலர்? அவரே எந்தமிழர் எல்லார்க்கும் வேந்தர்" நான்முகச் செய்திகளா இவை? ஒருமுகச் செய்திகள் அல்லவோ? ஞாயிற்றை ஆயும் அறிஞர் எங்கிருந்து எக்கோணத்தில் ஆய்ந்தால் என்ன? அதன் ஒளிவளம் குறைந்தோ மறைந்தோ போமா?

பாவாணர் எழுபது ஆண்டுகளின் முன்னே பள்ளி இறுதிக் கல்வி சிறுறத் தேர்ந்தவர்; ஆங்கிலப் புலமை ஓங்கியவர்; சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கு வைப்பு ஆகியவை பயின்று வென்றவர். இவ்வெல்லா வற்றுக்கும் மேலாகக் கிறித்தவம் சார்ந்தவர்; ஆங்கிலத் துரை மக்களின் பரிவும் பாசமும் பெற்றிருந்தவர். மதிப்புமிக்க கிறித்தவ ஓதுவார் (உபதேசி யார்) ஒருவரின் பெயரர்; ஆட்சியோ ஆங்கிலவர் ஆட்சி. பொருள் வளமும் அதிகார வளமும் உடைய எவ்வேலையும் எளிமையாகப் பெற்றிருக்கலாமே!

பாவாணர் குடும்பச் சூழலும் பொருளியலும் அவற்றைப் பெறவன்றோ அவரைப் பிடர்பிடித்து உந்திந்தள்ளியிருக்கும்? அவ் வுந்துதலை உந்தித் தள்ளியன்றோ தமிழின்பால் தங்கினார்! அதனால் தான், தம் விருப்பம் மட்டுமேயன்றித் தாம் அறியாவாறு இறைவன் தம் மனப்பாங்கை மாற்றியமையையும் குறிப்பிடுகிறார், பாவாணர்.

"காய்த்த பலாவின் கனியுண்ணமாட்டாமல் ஈச்சம் பழத்திற்கு இடூற்ற வாறாக" அந்நாளில் அவரைப் பலரும் கருதியிருக்கக் கூடும்! ஆனால், அவர்க்கோ தேனில் ஊறிய தீம்பலாச் சுளையாகத் தமிழ்ப் பணியும், இடுருறுத்தும் ஈச்சம் பழமாகப் பிறபணிகளும் இருந்திருக்கும்!

கை நிறையப் பணம் வருவதாம் தமிழ்ப் பணியில் இருக்கும் போதும், அப்பணிவிடுத்து அயற் பணியிலே உள்ளந் தோய்வார் உண்மையைக் கண்ணேரில் நாம் காணும் போதுதான் அலையலையாய் அலைந்தாலும் தலை முழுக்கும் வறுமையுள் ஆழ்ந்து ஆழ்ந்து எழுந் தாலும் அத் தொண்டை விடாமல் ஆற்றிய பாவாணர் பற்றுமை விளங்கும். இஃது அறிவின் நிறைவால் மட்டுமே வாய்ப்பதா? பண்பின் நிறைவால் அன்றோ வாய்ப்பது! 'சான்றாண்மைக்கு ஆழி'யாக இருந்தமையால் அன்றோ நிலைத்தது!

தம் கருதுகோளும் மேற்கோளும் எந்நிலைக்கு ஆக்கும் என்று தெரியாமல் இறங்கியவர் அல்லர் பாவாணர் :

"மறைந்துபோன தவத்திரு மறைமலையடிகளிடம் ஓர் அரசியல் தூதர் சென்று நீங்கள் கட்டாய இந்தியை ஏற்றுக்கொண்டால் ஆயிரம் உருபாச் சம்பளமுள்ள பேராசிரியப் பதவி கிடைக்கும் என்றார். அதற்கு அடிகள் 'பத்தாயிரம் உருபாச் சம்பள மாயினும் கட்டாய இந்தியை ஏலேன்' என்று கருத்து விடையிறுத்து விட்டார்கள்.

"தவத்திரு மறைமலையடிகளைப் பொது மக்களும் போற்ற வில்லை ; பொருள் மக்களும் போற்றவில்லை ; அரசியலும் போற்ற வில்லை; ஆரியப் பல்கலைக் கழகங்களும் போற்றவில்லை ; அதனால் நூறாண்டு வாழ வேண்டிய அடிகள் 75ஆம் அகவையில் மறைந்தார்கள்" என்று எழுதுபவர் (இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? -?34) அவர் வழிபற்றி அவரினும் அழுத்தமாகத் தமிழ்த் தொண்டு செய்தது தெரியா மலோ தெளியாமலோ செய்ததாகுமா?

கொள்கை என்ற ஒன்றைக் கொண்டவர்க்குத் தாமே 'கொள்கை மாறி' என்பது இழிவும் பழியுமாம்! கொள்கையே இல்லார்க்குக் கொள்கை மாறுதல் தானே கொள்கை! கொள்கைமாறி என்பது மட்டுமா? 'கட்சிமாறி' - கொள்கை மாறியில்லை - கட்சி மட்டும் தான் மாறி - என்பார் பெருத்து வரும் காலத்தில் தான் பாவாணர் வாழ்ந்தார் ! தமிழில் தோய்ந்தாரும் கொள்கைமாறி யாய் - கட்சி மாறியாய் - காட்சி தந்த காலத்தில்தான் வாழ்ந்தார். ஆனால், அவர் என்றும் கொள்கை மாறியாக ஓர் அசைவில் கூட தோன்றினார் அல்லர். அன்றியும், தாம் கொண்ட கொள்கையில் உறுதிப்பாடு மிகுந்தே வந்தார். ஊன்று தூணாக இருந்த தொடக்கநிலை, ஐம்பான் ஆண்டுகள் ஆய்வால் அசையா மலையாக நின்று,

> *"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்*
> *மலையினும் மாணப் பெரிது"*

என்பதற்குச் சான்றாகவே திகழ்ந்தார் !

> *"மாந்தன் பிறந்தகம் குமரிக்கண்டமே".*
>
> *"அம்மாந்தன் பேசிய மொழி தமிழே"*
>
> *"தமிழே உலக முதன்மொழி"*
>
> *"தமிழே திராவிடத்திற்குத் தாய்"*
>
> *"தமிழே ஆரியத்திற்கு மூலம்"*
>
> *"சிந்துவெளி நாகரிகம் தமிழரதே"*

இக் கொள்கைகளை எத்தனை எத்தனை வகைகளால் மெய்ப் பித்துக் காட்ட முடியுமோ அத்தனை அத்தனை வகைகளாலும் மெய்ப் பித்தவர் பாவாணர்.

இக் கொள்கை யழுத்தத்தாலேயே, "வீடும் இல்லை ; காடும் இல்லை" "இருப்பும் இல்லை ; எடுப்பும் இல்லை" என்ற நிலையில் வாழ்ந்தும், அரசின் அகர முதலி இயக்குநர் அமர்த்தத்திற்கு வழங்கிய வாழ்வுச் சுருக்கக் குறிப்பில் "கோடி கொடுத்தாலும் கொள்கை தவறாதவர்" என்று பெருமிதமாக வரைந்தார். தொல்காப்பியர் கூறும்,

> *"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்*
> *சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"*

என்னும் பெருமிதக் கூறுகள் நான்கிற்கும் ஒருமுகச் சான்று இவ்வரை யன்றோ !

> *"தலைவி ழக்கினும் தமிழை யிழக்கிலம் தகவே"*

என்று பண்ணிசைத்துப் பாடும் பாவாணர் (இசைத் தமிழ்க் கலம்பகம். 203) பெருமிதம் எளிதில் தோன்றுவதா? பாவாணர் கடிதங்களில் வரும் பெருமிதக் குறிப்புகள் சில :

"திரவிட மரபு தோன்றிய இடம் குமரிநாடே என்னும் பொருள் பற்றிய எனது இடுநூலை (Thesis) ப் பல்கலைக்கழகம் தள்ளிவிட்டது. இது எனக்கு வியப்பாக இல்லை. இற்றைத் தமிழ் நிலை என்ன என்பதை மட்டும் தெரிவிக்கின்றது. இனிமேல் இந்தியாவிற்குள் எனக்கு ஒரு தேர்வும் இல்லை"

"மறைமலையடிகட்குப் பின் தமிழ்த் தூய்மை பேணும் பேராசிரியன் யான் ஒருவனே"

"என் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை ஆயும் ஆற்றலுடையார் இந்து நிலையத்திலாவது, அந்நிலையச் சார்பிலாவது இல்லை என்பதே என் கருத்து"

"என் ஆராய்ச்சி முடிந்துவிட்டதனால் இனிமேல் என் வாழ் நாளெல்லாம் இடைவிடாது நூல் எழுதிக் கொண்டே இருப்பேன். யான் எழுதியவை பிறரால் எழுதப் பெறும் திறத்தன அல்ல"

- இன்னவை செருக்கா பெருமிதமா? இல்லாத் திறத்தைத் தாமே எடுத்து இயம்பினால் அன்றோ செருக்கு! உண்மை அறியார்க்கும் அறிந்தும் மழுப்பியும் மறைத்தும் ஒதுக்குவார்க்கும் உணர்த்தும் வீறு புகழ் மிக்க பெருமிதமேயாம் ! செருக்கிலாப் பெருக்கம் பெருமிதமே என்பது வள்ளுவம்!

"என்றும் திருத்தம் இயம்பும் அறிஞரின்
நன்றி யறிவேன் நனி"

என்று செருக்கர் கூறுவரா? (பழந்தமிழாட்சி : முகவுரை) ;

"இப்புத்தகத்தின் திருத்தம் பற்றிய கருத்துக்களை எவரேனும் தெரிவிப்பின், அவற்றை நன்றியறிதலுடன் அடுத்த பதிப்பில் பயன்படுத்திக் கொள்வேன்" எனச் செருக்கிய மனம் கூறவருமா? (கட்டுரை வரைவியல் ; முகவுரை).

"என் கட்டுரைகளைக் குறைகூறி, என் முடிபுகள் வலிபெறுமாறு செய்த பல நண்பர்கட்கும் யான் மிகவுங் கடப்பாடுடையேன்" என முரணையும் அரணாக்கி மொழியும் நலப்பாடு செருக்குக்கு உண்டா? (ஒப்பியன் மொழி நூல் ; முகவுரை).

"கட்டு விளக்கம் எழுதும்போது ஆராய்ச்சிக் குறைவினால் சில அடிப்படையுண்மைகளைக் கண்டு பிடிக்க இயலாமற் போயிற்று. இன்று கண்டுபிடித்து விட்டேன்" என்றும், 'என் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளில் இரண்டொரு குற்றங் குறைகள் உள. அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வேன்' என்றும் வீழ - to fall in Love என்று குறித்தது ஆராய்ச்சி முதிராத காலம் என்றும், தம் ஆய்வைத் தாமே தூக்கிப் பார்த்து தம் குறையைப் பெருமிதமாக எடுத்து வைக்கச் செருக்கு இடந்தருமா?

ஆய்வு மதுகைப் பெருமிதம் வேறு ; தற்பெருமை என்பது வேறு; முன்னது விண்ணிலே பறக்கும் விழுமிய உயர்வுள்ளத் தவர்க்கே அமை

வது ; பின்னது அறிவறியாச் சிறுநிலையின் வெளிப்பாடாய் இயல்வது. தற்பெருமை என்பதன் காற்றுத்தானும் நெருங்காத நேயர் நம் நேயர். இரண்டன் வேறுபாடும் நுண்ணியது ; தெளிவானது.

"புலவர் பெருமிதம் 'மண்டைக்கனம்' அன்று. புலவர் வறுமையைப் பயன்படுத்தி அவரை அடக்கியாளத் துணிவதுதான் செல்வனின் அல்லது அமைச்சனின் மண்டைக்கனம். சில வணிகப் புலவர் வணங்கிப் பணிவது போல எல்லாரும் பணியார்" என்பது பாவாணர் பகர்வு (தமிழர் வரலாறு 343-344.)

பாவாணர் எளிமைச் சால்பு பிறரால் நினைத்துப் பார்க்கவும் அருமையானதாம்.

தம்பெயர்க்கு முன் 'பண்டித' அல்லது 'பண்டித புலவ' என்னும் பட்டங்களை அடையாகத் தந்து தம் நூலில் பொறிப்பதை வேண்டா எனத் தடுக்கிறார் பாவாணர்.

"என் பெயர் தேவநேயன் என்று மட்டும் இருத்தல் வேண்டும்" என்று பன்முறை வலியுறுத்துகிறார்.

"நூற்பெயர் பெரிய எழுத்திலும் தம் பெயர் சிறிய எழுத்திலும் இருக்க வேண்டும் என்கிறார்." "ஞா" என்னும் முதலெழுத்தும் 'பாவாணர்' என்னும் பட்டமும் இருத்தல் கூடாது" என்றும் சொல்கிறார்.

எந்நூலிலும் தம் படம் போடுவதை முற்றாகத் தவிர்த்தார் பாவாணர்.

பாவாணர் பிறந்த நாள் மலர் கொண்டு வர விரும்பிய அன்பர் களுக்கும், "என் வரலாறோ, படமோ இருத்தல் கூடாது" என்றும், "மலர் வெளியிடுதல் வேண்டா" என்றும், "பிறந்தநாள் கொண்டாடும் வழக்கம் இல்லை" என்றும் மறுத்தார்.

நூல் வெளியீட்டுக் குழுக்கள் பாவாணரை ஊர்தியில் வைத்து ஊர்வலமாகச் செல்லவிழைந்தபோதும் மறைமலை யடிகளார் படத்தை ஊர்தியில் வைத்து ஊர்வலத்துள் ஒருவராகச் செல்லவே விழைந்தார். "என்னைப் பற்றிய விளம்பரம் ஒன்றும் வேண் டேன். இது எனக்கு மிகமிக வெறுப்பானது" என்றும் அன்பர்களுக்கு எழுதினார்.

பாவாணர் தோற்றம் சில ஆயிரவருள் ஒருவர்க்கு அமைவது என்பது அவரை நேரில் ஒருமுறை கண்டாரும் அறிவர். ஆயினும் அவர் தம்மை, "இயற்கையாகவே தோற்றப் பொலிவில்லாதவன்" என்று கூறும் போது அதனை உண்மை என ஏற்றுக் கொள்ள இயல்வதில்லை. அவர் தம் பணிவும் எளிமையும் அவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதே பொருள்.

இவ்வியல்புதானே, "எளிய நிலையில் இருப்பவனும் முகமன் கூறிப் பிறரைப் புகழும் இயல்பில்லாதவனும், புலவரும் விரும்பாத தனித்தமிழ் நடையினனும் ஆரியத்தை வன்மையாய் எதிர்ப்பவனுமாகிய

என்னை" என்று தம்மைத் தாமே மதிப்பிட்டுரைக்கும் உரையை வழங்குகின்றது.

பிறர்புகழ் பாராட்டல்

புகழும் வேண்டாப் புகழாளராக விளங்கிய பாவாணர் தக்கார் பிறர்க்கு அவர் தகவறிந்து தரவேண்டிய புகழைத் தரத் தவிர்ந்தார் அல்லர் ; தவறினாரும் அல்லர் முற்றான புகழுக்கு ஒருவர் உரியவர் அல்லர் எனினும் உரிய அளவில் அவர்க்குத் தரவேண்டும் புகழைத் தரும் சால்பாளராகப் பாவாணர் விளங்கியமை கண்கூடு.

"தம் வாழ்நாள் முழுதும் தமக்கென வாழாது தமிழ்க்கெனவும் தமிழர்க்கெனவும் வாழ்ந்து, ஆரியத்தாற் குறைப்புண்டும் அயற்சொற் களால் நெருக்குண்டும் சுருக்குண்டும் அகப்பகைவரால் இழிப்புண்டும் பழிப்புண்டும் அடியோடழிந்து போம் நிலையில் இருந்த தமிழைத் தம் முக்கரணத்தாலும் ஒல்லும் வகையால் செல்லும் வழியெல்லாம் ஓவாது போற்றிக் காத்து ஆரியத்தினின்று அறவே மீட்டு, பல்லவபுரம் பொது நிலைக் கழகம் நிறுவியும் அறிவுக்கடல் ஆராய்ச்சி இதழ் நடத்தியும் அவைகளிற் சொற்பொழி வாற்றியும் தென்மதுரைத் தீந்தமிழை மீண்டும் தோற்றுவித்து இனி இவ்வுலகுள்ளளவும் தொடரும் புத்தூழியைத் தொடங்கிவைத்த ஒப்புயர்வற்ற மாபெருந்தமிழறிஞர் மறைமலை யடிகள்" என அடிகளாரைப் பாராட்டுகிறார் பாவாணர்.

மேலும், "தமிழ்த் தொண்டர் திருக்கூட்டத்தில் மறை மலையடி கட்கு அடுத்தபடியாகப் பெருமை வாய்ந்த திரு.வி.க. அவர்களும் "மறைமலையடிகளால் தென்னாடு விழிப்புற்றதை மண்ணும் முழங்கும் மரமும் முழங்கும். அடிகளே தென்னாடு ; தென்னாடே அடிகள்" என்று கூறியிருத்தல் காண்க" எனத் தொண்டால் இருவரையும் இணைத்துக் காட்டுகிறார் பாவாணர்.

மறைமலையடிகட்கு அடுத்தபடி எனத் தனித் தமிழ்க் கருத்தின் தோய்வு குறித்துக் கூறினாரல்லர் பாவாணர். "புலவரைச் சிறப்பாகப் பெரும் புலவரை அவரவர் ஆற்றலும் தொண்டும் பற்றிப் பிரித்தறிதல் வேண்டும்" என்னும் தெளிந்த கொள்கையர் பாவாணர். 'என்மொழி தென்மொழியும் வடமொழியும் கலந்த இன்மொழி' எனத் திரு.வி.க. தம்மிடம் கட்டியதைக் குறிப்பிடுகிறார் பாவாணர். அவர் தனித்தமிழை அடிகளார் போல் கடைப்பிடியாகக் கொண்டார் அல்லர் எனினும், அவர்தம் சமயப் பொதுவுணர்வு பெண்ணின் பெருமை, தொழிலாளி யுரிமை முதலியவற்றை நாட்டிய தொண்டுகளை மதித்துப் போற்று கிறார்.

தமிழ்த் திருமணம் நடத்தி வைத்தும் சமயத்துறையில் சமநிலை உணர்ச்சியைப் பரப்பியும், காதல் மணத்தை ஊக்கியும், பெண்ணுரிமை யைப் பேணியும் தொழிலாளரை முன்னேற்றியும் நாட்டிற்குத் தொண்டு செய்தவர் திரு.வி.க. எனப்பகுத்துரைக்கிறார் பாவாணர். தனித்தமிழ்

நடையைத் தாம் கொள்ளார் எனினும் தனித் தமிழ்க்குச் சான்றாம் நூல்களைத்தேடிப் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதர். அதனால், "இந் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப்பெரும் புலவர் மறைமலையடிகளும் உ.வே. சாமிநாதையருமான இருவரே" என்று உரிய தகவை உரியவர்க்கு வழங்குகிறார். (வண்ணனை மொழி நூலின் வழுவியல் 69 : 117)

"காவிரி வாய்ப்படவும் கறையான் வாய்ப்படவும் இருந்த கடைக் கழக நூல் ஏட்டுச் சுவடிகளை ஊரூராகவும் தெருத் தெருவாகவும் வீடு வீடாகவும் திரிந்து தேடியும் விறகுத் தலையன் போல் தலையிற் சுமந்து கொணர்ந்தும், அல்லும் பகலும் கண்பார்வை கெடக் கூர்ந்து நோக்கிப் பதித்தும் அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும் ஒப்புமைப் பகுதிகளும் வரைந்தும் ஆராய்ச்சியாளர்க்குப் பேருதவியாகவும் பிறர்க்குப் பெரும் பயன்படவும் வெளியிட்டவர் தென்கலைச் செல்வர், பெரும் பேராசிரியர், பண்டாரகர், உ.வே. சாமிநாதையரே" எனப் பாராட்டுகின்றார்.

உயர்தரக் கட்டுரை இலக்கணம் இரண்டாம் நூலில் சாமிநாதையர் தமிழ்த்தொண்டு என்னும் தலைப்பில், நாற்பத் தோரடிகளில் ஓரகவல் பாடியுள்ளார்.

"கோலம் பக முதலியோர் கொடுங்கட லோடி
நிலம்பல கண்டில ராயினு நீங்காப்
பின்னோர் அவற்றைப் பின்னே காண்பர்
மன்பே ராசான் தென்கலைச் செல்வன்
பண்டா ரகனாம் பைந்தமிழ்ப் பெரியோன்
சாமி நா தையன் சார்ந்தில னாயின்
இற்றைத் தோன்றல் என்னா யிருக்குமோ?"

என்று உணர்ந்து போற்றும் பாங்கு எவ்வளவு ஆழமானது ! திருப்பனந் தாள் திருமடத்து உதவிவேண்டி ஒருகால் பாவாணர் ஆங்குச் சென்று தம்பிரான் அவர்களைக் கண்டார். தம்பிரானுடன் பெரும் பேராசிரியர் சாமிநாதரும் இருந்தார். 'ஐயர் அவர்களைப் பற்றித் தெரியுமா?' என்று தம்பிரான் பாவாணரிடம் வினவினார். பாவாணர் தெரியும் என்றார். ஒருமுறை பாவாணர் அவரில்லம் சென்று கண்டிருந்தும் தமக்கு நினைவில்லை என்று கூறிவிட்டார் சாமிநாதர். அவ்வளவில் தம்பிரான் அப்பால் சென்றுவிட்டார் ! (தமிழர் மதம்.133).

தம் வாழ்வில் ஏற்பட்ட இக்கசப்புணர்வு, அவர் செய்த தொண்டின் மதிப்பீட்டுக்கு எள்ளத்தனை, குறையோ கறையோ வைக்கவில்லை என்பதை உணருங்கால் பாவாணர் நம் மதிப்பில் உயர்ந்து செல்லுதல் நன்கு விளங்கும்! தனிக்கசப்புகள் மொழிக் கசப்பாய் - நாட்டுக்கசப்பாய் - கட்சிக்கசப்பாய் ஆகிய பேயாட்டம் ஆடுதல் நாம் காணாதவை அல்லவே !

பிறர் நலங்காணும் பேருள்ளம் :

வரிசையறிதல் என்பது பாவாணர் கட்டுரைகளுள் ஒன்று. அது பாவாணர் மறைவுக்கு எட்டுத் திங்களில் முன்னர் வரையப்பட்டது. ஔவை துரைசாமியாரையும் மயிலை சீனி வேங்கடசாமியாரையும் வரிசையறிந்து போற்ற வேண்டும் எனப் பேருள்ளச் சுரப்பால் வரைந்த கட்டுரை அது.

அதில், "புலவர் புலத்துறை பற்றிப் பலவகையர் ; ஆற்றல் பற்றிப் பலதிறத்தர் ; இயலர், இசையர், நாடகர், கணியர், மருத்துவர் முதலியோர் பலவகையர் ; நாவலர், பாவலர், விளக்கியர், தருக்கியர், நூல்வலர், உரைவலர், ஆய்வலர், கதைவலர், கட்டுரைவலர் முதலியோர் பல திறத்தார். இவ்விருசாரரும் மீண்டும் தலையர், இடையர், கடையர் என முந்நிலையர்.

இவ்வகையும் திறமும் நிலையும் அறிந்தே அவரவர்க்குத் தக்கவாறு பரிசளித்தல் வேண்டும். இங்ஙனம் பகுத்தறிதலையே வரிசையறிதல் என்றார் முன்னோர்" என்று சான்றுகளுடன் விளக்கும் பாவாணர் கட்டுரை நிறைவில், "ஒரு புலவரைக் குன்றச் சிறப்பித்தல் போற்றாமை யின் பாற்பட்டதே" என்கிறார் (செந். செல். 54 : 453-455).

தாம் தக்காங்கு போற்றப்படாமைக்கு ஆட்பட்டது போலப் பிறரும் ஆட்படுதல் கூடாது என்னும் பேருள்ளத்தால் வரைந்த கட்டுரை இது ! யான் பெறாப் பேறும் பிறர் பெறுக' என்னும் பெருநிலை கட்டுவது இது.

'பயிற்றுமொழி பைந்தமிழே' எனப் பாடுபட்டு அதனால் சிறையுற்ற பேராசிரியர் சி. இலக்குவனார் நாகர்கோயில் இந்துக் கல்லூரி முதல்வராகப் பதவியமர்த்தம் பெற்றார். பேரா. இலக்குவனார் விரும்பிய பதவியும் அது. ஆனால் பாவாணர் அறிக்கை விடுகிறார் ! எப்படி? "தமிழுக்கும் தமிழர்க்கும் அவர் அறிவாற்றலும் தொண்டும் பெரும் பயன்படுமாறு மதுரைப் பல்கலைக் கழகத் துணைக் கண்காணகராக அமர்த்தப்பெறின் பெரிதும் மகிழ்வுறுவோம்" -இது பாவாணர் உ.த.க. சார்பில் வெளியிட்ட அறிக்கையின் பகுதி.

பேரா. வ. சுப. மாணிக்கனார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக அமர்த்தப்பட்டதை எப்படிக் கருதிப் பாராட்டுகிறார். தாம் பணி முடிக்குமுன் விடுவிக்கப் பட்டதும் சொற் பிறப்பியல் அகரமுதலி செய்யவிடா வண்ணம் இடர்ப்படுத்தியதுமாம் தீமைகளுக்குக் கழுவாய் போல இவ்வ மர்த்தம் அமைந்ததாகப் பாராட்டு கிறார். தகுதி வாய்ந்த மாணிக்கரைப் பல்கலைக் கழகத் துணை வேந்த ராக அமர்த்துதற்கு இது முதற்படியாக அமைவதாக என வாழ்த்து கிறார் ! எத்தகைய பேருள்ளச் சுரப்புகள் இவை!

சமயச் சால்பு

பாவாணர் கிறித்தவ சமயம் சார்ந்தவர். ஆனால், அச்சார்பு எத்தகையது? புறக்கோலமாக நின்றதில்லை! அகக்கோல இறைமை

யாகத் திகழ்ந்தது! 'இறைவன்' என்பதைத் தம் எழுத்தில் (கடிதங்களில்) சுட்டினாரே அன்றித் தனிப்பெயர்ச் சுட்டுக் கொண்டார் அல்லர்.

இளமையில் பயின்ற கீர்த்தனைகள் இசைப் பாடல்கள் ஆகியவற்றைக் கொண்டு 'கிறிஸ்தவக் கீர்த்தனம்' பாடிய பாவாணர் (1932) இசைத்தமிழ்க் கலம்பகத்தில் 'உண்மை வடிவெனும் ஒருவன்' 'முந்திய இறைவன்' 'சீரிய மீட்பன்' 'முதற்கடவுள்' 'தனித் தலைவன்' 'கோவே' 'எம் தந்தையே' 'எங்கும் நிறைந்த பொருளே' 'இறைவா' 'அறவா' எனச் சுட்டுகிறார் (1966). இசையரங்கு இன்னிசைக் கோவையில் (1969) 'மூவுலகும் தொழும் முத்தொழில் முதல்வர்' எனக் கடவுள் வாழ்த்துப் பாடுகின்றார். பாவாணர்தம் அகச் சமய வளர்நிலையை இவை காட்டும்.

"அறிவியல் ஆராய்ச்சியாளர் இயற்கையிலுள்ள இறும்பூது களைக் கண்டு இறைவன் பெருமையை உணர்ந்து வியப்பதற்கு மாறாக, திறவுகோல் பெற்ற வேலைக்காரன் திருடனாக மாறிவிடுவதுபோல், தனக்கு நுண்மதியளித்த இறைவனையே இல்லையென மறுப்பது விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போன்றதன்றோ?" என்று பாவாணர் கூறுவது (தமிழர் மதம். 192) அவர்தம் கடவுட் கொள்கை அழுத்தத்தை வெளிப்படுத்தும்.

தமிழர் மதப் பின்னிணைப்பில் 'மதச் சமநோக்கு' என்னும் குறுந்தலைப்பில்,

"சிவனியம் மாலியம் உலகியம் என்னும் மூன்றே தொன்றுதொட்டு வழங்கும் தமிழ் மதங்களாயினும், இன்று வெளிநாட்டு மதங்களும் தமிழரிடைப் புகுந்திருப்பதாலும் அம்மதத்தாரைத் தமிழரல்லர் என விலக்கக் கூடாமையாலும் இற்றை முறைப்படி சமணம், புத்தம், கிறித்தவம், இசுலாம் என்னும் மதங்களையும் தமிழ் நாட்டு மதங்களாகவே கூறல் வேண்டும். உலகியம் (லோகாயதம்) ஒன்று மட்டும் உலகம் முழுமைக்கும் தொன்று தொட்டுப் பொதுவாகும்".

மதங்களெல்லாம் தேவியம் (Theism) அல்லது உள்ளியம் (ஆஸ்திகம்), தேவிலியம் (Atheism) அல்லது இல்லியம் (நாஸ்திகம்) என இருவகைப் பட்டிருப்பதால் மதவியல் வாயிலாக மக்களை ஒன்றுபடுத்துதல் இயலாது. அதனாலேயே இந்திய ஒன்றியமும் மதவியலைத் தழுவாது உலகியலையே (Secularism) தழுவியுள்ளது.

ஆகவே, தாய்மொழியொன்றே ஓரினப் பல மதத்தாரையும் ஒன்றாய் இணைக்க வல்லதாம். ஆதலால், தமிழர் எம்மதத்தா ராயினும் வல்லதாம். தமிழைத் தாய்போற் பேணிக்காத்தல் வேண்டும், தமிழ் என்பது தனித்தமிழே. அயல் நாட்டு மதம் என்னும் காரணியத்தால், அயன் மொழிச் சொற்களை ஆளுதல் கூடாது. தமிழ்மொழி பற்றியே தமிழர் என்னும் இனம் அமைந்திருப்பதால், தமிழ்ச் சொல்லை வழங்காதார் தமிழராகார். அயல் நாட்டு மதம் பற்றியே அயன்மொழிச் சொற்களை யெல்லாம் தமிழில் பெயர்த் தாள வேண்டும். நேர்த்தென்சொல் ஏற்கெனவே

இல்லாவிடின், புதுச்சொல் புனைந்து கொள்ளவேண்டும். மதம் என்பது காணப்படாத மறுமை நோக்கியது ஆதலால், எல்லா மதங்களையும் சமமாக நோக்குதல் வேண்டும். ஒவ்வொரு மதத்தார்க்கும் தம் மதத்தைப் பிறர்க்கு எடுத்துரைக்க உரிமை இருப்பினும், அது பற்றிப் பிறமதத்தாரை வெறுப்பதும் பகைப்பதும் மத நோக்கத்திற்கும் மாந்தன் தன்மைக்கும் முற்றும் மாறானதாகும்.

கடவுள் இருப்பது உண்மையாயின், அவரை நம்புவாரையும் நம்பாதாரையும் அவரே மறுமையிற் கவனித்துக் கொள்வார். இம்மையைப் பொறுத்தமட்டில், எல்லாரும் உடன்பிறப்பாக ஒன்றி வாழல் வேண்டும். அதுவே உயர்திணை என்னும் மக்கட்டன்மை - இச் செய்திகளால் பாவாணர் தம் மதவளர்நிலை தெள்ளத் தெளிவாக விளக்கமாகும் 'தாய்மொழியொன்றே ஓரினப் பல மதத்தாரையும் ஒன்றாய் இணைக்க வல்லது' எனத் தேர்ந்து தெளிந்தவர், மதச் சமநோக்கராக வன்றி எவ்வாறு இருக்க இயலும்?

இச்சம நோக்குண்மையாலேயே சைவசித்தாந்தக் கழகம் அரவணைத்தது; குன்றக்குடி அடிகளார் பாராட்டினார் ; தந்தை பெரியார் மதித்தார்; பாவேந்தர் பண்ணிசைத்தார் ; கிறித்தவ அமைப்புகள் பணி வாய்ப்புத் தந்தன; தமிழுணர்வுடையோர் தம்குல மத வேறுபாடு கருதாராய் உதக. அமைப்பில் ஒன்றியும் உழுவலன்பு காட்டியும் பாவாணக் குடை நிழலில் தங்கித் தளிர்த்தனர். மொழிப் பற்றாளர்க்கு இன்றியமையாது வேண்டும் சால்பு ஈதெனப் பாவாணர் நடைமுறை வாழ்வு நாட்டுகின்றதாம்!

பொல்லாப் பழிகள்

பாவாணர் 'பார்ப்பனப் பகைவர்' என்பது பல்ல பலர் உள்ளெரிவால் - வல்லாண்மையால் - பரப்பிய நச்சுக் கருத்தாகும்!

"தமிழிலேயே வழிபாடு செய்வதாயின் பார்ப்பனரே வழிபாடு செய்பவராக இருக்கட்டும்" என்னும் பாவாணரைப் பார்ப்பனப் பகைவர் என்றால், என்றவர் கட்டாயம் தமிழ்ப் பகைவரே ! தமிழர் பகைவரே !

"தமிழர் தொன்மையை உலகிற்கு அறிவித்தவர் கால்டுவெல் பெருமகனார்; தனித்தமிழ்க்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர் ; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்" எனப் பாராட்டும் பாவாணர், "எனக்கு வழிகாட்டியவர் மூவர் ; ஒருவர் அயல்நாட்டார்; ஒருவர் தமிழர்; ஒருவர் பார்ப்பனர்" என இம்மூவரையே சுட்டும் பாவாணர், பி.தி. சீனிவாசையங்கார், சேசையங்கார், இராமச்சந்திர தீட்சிதர், கிருட்டிணசாமி ஐயங்கார், ஆகியோர் எழுதிய வரலாற்று நூல்களைப் பலபடப் பாராட்டியும் போற்றியும் கூறும் பாவாணர், 41 அடிகளில் உ.வே. சாமிநாதர் தமிழ்த் தொண்டைப் பாரித்

துரைக்கும் பாவாணர், "பேராயக் கட்சிப் பெருமகனும் பெயர் பெற்ற அறுவையரும் (Surgeon) பிராமணருமான காலஞ்சென்ற பண்டகர் (Dr.) மல்லையா" விற்கு ஒப்பியன் மொழிநூல் முதன் மடலம் திராவிடம் முதற் பாகத்தைப் படையலாக்கும் பாவாணர், உத்தரப்பிரதேச முசாபர் நகர் சமற்கிருதப் பேராசிரியர் உனியால் மகளார் சுர்சி உனியால் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் சமற்கிருத ஆராய்ச்சி மாணவியாகச் சேர்ந்து பயிலுதற்கு உதவிய பாவாணர் 'பார்ப்பனப் பகைவர்' எனல் பார்வைக் கோளாறேயாம்!

மன்னார்குடியில் யாழாசிரியராக அமைந்தவர் இராச கோபாலை யர். அவரை இசைத்தமிழ்க் கலம்பகத்தில்,

"இன்னிசை யாழ்வல்லான் இன்சொல் எழில்முகத்தான்
என்னிடை அன்பால் இசைநுவன்ற - இன்னியலான்
மன்னார் குடியிராச கோபாலன் மாணடிகள்
மன்னுக என்றன் மனத்து"

என இசையாசிரிய வணக்கம் இசைப்பதும், உடன் பணியாற்றிய கோபால கிருட்டினையர் என்பார்க்காகத் தம் பதவியை விட்டுக் கொடுத்து உதவியதும் எண்ணுவார் பாவாணர் பெருநிலையை வேறாக எண்ணார்.

பன்மொழிப் புலமை

தனித்தமிழ்ப் பற்றாளர் பிறமொழி அறியார் என்றும் பிறமொழி வெறுப்பர் என்றும் பழிக்கப்படுகின்றனர். வாய் கூசாமல் பழித்தும் கைபோன போக்கில் வரைந்தும் தம் தாங்கா வெறுப்பைக் காட்டினர்; காட்டியும் வருகின்றனர். தமிழியக்க வரலாற்றைத் தெள்ளிதின் அறிந் தார் அத்தகைய முடிவுக்கு வாரார்.

உயர் தனிச் செம்மொழி தமிழ் என்று கூறிய கால்டுவெல் தமிழ்ப் பிறப்பர் அல்லர். தமிழ் மட்டுமே கற்றவர் அல்லர். 'தமிழ் வெறியர்' என்று சுட்டிக் கூறுதற்குரிய செயல்களைப் பயின்றாரும் அல்லர். வட சொற்களின் துணையின்றித் தமிழ் இயல முடியும் என்றும், பிறமொழிக் கலப்பு நீங்க நீங்கத் தமிழின் நயம் சிறக்கும் என்றும் கண்டறிந்த உண்மையை ஒழிவு மறைவு இல்லாமல் உலகறியச் செய்தவர். அவர் பயின்ற மொழிகள் பதினெட்டு என்பர், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத அவர், தமிழ் பயிற்றுதலால் வருவாய் தேடிக்கொள்ளும் பணியில் ஈடுபடாத அவர், தம் பொழுதையெல்லாம் பன்மொழியாய் வுக்கே செலவிட்டு அதனால் ஒப்பியல் இலக்கணம் படைத்த அவர், தமிழ் தனித்தியலும் என்றதால் 'தமிழைக் கெடுத்தவர்' எனப் பழிக்கப் படுவாரானால், 'எவர் தமிழைக் கெடுப்பவர்?' என்பது வெளிப்பட விளங்கக் கூடியதே!

பரிதிமாற் கலைஞர் தமிழ் வல்லார்; ஆங்கிலமும் வல்லார்; வடமொழித் தேர்ச்சியர். வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள

நடையை 'ஆபாஷ பாஷை' என்றே தமிழ் மொழி வரலாற்றில் குறித்தார் (18). தமிழ் மட்டுமே கற்ற புலவரல்லர் அவர்.

தமிழ் வடமொழி ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையும் ஒருங்கு நிரம்பியவர் மறைமலையடிகள். அவர்தம் வடமொழிப் புலமையைப் பாராட்டிக் காஞ்சி சங்கராச்சாரிய அடிகள் 'சாகுந்தல நாடகப் பரிசுத் திட்டம்' ஒன்றனைச் சென்னை சமற்கிருத அகாதமியில் நிறுவியுள்ளமையே அவர்தம் வடமொழிப் புலமையைப் பளிச்சிடக் காட்டும். அவர் தோற்றுவித்ததே தனித் தமிழ் இயக்கமாகும். ஆதலால், அவரும் தமிழ் ஒன்று மட்டுமே கற்ற அளவினர் அல்லர்.

இனிப் பாவாணரோ பயின்ற மொழிகளைச் சுட்டியுள்ளோம். அவை 23. வேர்ச்சொல் விளக்கம் காட்டிய மொழிகளின் எண்ணிக்கையோ 58 ; இவற்றுடன் தொல் பழமொழிகள் அல்லது உலக வழக்கிறந்த மொழிகளாகச் சுட்டியவை 15; ஆக 73 மொழிகளில் வேர்ச் சொல் காட்டியவர் அவர் (தமிழ் வரலாறு).

தனித்தமிழ் இயக்கத் தூண்களாகச் சுட்டப்படும் இவர்களுள் எவருமே தமிழ் மட்டுமே கற்றவர் அல்லர். ஆகவும் தனித்தமிழ்ப் பற்றாளர் அனைவரும் தமிழ் மட்டுமே கற்றவர் என்று பழிப்பார். எண்ணிப் பார்த்துப் பழிப்பதா எரிச்சலால் பழிப்பதா என்பதை எளிதில் எவரும் உணரலாம்.

குறுகிய நோக்கர் எவர்?

இனித் தனித்தமிழ்ப் பற்றாளர் 'குறுகிய நோக்கர்' என்றும், 'மொழியியல் அறியார்' என்றும், 'அறிவியல் அறியார்' என்றும் 'தமிழ் வெறியர்' என்றும் பலபடப் பலரும் சொல்லுதல் கேட்கக் கூடியதாகவே இன்றும் உள்ளது. இவையெல்லாம் தமிழ்ப் பகைவர் கூறுவனவோ எனின் அல்ல. தம்மைத் தமிழ்ப் பிறவியராகக் கூறித், தாம் தமிழ்த் தொண்டுக்கே தம்மை ஒப்படைத்தவராகவும் சொல்லிக்கொண்டு, தாம் செய்வது தமிழ்வளப்பணியே எனவும் ஏற்றுக் கொண்டு இருப்பவரும் இவ்வாறு சொல்லும் போது தான், 'தமிழைக் கெடுத்த பாவிகள் தமிழரே யன்றிப் பிறரல்லர்' என மறைமலையடிகள் தெளிந்துரைத்த முடிவின் அருமை புலப்படுகின்றது!

தன் குடும்பம், தன் வீடு, தன் தெரு, தன்னூர், தன் சாதி, தன் சமயம், தன் கட்சி என வாழ்வோனினும் தன் மொழி என வாழ்பவன் விரிந்தவன். ஏனெனில் இவ்வெல்லானற்றினும் விரிந்ததும், இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கி மேலே எழுந்து கிளர்ந்ததும் மொழியாகும். தன் தாயை மதித்துப் பழகாதவன் பிறன் தாயை மதிப்பான் என்பது எப்படி ஏற்க முடியாததோ அப்படியே தன் தாய்மொழியை மதியாதவனும் பிறர் தாய்மொழியை மதித்துப் போற்ற அறியான் என்பது வெளிப்படை. தன் தாயையும் தாய்மொழியையும் தாய் நாட்டையும் மதித்துப் போற்றுபவனே பிறன் தாயையும் பிறன் தாய் மொழியையும், பிறன் தாய் நாட்டை

யும் மதித்துப் போற்றி உலகாக விரிவான். அவனே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்வான் ! அவனைக் குறுகிய பார்வை பார்ப்பது தன்னலப் பார்வை என்னும் ஒன்றையன்றி, தன் புழுக்கத்தைக் காட்டும் ஒன்றையன்றி வேறொன்று இன்றாம் !

"என் மொழியை ஆட்சி மொழியாக ஏற்காவிடின் படை கொண்டு சென்றேனும் ஆக்குக" என்று கூறுவது வெறியா? "இந்திய மொழிகள் அனைத்தும் ஒரொத்த உரிமை ஆட்சி மொழியாய் இருத்தல் வேண்டும்" என்பது வெறியா? முன்னது ஒருமைப்பாட்டை ஆக்குமா? பின்னது ஆக்குமா?

தமிழ்நாட்டில், தமிழன் செல்வத்தால், தமிழன் கட்டிய கோயிலுள் தமிழ் புகவிட மாட்டோம் ; வடமொழிக்கே அவ்வுரிமை என்பது வல்லாண்மையா? தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழன் புரிந்து வழிபடுமாறு தமிழில் வழிபாடு நிகழ்த்தல் வேண்டும் என்பது வல்லாண்மையா?

"அருச்சனை பாட்டேயாகும் சொற்றமிழ் பாடுக" என்று இறைவன் ஏவிப் பாடியதாகச் சொல்லப்படும் பாட்டும் கோயில் படியேற முடியாமையைக் காலம் காலமாகச் செய்து, தமிழ் மக்களை யெல்லாம் தலையாட்டி மாடுகளாகக் கருதிக்கொண்டு வல்லாண்மை செய்வதைத் தடுத்துக் கேட்காது விட்டாலும் ஒழிகின்றான் என விடலாம் ; தமிழனே வடமொழியே கோயிலில் ஆட்சி செய்யவேண்டும் என வழக்கிட்டுத் தடையாணை வாங்கி நிறுத்துதல் சமயத்தின் அழிவுக்கே அன்றி ஆக்கத்துக்கு ஆகாது என்பதை உணர்வோடு அணுகாதவன் சமயக்கேடனே ! அவனே கடவுள் நம்பிக்கை இல்லானினும் இல்லான் !

"கோயிலில் வடமொழி ; அலுவலகத்தில் ஆங்கிலம் ; இசை மேடையில் தெலுங்கு - பாலர்பள்ளி முதல் பல்கலைக் கழகம் ஈறாகப் பயிற்றுமொழி ஆங்கிலம் - எங்கே தமிழ்?" என்பான் குறுகிய வட்டத் தவன் என்பது எத்தகைய இழிவுப்பான செயல்!

மயிலாடு துறையை 'மாயூரம்' ஆக்கலாம் ; மறைக்காட்டை வேதா ரணியம் ஆக்கலாம், ஐயாற்றைப் 'பஞ்சநதம்' ஆக்கலாம் ; திருவல்லிக் கேணியை 'திருப்பிளிகேன்' ஆக்கலாம், தமிழ் மதுரையை 'மெசுரா' ஆக்கலாம்! இவை விரிந்த செயல்! 'தமிழாக இருக்கட்டும்' என்றால் குறுகிய செயல் !

"எனக்கு நேர்மை மட்டுமே பிடிக்கும்; அந்த நேர்மை என்பது நான் சொல்வதும் செய்வதுமே" என்னும் அடாவடித்தனத்திற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

'அரிசியில் கல்லைக் கலக்காதே', 'நல்ல எண்ணெயில் கடலை எண்ணெயைக் கலக்காதே', 'பாலில் நீரைக் கலக்காதே' என்று சொல்லார் எவர்? கலப்பது சட்டப்படி குற்றமாகுமே! ஆனால், கதையின், பெயரால் இன்று எழுதப்படும் கலப்பை - கொச்சையை - அருவறுப்பை

என்ன சொல்வது? இந்தப் பிழைப்புக்கு வேறு எத்தனையோ பிழைப்பு உண்டே, அவற்றைச் செய்து பிழைக்கலாமே!

அச்சகத்தில் நேர்ந்த எழுத்துப் பிழைகளைக் கண்டு வருந்திய திரு.வி.க. 'அச்சுக் கூடம் அம்மை வார்த்தது' என்றார். இன்றோ எழுத்தாளர்கள் ஆக்கத்தில் எத்தனை அம்மை - எத்தனை புற்று - எத்தனை கழிச்சல் எத்தனை வாந்தி ! நாட்டு எல்லைக் காப்பினும் மொழிக்காப்பு வேண்டுவதன்றோ! திரைப்படத்தணிக்கையினும் எவ்வளவு, வேண்டத் தக்கது நூல் தணிக்கை !

இவ்வளவு கேடுகளும் ஒருங்கே செய்து கொண்டிருப்பவர்கள் தமிழ்ப்பற்றாளர்களைப் பழித்தும் இழித்தும் பேசுவது அடிக்கும் தடியனைப் பார்த்து, 'அடியாதே' என்பவனே குற்றவாளி! அடிப்பவன் குற்றவாளி அல்லன் என்பது போல்வதே! ஊனாய் உயிராய் உணர்வாய்க் கொண்டு, வறுமையும் வசையும் தாங்கி - தமிழ் வாழ வாழ்ந்த பெரு மக்களை - தொண்டர்களை - அவர்களில் நூற்றில் ஒரு பங்கு அறிவோ உழைப்போ உணர்வோ இல்லாரும் 'எடுத்தேன் தொடுத்தேன்' எனப் பேசுவது தமிழ்மொழிக்கு மட்டுமே அமைந்த தீயூழ்போலும் !

சாதியைப் பழி - சீறுவான்! சமயத்தைப் பழி - குதறுவான் ! ,'மிழைப் பழி - கை தட்டிக் காது குளிரக் கேட்பான்? "பிறப்பின்கண் ஐயப்படும்" என்னும் வள்ளுவத்திற்குச் சான்றாவான், தானே என்பானை என்ன சொல்ல முடியும்!

மறைமலையடிகள் தனித்தமிழ்த் தந்தையாராகத் திகழ்ந்ததும், பாவாணர் அவர் வழியில் தனித்தமிழ் இயக்கமாக 'உலகத் தமிழ்க் கழகம்' கண்டதும் அக்கொள்கை விளக்கமாகவே நூல்கள் யாத்ததும் காலத்தின் கட்டாயத் தேவை என்பதைச் சுட்டுவதற்காகவே இவ்விளக்கங்கள் கூறப்பட்டனவாம். ஆற்றுக்குக் கரை ; மொழிக்குக் கட்டுக் கோப்பு ! கரையுடைப் பாளர், கரையடைப்பாளரை என்னுவதைப் பார்க்கும் போது தான். "தனித்தமிழ் மறவருள் ஒரு கடுங்கோல் முற்றதிகாரி தலைவனாக வந்தாலொழியத் தமிழ்த்தொண்டர் எத்துணையர் தோன்றினும் தமிழ் பேசும் நடை பிணங்கள் செவிக்கொளா; மனந் திருந்தா" என்று பாவாணர் கூறியதன் அருமை விளங்கும் !

"நாம் உருசிய மொழியைக் கெடுத்துக் கொண்டு வருகிறோம். தேவையில்லாமல் வேற்றுமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வருகிறோம். மேலும் அந்தச் சொற்களைக்கூடச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. அந்த வேற்றுமொழிச் சொல்லுக்கு ஈடாக அதே பொருளைக் கொண்ட சொற்கள் நமது உருசிய மொழியில் இருந்தும்கூட, பலர் அதனைப் பயன்படுத்துவதில்லை. புதிதாக ஒருவன் படிக்கக் கற்றுக் கொண்டால் அதிலும் குறிப்பாகச் செய்தித்தாளைப் படிக்கக் கற்றுக் கொண்டால் அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏட்டாளரின் நடையை அவர்கள் பயன்படுத்தும் சொற்களைத் தெரிந்துகொள்ள

வேண்டியதாகிறது. வேற்றுமொழிச் சொற்களால் செய்தி ஏட்டின் மொழி கெடுக்கப்படுகிறது. புதிதாகப் படிக்கத் தெரிந்துகொண்டவன் பிறமொழிச் சொற்களைப் படிப்பதன் மூலம் மகிழ்ச்சி கொள்ளலாம். ஆனால், அது அவனுடைய குற்றமில்லை. அந்தக் குற்றத்துக்குக் காரண மாக இருக்கும் எழுத்தாளனை மன்னிக்க முடியாது. இப்படி வேற்று மொழிச் சொற்களைத் தேவையில்லாமல் கையாளுவதை எதிர்த்து நாம் போராட வேண்டும்".

"வேற்றுமொழிச் சொற்களைத் தேவையில்லாமல் பயன்படுத்தப் பட்டு வருவதைக் கண்டு நான் மிகவும் மனம் நோகிறேன். அதிலும் சில ஏடுகளில் தவறுதலாகப் பயன்படுத்துவது சீற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் உருசிய மொழி சிதைவு அடைகிறது ; எனவே உருசிய மொழியைக் கெடுப்பவர்கள் மீது போர் தொடுக்க நேரம் வந்துவிட்டது என்று நான் கருதுகிறேன்."

பாவாணர் எதிர் பார்ப்பின் பின்னணி - உந்துதல் - இதுதானோ ! உருசியப் புரட்சியுடன் உருசிய மொழிப் புரட்சியும் ஒருங்கு நடாத்திய இலெனினார் உரைகள் இவை (மொழியைப் பற்றி இலெனின் பக், 60). பாவாணர் எதிர் நோக்கும் மொழிப்பற்று மிக்க முற்றதிகாரி ஒருவர் இங்கு வேண்டு மன்றோ! பொதுவுடைமை எழுத்தாளர்களும் இதனை உணராமல் மொழிக் கேடராக இருக்கும் தமிழக நிலையை என்னென்பது.

செய்ந்நன்றியறிதல்

பாவாணர்க்குப் பலப்பலர் தேடிவந்து உதவினர்; கேட்டு உதவி னார் அல்லர்; கேளாதே கிளையெனக் கெழீஇ உதவினர்; அவர்கள் உதவி என்றா உதவினர்? இல்லை! கடமை - கடப்பாடு - என்றே உதவினர்! ஏன்? "பாவாணர் வாழ்ந்தால் தமிழ் வாழும்" எனக் கண்டு கொண்டனர்! அதனால் அவர் வாழ்வுக் கெனவும் நூல் வெளியீட்டுக்கெனவும் உதவினர்.

பொருள் வகையால் எண்ணினால், செய்யாமல் செய்த உதவி தான்; காலத்தினால் செய்த உதவிதான்! பயன் தூக்காது செய்த உதவி தான்! அவ்வுதவிகளின் அளவு என்ன ஆனது! தினை பனையாயிற்று! அது உதவி செயப்பட்டார் சால்பின் அளவால் - தொண்டின் அளவால் - வரையிறந்த பெருமைக்குரியதாயிற்று! பாவாணர் அந்நன்றிகளை எப்படி எல்லாம் அறிந்தார் ; பொறித்தார்!

"திருச்சி ஊரகக் கொதிகலன் தொழிற்சாலை அன்பர் பலமாதங் களாக மாதந்தோறும் 50 உருபாவும் பெரியார் கல்லூரியன்பர் 20 உருபாவும் அனுப்பி வருகின்றனர். இவ்வுதவியின்றேல் சென்ற விடையில் இருந்து (1969) என் வாழ்க்கையே நடைபெற்றிருக்காது. இன்றும் அதுவே பேருதவி -என் நூற்கு உதவுவதினும் அதற்கு மேலான என்வாழ்வுக்கு உதவுதவே சிறந்தது ; இன்றியமையாதது (21-1-70).

"இங்ஙனம் விற்றுதவுபவர் தமிழ் நாட்டிலேயே வேறெவரும் இல்லை. இவ்விற்பனைத் தொகையாலேயே வாழ்க்கை நடந்து வருவதால் தங்கள் பணவிடையெல்லாம் நன்கொடையாகவே தோன்றுகின்றன" (13-5-67).

"திரு. அ. இராமசாமிக் கவுண்டர் எனக்குச் செய்த நன்றிக்கு அடையாளமாக எங்ஙனமும் அவர் வரலாற்றை நான் வெளியிட்டு விடுவேன்" (23-12-68) - இவை சேலம் அரிமாப்புலவர் மி.மு.சின்னாண்டார்க்கு எழுதிய கடிதக் குறிப்புகள்.

கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வருக்கு, "திரு. சுத்தானந்த பாரதியார் தென்னாப்பிரிக்காவில் நற்றொண்டு செய்திருக்கின்றார். அவர் என் நூல்களில் எதை விரும்பினும் அன்பளிப்பாகக் கொடுக்க அவர்தம் பாரத சக்தி மகா காவியம் எனக்கு அன்பளிப்பாகத் தந்தாரே" என எழுதுகிறார் (3-7-73).

பாவாணர் நூல் வெளியீட்டுக்குச் செட்டிகுளத்தில் ஒரு குழுபணம் தண்டி உதவியது, அதனை ஒட்டிச் செங்காட்டுப் பட்டியிலும் பணஉதவி வாய்த்தது அதனை,

"செட்டிகுளத் திற்குளித்த செந்தமிழ்த்தாய் செங்காட்டுப்
பட்டியில் வந்து பருகப்பால் - அட்டியது
போல்வதே மீண்டும் பொலிந்தெழுந்த பாவாணர்
நூல்வெளி யீட்டுக் குழு"

எனப் பாடிப் போற்றினார். தமிழர் சமய வெளியீட்டுக்கு உதவியதுடன் கடிகாரமும் வழங்கியமையை,

"காண்மணியும் பாடும் கடிகாரம் வான்கவரில்
நாண்மணியாய் ஆடி நளியிருளும் - கேண்மணியாய்
இன்னிசையின் முந்தி எழுவிக்க ஈந்தான்நாள்
முன்னியவா முல்லைவா ணன்."

எனப் பாராட்டுகிறார். தமிழிலக்கிய வரலாற்றுக்கு உதவிய கோவலங் கண்ணனை,

"வடமொழியை வாழ்த்தி வழங்குதமிழ் தாழ்த்தும்
திடமுடையவர் தென்னாட்டுச் செல்வர் -கடல்கடந்து
சிங்கபுரித் தீவிற் சேர்ந்த கிருட்டிணனார்
தங்கு தமிழ்ப்பணிசெய் தார்"

எனப்பாடுகிறார். இவ்வாறு நன்றியுரையும் செய்யுளும் தொகுப்பின் ஒரு தனிச்சிறு நூலாம் தகைமையுடையது அது. பாவாணர் தகவறிந்து அவரைத் தேடிவந்த உதவிகளைப் பற்றியவை இவை, நன்றி பாராட்டும் இந்நெஞ்சப் பெருமிதம் எத்தகையது என்பதை முனைவர் மா. இராசமாணிக்கனார் குறிப்பு ஒன்று விளக்குகின்றது அது :

"பாவாணர் நூலைப் பாடப்புத்தகமாகக் கல்லூரிகளுக்கு வைத்தால் குறைந்தது பத்தாயிரம் வரை கிடைக்கும். பொத்தகத் தேர்வுக்

குழுவில் நான், ஏ.சி. செட்டியார், அவ்வை "போன்றோர் தாம் இருக்கி றோம். எளிதாகச் செய்து முடிக்கலாம். நூல் எழுதிக் கொண்டுவந்து பர்மூவ. அவர்களைப் பாருங்கள் என்றேன். நான் என்ன பார்ப்பது? என் திறமையை மூ.வ. அறியாரா? நான்போய்ப் பார்க்க முடியாது' என மறுத்துவிட்டார். அவர் ஒருவணங்காமுடி தன்மானமிக்கவர் ; யாரையும் அண்டமாட்டார்" என்பது ஆம் ! அதுதானே பாவாணர் தனித் தன்மை !

தொண்டின் உறைப்பு

பாவாணர் செய்துள்ள மொழியாக்கத் தொண்டு விரிந்தது ; எவரும் அறிந்தது நூலாக்க அளவில் அவர் மொழித்தொண்டு நின்றதோ? இல்லை ! இந்தி எதிர்ப்புக் குறித்து எவ்வளவு பாடாற்றியுள்ளார்.

1938 இல் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தி புகுத்தப்பட்டது. அப்போது பாவாணர் திருச்சிப்புத்தூர் ஈபர் மேற் காணியார் உயர் நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அப்பொழுதில், இந்தி புகுத்தப்பட்ட பள்ளி கட்கு முன் மறியல் செய்த தமிழ்த் தொண்டர் சிறையில் இடப்பட்டனர். பெரியாரும் அதற்கு ஆளாயினார். முறைப்பட்ட தமிழ்க்காப்பு வகுப்பு வேற்றுமைக் கிளர்ச்சி யாகத் திரிக்கப்பட்டது. சிறைத் தண்டனையுற்ற தமிழ்த் தொண்டரின் தற்காப்பிற்காக ஒப்பியன் மொழி நூல் எழுதினார் பாவாணர்! அம் மட்டோ, கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் அதற்கு முன்னரே பாடி னார் (1937). பின்னர், 'இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?' எழுதினார் (1968). இசைப்பாடல்களும் கட்டுரைகளும் பலப்பல இயற்றினார்.

"மதுரை மாணவர் அனைவரும் ஓரிடத்தில் கூட இயலின் நான் வந்து மொழிச் சிக்கல் பற்றி விளக்கமாய்ப் பேச அணியமாயிருக்கிறேன். போகவரப் பேரியங்கிக் கட்டணம் கொடுத்தாற் போதும். அதுவும் இல்லாக்காலும் வருவேன்" என்கிறார். இப்படித்திருச்சி, நெல்லை, சென்னை ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று தொண்டாற்றியவர் பாவாணர்.

தொல்காப்பிய வகுப்புப் புலவர்களுக்கு நடத்துவதற்குக் காட்டுப் பாடியில் இருந்து சேலத்திற்கு வருகிறார் பாவாணர் எப்படி?

"நடக்க இருப்பது குறைந்த சம்பளத் தமிழாசிரியர் வகுப்பாதலால் ஒருவரையும் வற்புறுத்தவோ இடர்ப்படுத்தவோ வேண்டேன். பெற்றது கொண்டு பொந்திகை (திருப்தி) அடைவேன். தற்கற்கும் அறையமர்த்த வேண்டியதில்லை. என் உறவினர் வீட்டில் தங்கிக்கொள்வேன். வழிச் செலவுப் பணமும் வந்தபின் வாங்கிக் கொள்வேன்" என்கிறார்.

மொழிப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழாசிரியர்கள் உண்டு. ஆனால் நாட்டு எல்லைப் போராட்டத்தில் பங்கு கொண்டாரை அறியக் கூடவில்லை. எல்லை மாநாட்டைக் கூட்ட ஏவுகிறார் பாவாணர். பாராளுமன்றத் தூதுக்குழு தில்லியில் இருந்து தெற்கே வருங்கால் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கத்தக்க கருத்துகளைச் கவடி

களாக்கித் தரத்தூண்டுகிறார். "நாம் இன்று தூங்கிக்கொண்டும் நீட்டிக் கொண்டும் இருந்தோமாயின் நம் காரியம் கை கூடுவது அரிது" எனச் செயலை முடுக்குகிறார் பாவாணர்.மொழிப்பற்று,மொழிக்காப்பு,நாட்டுக் காப்பு என்னும் மூன்று நிலைகளையும் தாண்டி இனக்காப்பாக வும் பாவாணர் தொண்டு விரிகின்றது.

"வாத்தல் நாகராச என்பார் (சட்டமன்ற உறுப்பினர்) தமிழகத் தோடு சேர்ந்துள்ள தாளவாடியைக் கன்னட நாட்டொடு சேர்க்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வன்முறையாளரொடு தாளவாடியுள் புகுந்தார். தமிழர்க்கு இன்னல் விளைத்தார். அவரைத் தமிழ் நாட்டரசு சிறை வைத்தது. அவரை விடுவிக்கப் பட்டேல் முயன்று கொண்டிருக்கும் போதே, வன்முறைக்கும்பல் வெங்காலூர்க் கடை வீதியிலும், குடியிருப்பு களிலும் உள்ள தமிழர்களையும் சுற்றுலாச் சென்ற தமிழர்களையும் கண்மூடித் தனமாகத் தாக்கிப் பேரழிவும் பேரிழப்பும் செய்வித்தது. இதனைக் கண்டு கொள்ள முயலாத பட்டேல், நாகராச சிறை மீட்புக்கு முயன்றது போல் அதில் வெற்றி கண்டது போல் தமிழர்க்குப் பாதுகாப்பு ஏன் தரவில்லை. உடனே பாதுகாப்பளிக்க" என்று வலியுறுத்தி இனக் காவலுக்காக வெளிப்படைக் கடிதம் வரைந்தார் பாவாணர்,

இல்லறச் சீர்மை

"உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு"
"நிலத்தொடு நீரியைந் தன்னார்"
"இருதலை ஒருபுறா"
"களவு மகவு"
"இணை மலர்ப் பிணையல்"

என்பனவெல்லாம் கணவன் மனைவியர் ஒத்தியல் குறித்த உவமைச் செல்வங்கள். பாவாணர் இல்லறச் சீர்மை இவ்வுவமைகளை ஒப்பத் திகழ்ந்தது.

ஆழ்ந்த சிந்தனை ; அயரா மூளைவேலை ; ஒழியாத் தொண்டு ; உயர்ந்த நோக்கு - இவற்றையுடையார் இல்லற வாழ்வில் வெற்றி கொள் வது அரிது ; சிலர் வேறுபட்டு நிற்றலும் சிலர் ஒட்டியும் ஒட்டாமலும் நிற்றலும் கண்கூடு ; அவ்வாறாகவும் முகப்பில் சுட்டிய அனைத்துத் தொடர்களுக்கும் பொருந்த அமைந்த பாவாணர் இல்வாழ்வுச் சீர்மை பெரிதும் அரிதானதாகும்.

"காதல் பெண்பாற்கு மட்டும் உரியதன்று" என்னும் பாவாணர், "யானும் என் மனைவியும் ஓருயிரும் ஈருடலுமாக இருந்தோம்" என்று தம் மேலான அகவாழ்வைக் குறிக்கிறார். "என் மனைவியார் இறந்த அன்றே என் உலக வாழ்க்கை முடிந்தது" என்று கூறும் பாவாணர், "என்

மனைவியார் இறந்ததை எண்ணி வருந்தியதால் இன்று நெஞ்சாங்குலை ஈளை நோய் என்னைத் தாக்கியது" என்று எழுதுகிறார்.

பாவாணர் தம் துணையின் பிரிவால் வடக்கிருக்கத் துணிந்ததும், அன்பர்கள் வலியுறுத்தலால் தடையுண்டதும் செவிவழிச் செய்தியாம்.

மணமாகாத என் இரு மக்களுக்காகவே உயிர் தாங்கிக் கொண்டிருக்கிறேன் என்னும் பாவாணர், தம் மகளுக்காக அருளரை அடுத்த கோட்டப்பட்டி என்னும் ஊரில் புள்ளிமான் கலைக்குட்டி ஒன்றை 100 உருபாவிற்கு வாங்கிக்கொண்டு அரும்பாட்டுடன் ஊர் சேர்ந்திருக்கிறார். தனித்திருக்கும் மகளார்க்குத் தக்க ஆறுதல் தரும் என்னும் உருக்கமே இதற்குக் கரணியமாம்.

புள்ளிமான் கலைக்குட்டி மட்டும் இருந்தால் எப்படி? அது பெரிதானால் பிணைக்குட்டி வேண்டும் ; இல்லாக்கால் மலை நாடலாம் என்னும் எண்ணம் பாவணரின் ஆருயிர்க் காதலுள்ளத்தில் அரும்புகின்றது ! பின்னே பிணைக் குட்டிக்கும் அலமருகிறார் !

பாவாணர் உள்ளொத்த காதல் நெஞ்சத்திற்குப் பல சான்று வேண்டுவதில்லை. கணவன் மனைவியர் பெயரைப் பிரித்து எழுதுவதையும் ஏற்காதவர் பாவாணர் என்பதே சாலும் ! அவர் எழுதிய திருமண வாழ்த்துகள் அனைத்திலும் இந்நெறிமுறையே முறையாதலைக் காணலாம்.

நகைநலம்

பாவாணரின் தோற்றத்தைப் பார்ப்பவர்க்கு இவர்க்கும் நகைச் சுவைக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்றே நினைவர். ஆனால் சிறிது பொழுது உரையாடிய அளவிலேயே குலுங்கக் குலுங்கத் தாமும் நகைப்பர் ; பாவாணர் நகைத்தலைக் கண்டும் வியப்பர். வீறுமிக்க இந்த மீசைக்குள்ளும் ஆழ்ங்கால் பட்ட ஆய்வுக் குள்ளும் இத்தகு நகை நலமா ! என மருட்சியுறுவர். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதன் பட்டடைக் களமாகவே வாழ்வியலில் இருந்து பாவாணர் கொள்ளை கொள்ளும் குழந்தைமை நகைப்புக்குக் களமாகத் திகழ்ந்தார் என்பது வியப்பில் ஆழ்த்துவதாம்.

பா.வே. மாணிக்கர் உடன்பிறந்தார் பா.வே.பொன்னுசாமி, அவர் தலைமையில் பாவாணர் 'பரிமேலழகரின் சறுக்கல்' என ஓர் ஆய்வுப் பொழிவு செய்தார். ஒவ்வொரு கருத்தையும் தலைவர் மறுத்துரைத்துப் 'பாவாணர் கடும் சறுக்கல்' என்று முடிப்புரைத்தார். ஒவ்வொரு மறுப்புக்கும் அவர் எவரையோ மறுப்பதாக எண்ணிக் குலுங்கக் குலுங்க நகைத்தார் ! இப்படி வளர்ந்த குழந்தையாக இருப்பாரைக் காண இயலுமா?

சேலம் கல்லூரி முதல்வர், இராமசாமியார் ; கல்லூரி, நகராட்சிக்கு உட்பட்டது ; நகராட்சித் தலைவரையும் கல்லூரி முதல்வரையும் குறித்துக் கல்லூரிச் சுற்றுச் சுவர்களில் ஒருநாள் குறைகூறி எழுதப்பட்

டிருந்தது. அதனைக் கண்ட முதல்வர், பலரைக் கூட்டிக் கலந்து பேசினார். 'எவர் செய்திருப்பார்' என உசாவினார். பாவாணர் அவ்விடத் திற்குச் சென்றார். இராமசாமியார் கனிய நம்பிக்கையுடையவர் என் பதைத் தெரிவார் ஆதலால், "ஏன் நாம் இவரா அவரா எனத் திகைத்துக் கொண்டிருக்க வேண்டும் ; கனியரைக் கேட்டால் சொல்லி விடுகிறார்" என்று பெருநகை நகைத்தார். பாவாணரின் கரவிலா உள்ளத்தை முதல்வர் அறிவார் ஆதலின் தாமும் நகைத்த அளவில் அமைந்தார் !

ஒரு நாள் சென்னை நகரப் பேருந்தில் பாவாணர் உடன் வந்தேன் ; உட்கார இடமில்லாமையால் நிற்க நேர்ந்தது ; வண்டி யோட்டத்தில் மிகுந்த குலுக்கல் உண்டாகியது ; பாவாணர் நகைத்துக்கொண்டே 'அங்கம் ஆடுகின்ற இடம்தான் அங்காடி' என மலையாள அகரமுதலி கூறுகின்றது. பேருந்தையும் அங்காடி என்று கூறலாம். ஏனெனில், இங்கேதான் "அங்கம் நன்றாக ஆடுகின்றது" எனப்பெருநகை செய்தார். வண்டியின் இயல்பான ஆட்டத்தொடு பாவாணர் தாமே தம் உடலை அசைத்துக் காட்டியமை 'எத்தகைய குழந்தை இவர்' என எண்ணத் தோன்றியது.

வெளியூர் போய்வந்த பாவாணரை அன்பர்கள் இரவுணவு பகலுணவு ஆகியவை எப்படி இருந்தன என வினவினர். பாவாணர் இரவு உணவு 'இரா' உணவு ; பகல் உணவு பகல் (பிரித்துண்ட) உணவு என்றார். இயல்பாக எழுந்த இரட்டுறல் (சிலேடை) நகைச் செய்தி இது.

பொதுமக்கள் பயனுக்காகக் 'குடிதண்ணீர்' வைக்கப்பட்டிருந்தது. அதில் 'குடிதண்ணீர்க்கு மட்டும்' என எழுதியிருந்தனர். அதில் எவனோ ஒருவன் 'க்' என்பதை அழித்துவிட்டான். அதனைக் குறிப்பிடும் பாவாணர் 'குடிதண்ணீர் குமட்டும்' எனப் பலரும் குடியாது சென்றனர் என்கிறார்.

குற்றியலுகரம் உயிரீறே என்பது பாவாணர் முடிவு. அதனை ஒற்றீறாகக் கொண்டு ஆய்ந்தவர் அறிஞர் வேங்கடராசுலு என்பார் ; அதற்கு முன்னுரை வழங்கியவர் பேரா. வையாபுரியார். இதனைக் குறிப்பிடும் பாவாணர் "ஒற்றைக் கண்ணனுக்கு ஓரக் கண்ணன் சான்று கூறியது" போன்றது என்று நகைக்கிறார். (ஆய்) அண்டிரன் என்பது ஆந்திரன் என்பதிலிருந்து வந்தது என்பது, பரதன் என்பவனில் இருந்து பிரிட்டன் என்பது பிறந்தது என்பது போன்றது என எள்ளுகிறார்.

"நோய் போய், வியாதி வந்தது; வியாதி போய்ச் சீக்குவந்தது ; இனிச் சீக்குப் போய்ப் பீமாரி வரும்" என்று பாவாணர் சொல்வது நகையாட்டுப்போல் இருப்பினும் வடமொழிக்கும் ஆங்கிலத்திற்கும் தமிழ் அடிமைப்பட்டுக் கிடத்தலை விளக்குவது அன்றோ இது!

"ஆங்கிலர் போன்ற மேலையர் ஆட்சி இங்குத் தோன்றியிராவிடின் தொடர் வண்டிகளில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் (தீண்டாதார்) என்னும் ஐந்து வகுப்புகளேயன்றி முதலாவது இரண்டாவது மூன்றாவது என்னும் வகுப்புக்கள் தோன்றியிரா" என்கிறார்

பாவாணர். பாடலுக்கும் எழுத்துக்கும் பிறபிறவுக்கும் வருணப் பகுப்புச் செய்தவன் கொடுமையை நினைத்துக் கூறும் குறிப்பேயன்றோ இது !

"நகரம் நரக மாகின்றது; மாநகரமோ மாநரகமே ! சாலை நடுவிற் சென்றால் வண்டிகட்கு அச்சம்; ஓரத்திற் சென்றால் ஈறுமாறு நகரத்திற்கு (நரகம் - நரகல்) அச்சம்! இத்தகைய தீய நாற்றச் சூழலில் தூய காற்று எங்ஙனம் வீசும்? வீசும் காற்றெல்லாம் வீச்சமன்றோ"- சில எழுத்துக்களை முன்பின் தள்ளியும், சொல்லமைப்பைச் சற்றே மாற்றியும் செய்யும் நடைச்சுவை நகைச் சுவையல்லவோ! நகைச் சுவைப் புனைவு ஒன்று பாவாணர் இயற்றிய கட்டுரை இலக்கணத்தில் (257 - 8) இடம் பெற்றுள்ளது ! பாவாணர் புனைவோ, பிறர் புனைவை வாங்கியெழுதி யதோ தெரிந்திலது;

"ஒரு முரட்டுச் சேவகன் தன் மனைவியை நாள் தோறும் காரணம் இல்லாமல் அடிக்கையில் அவள் 'நீ ஏன் இப்படி என்னை அடிக்கின்றாய்?' என்று கேட்டாள். அதற்கு அவன் 'நான் சொன்னபடி செய்யாமையால் அடிக்கின்றேன்' என்று சொன்னான். உடனே அவள் அவனுக்கு மதி கற்பிக்க எண்ணி இனிமேல் நீ சொன்னபடியே செய்கின்றேன். ஆனால், என்னை அடிக்கக் கூடாது என்று சூள் (ஆணை) இடுவித்துக் கொண்டாள்".

பின்பு ஒரு நாள் 'அடி! அடி! எங்கே போகிறாய்?' என்று கேட்டான். அவள் ஓடிவந்து அவனை இருமுறை அடித்து 'நீ சொன்னபடி செய்தேன்' என்றாள். மற்றொரு நாள் அவன் அவள் தலையில் உமியைப் பார்த்து, 'அடி ! தலையில் உமி' என்றான். அவள் உடனே அவனை ஓரடி அடித்து அவன் தலையில் உமிழ்ந்தாள், வேறொரு நாள் கொஞ்சம் பணம் கொண்டு வந்து கொடுத்து, 'இதை வீட்டுக்குள்ளே வை' என்றான். அவள் அதை வீட்டுக்குள்ளே கொண்டு போய் 'முடனுடைய பணமே ! முரடனுடைய பணமே' என்று வைதுகொண்டிருந்தாள். அவன் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து அறிவடைந்து அதற்குப் பிறகு அவளை அடிப்பதை நிறுத்தி விட்டான்" என்பது அது.

ஈகம்

ஒரு கொள்கைக்காகத் தன் உறுப்பையோ உயிரையோ கொடுப்பது மட்டும் ஈகம் அன்று; எதிர் பார்ப்பு இல்லாமல் தன் ஓரோ ஒரு வேளைக்கு இருந்த உணவைத் தருவதும்கூட ஈகமேயாம். பாவாணர் தம் நிலையில் இருக்கும் எவரும் செய்யத் துணியாத ஈகம் செய்ததுண்டு.

பாவாணர் மன்னார்குடியில் பணிசெய்த காலம், இடைநிலைக் கல்லூரியாக இருந்தது நிலை தாழ்ந்து சுருங்கியது. உயர்நிலைப் பள்ளியாம் அளவுக்குச் சுருங்கிய அதனால், முதுநிலை அடிப்படையில் இளையவர் பலர் வெளியேறி வேறிடங்களில் பணி தேடவேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. அந்நிலைக்கு ஆட்பட்டவர்களுள் தமிழ்த் துறை சார்ந்த கோபால கிருட்டிணர் என்பார் ஒருவர்.

கோபால கிருட்டிணர் மனைவி மக்களொடு இருந்தவர். அவர் குடியிருந்த வீடு அதற்குச் சற்றே முன்னர்ப் பெய்திருந்த அடைமழையால் இடிந்துவிட்டது! அந்த இழப்பைத் தாங்கி மனைவி மக்களொடு வாழ்க்கை நடத்தி வருபவர். அவர் வேலையின்றி வறுமையில் வெளியேற நேர்ந்தால் என்ன துயர்ப்படுவர்! என எண்ணினார் பாவாணர். அவர்க்கும் மனைவி மக்கள் இருந்தனர். வளமான வறுமையும் என்றும் படையெடுத்தபடியே இருந்தது. எனினும், பாவாணர் உள்ளம் உருகியது! கோபால கிருட்டிணர் வெளியேறித் தொல்லையுறா வகையில் தாம் வெளியேறினார்! வேலை கையில் வைத்துக்கொண்டு வெளியேறினாரா? வேலை உறுதியில் வெளியேறினாரா? வைப்புப்பணம் கொண்டு வாழ முடியும் என வெளியேறினாரா? "இம்மாதம் 15ஆம் நாளுக்குள் 10ரு அனுப்ப முடியுமானால் அனுப்புக. கடன் கழுத்தை நெருக்குகிறது" என்னும் சங்குப்பிடியில் இருந்துகொண்டுதான் பாவாணர் தம் வேலையை வழங்கினார். 'அடுத்த வேளைக்கு என்ன செய்வோம்' என்று ஏங்குபவருடன், 'இந்தப் பணத்தை என்ன செய்வது?' என்று தெரியாமல் திரியும் செல்வர்களும் போட்டியிட்டு வேலைபெறும் நிலையையும், பாவாணர் ஈகத்தையும் எண்ணிப் பார்க்கும்போதுதான், உயிர்க் கொடையினும் உயர்கொடை இது என்பது புலனாம்! "உண்டி கொடுத் தோர் உயிர் கொடுத்தோரே" என்பது பழந்தமிழ்ச் செய்தி !

3. பாவாணர் ஆய்வு

ஆய்வு

தமிழ் எழுத்துகளில் தனிநிலை என்பதோர் எழுத்து தனிநிலை என்னும் பெயரீடே அஃது ஓர் எழுத்தே என்பதைக் காட்டும். அதற்கு 'ஆய்தம்' என்று ஏன் பெயர் வந்தது ? தமிழில் உள்ள எழுத்துகளில் நுண்ணிய ஒலியுடைய எழுத்து ஆகலின், அதற்கு அப்பெயரை முந்தையோர் இட்டனர்.

> "ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
> ஆ வயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"

என்பது தொல்காப்பியம் (உரி. 32). நுணுக்கம் என்னும் பொருளடியாக வந்ததே ஆய்தல், ஆய்வு, ஆராய்தல் என்னும் சொற்களாகும்.

நுணுக்கமாகப் பாராமல் ஆய்தல் உண்டா? பருமலையை ஆய்ந்தாலும் நுணுக்கமாகப் பாராமல் ஆய்வு நிகழாதே ! கடிகாரப் பொறியை ஆய்பவர் ஒரு பக்கக் கண்ணுக்கு உருப்பெருக்காடி வைத்து எவ்வளவு நுணுகி நோக்குகின்றார். சில முதியவர் பார்வைக் கூர்ப்புக் கருதிக் 'கவிகண் நோக்கினராதல் நாம் காணாத தன்றே!'.

சிற்றூர்ப்புற வழக்கில் ஆய்தல் மிகவளமாக இடம் பெற்ற ஆட்சியுண்டு, காய் ஆய்தல் ; கீரை ஆய்தல் ; குழை ஆய்தல் என்பன. கறிக்கு வேண்டும் காய், கீரை, குழைகளை ஆய்ந்து பார்க்காமல் பயன்படுத்த முடியுமா? முற்றல், நோய், பிஞ்சு, வாடல், சூன் என்பவற்றை ஆய்ந்து பறித்தல் உண்டே ! நார், நரம்பு, அழுகல், பூச்சி, புழு, காம்பு, கணு ஆயாமல் கறிக்குப் பயன்படுத்துவது இல்லையே ! இவ்வாறு மாசு மறுபோக்கித் தள்ளுவ தள்ளிக் கொள்ளுவ கொள்ளலே ஆய்வாகும்.

'கரு 'ஆய்' இருப்பவள் 'ஆய்' ஆகிறாள்'. அதுபோல் அறிஞனும் ஒரு கருவை - கருத்தைப் பன்னெடு நாள் தாங்கி, ஓர் உருவாக்கி - வடிவாக்கி - அறிஞர் முன் வைக்கிறான். ஆதலால், ஆய்வு என்பது கருத்தாங்கி உருச் செய்யும் படைப்புச் செயலாகும்.

பாவாணர் தமிழாய்வுத் தவக் காட்சியைக் கற்பனைக் கண்ணால் காணுங்கள் ! யான் நேரில் கண்ட அக்காட்சி அற்றைப் போலவே இற்றையும் கண்முன் நிற்கின்றது.

பாவாணர் நாற்காலியில் அமர்ந்திருப்பார் ; மிசை (மேசை) மேல் கைகள் ஊன்றியிருக்கும்; ஊன்றிய அக்கைகள் கன்னத்தைத் தாங்கி

யிருக்கும்; கைவிரல்கள் நிமிர்ந்து விரிந்து கன்னப் படலத்தில் படிந் திருக்கும் ; கண்களோ மூடியிருக்கும் ; இப்படி இருப்பது 10 நிமையம் 15 நிமையங்களா? ஒருமணி ஒன்றரை மணி என்று கூட இருக்கும், இடை இடையே கால்கள் மெல்லென அசையும் ; நெற்றிச் சுருக்கம் ஏறி இறங்கும் ; ஓரொருகால் வலக்கைப் பெருவிரல் வலக்கண்ணின் மேலும் நடுவிரல் இடக்கண்ணின் மேலும் சுட்டுவிரல் நெற்றிப் பொட்டின் மேலும் முச்சுட்டாய் நிற்கும். அத்தவக் கோலம் நிறைவுற்றதா? கிடுகிடு என ஒரு பேராராய்ச்சிக் கட்டுரை எழுத்துருப் பெற்றுப் பிறந்து விடும்.

பகலா இரவா? அந்தியா சந்தியா? எந்த வேளையிலும் இந்தத்தவம் கூடிவிடும் ! தம்மை மறந்த தமிழ்த் தவத்தில் பாவாணர் ஒன்றிய போதெல்லாம் என்னை மறந்து அக்காட்சியில் ஒன்றிப்போவேன். வள்ளலார் பெருமான் அருளிச் செய்த 'யான் படிக்கும் போதென்னை நானறியேன் ; நாவொன்றோ? ஊன் படிக்கும் ; உளம் படிக்கும் ; உயிர் படிக்கும் ; உயிர்க்குயிரும் தான் படிக்கும் ; அனுபவங்காண்' என்னும் பட்டறிவுப் பாடல் வரிகள் என்னுள் பட்டொளி செய்யும்! வள்ளலார் மாளிகைக்கு ஏற்ற தவம் ! இத்தவத்தை இனிக்காணவும் கூடுமோ?

ஆய்வு மூலம்

பாவாணர் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டவர்களுள் தலை யாயவர் மறைமலையடிகள் அவரே தனித் தமிழ் இயக்கத்தின் தந்தையார். தனித்தமிழ் இயக்கம் உருவாகுமாறு அவர் எப்படி உருவாகியிருந்தார் ; அவ்வுருவாக்கம் எப்படி இயக்கத்திற்கு வலுவாக அமைந்தது என்பதை அறிந்துகொண்டால் அது பாவாணரின் ஆய்வு மூலம் காணற்கு ஏந்தாக அமையும். அடிகளார் தாம் இயற்றிய 'திரு வொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை' முகப்பிலே தம் இளந்தைப் பருவக் கல்வியைக் குறிப்பிடுகிறார்.

"எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டில் பெரும்பாலும் நிரம்பியதெனலாம். இருபத்தோராம் ஆண்டிற்குள், தொல்காப்பியம் திருக்குறள் சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தோம்."

கலித்தொகை பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் நாலடி முதலிய நூல்களிற் பெரும் பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப் பட்டன.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் நூல்கள் இரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன. இவையே யன்றி நன்னூல் விருத்தி இறையனார் அகப்பொருள் உரை தண்டியலங் காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன வாகும்.

கல்லாடம் சீவகசிந்தாமணி பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை பொருட்சுவைகளில் பெரிதும் மூழ்கியிருந்தும் அவற்றில் இருந்து எடுத்துப் பாடம் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை. என்றாலும் அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமது உள்ளத்தில் வேரூன்றி நின்றன.

"இங்ஙனமாக விழுமிய தமிழ்ப் பழநூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச்செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று. எழுதும் திறம் வாய்ப்பவே அவைக்களங்களில் பேசும் திறமும் அதனை யொட்டி வாய்ப்ப தாயிற்று" என்கிறார்.

அழுந்தி நின்று கற்ற பழந்தமிழ் நூற் பயிற்சியே அடிகளார்க்குத் தனித்தமிழ் ஆற்றலை வழங்கியது என்பது தெளிவாகின்றது. ஏனத்தில் இருந்தால் தானே எடுக்கும் அகப்பைக்கு வரும்?

இனிப் பாவாணர் ஆய்வுத் திறத்திற்கு மூல வைப்பாக அமைந் திருந்தவை எவை எனக் காண்போம்.

ஒரு மொழிக்கு வளமாக இருப்பவை வழக்குகள் ஆகும். அவ்வழக்குகள் எழுத்து வழக்கு, பேச்சுவழக்கு என்பன.

எழுத்து வழக்கில் இலக்கணம், இலக்கியம், நிகண்டு, அகரமுதலி, உரை, உரைநடை இன்னவெல்லாம் அடங்கும். பேச்சு வழக்கில், இட வழக்கு, இனவழக்கு, பழமொழி, விடுகதை, நாட்டுப்பாடல், ஆட்டவகை, விழாக்கோள் இன்னவெல்லாம் அடங்கும். இவ்விரு வழக்குகளும் ஆய்ந்து செய்யப்பட்டதே தொன்னூலாம் தொல்காப்பியம். அதனால்,

> "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
> எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி"

என்கிறது அதன் பாயிரம், இவ்விரு வழக்குகளிலும் பாவாணர் நிலையென்ன?

பாவாணர் எடுத்துக் கொண்ட ஒரு செய்தியை நிலைநாட்டுதற்கு, நாட்டுவழக்கைக் காட்டுவார்; நாட்டின் உட்பிரிவாம் மாவட்ட வழக்கைக் காட்டுவார் ; வட்டார வழக்கையும் உள்வட்டார வழக்கையும் காட்டுவார்; ஊர்வழக்கு உலக வழக்கு தொழில்வழி குடிவழி வழக்கு களையும் காட்டுவார். இத்திறம் எதனால் அமைந்தது?

பாவாணர் பிறந்ததும் உயர்பள்ளிக் கல்வி பெற்றதும் நெல்லை மாவட்டத்தில் நிகழ்ந்தவை; முகவை மாவட்டத் தென்மேற்குக் கோடியில் அமைந்த சீயோன் மலை என்னும் முறம்பில் தொடக்கக் கல்வி கற்றதுடன், அப்பள்ளியிலேயே ஆசிரியப் பணியும் செய்தவர்; மதுரை மாவட்டத் தொடர்பும் அணுக்கமும் அவர்க்குப் பட்டம் வழங்கவும் மணிவிழாக் காணவும் இடமாயின. தஞ்சை மாவட்டத்து மன்னார்குடிப் பணி இசை, இலக்கணப் பயிற்சியைச் சிறக்கச் செய்தது ; திருச்சி பிசப்பு ஈபர்

உயர்நிலைப் பள்ளிப்பணி, பாவாணரை மொழித் தொண்டில் முனைப்புறத் தூண்டிய காலத்தது ; சேலம் நகராட்சிக் கல்லூரி வாழ்க்கை, பெருநிறைவுக்குரியது ; கோவை ஈரோட்டுத் தொடர்பும் அக்காலத் தமைந்ததே. தென்னார்க்காட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக வாசகர் பணியும், வடஆர்க்காட்டு ஆம்பூர்ப் பணியும் காட்டுப் பாடி வாழ்வும் அமைந்திருந்தன. சென்னையில் சிலபல பள்ளிகளிலும், அகர முதலி இயக்ககத்திலும் பணிபுரிந்த சூழல்கள் உண்டு. நீலமலைக் குச் சென்று அம்மக்கள் வழக்கை ஆய்ந்ததும் உண்டு. இவ்வனைத்தும், பேச்சு வழக்குத் திறத்திற்குப் பேருதவியாக வாய்ந்தவை! ஏனெனில், பாவாணர் ஒரோ ஓர் இடத்தில் அமைந்து பணிசெய்தார் என்று இல்லாமல் ஓடி ஓடி அலைந்த வாழ்வு, ஒரு பெரும் பயனைத் தமிழ் உலகுக்கு வழங்கத் துணையாயிற்று என்பதே ;

பாவாணர் கற்ற நூற்பரப்பைச் சுட்ட வேண்டியதில்லை. 'ஓதுவது ஒழியேல்' என்பதை அவரைப் போலக் கொண்டிருந்தாரைக் காண்டல் அரிது. வாட்டும் வறுமையிலும் ஈட்டும் அனைத்தும் இதற்கே எனக் காட்டுமாப்போல நூற்றொகுதிகளுக்குச் செலவிட்டு வாங்கியவர் பாவாணர். 1924 முதல் 1934 வரை பத்தாண்டுகள் தமிழாய்வில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டம் கண்ட செய்தியைச் சுட்டுகிறார் பாவாணர் !

அடிகளார் ஐந்தாண்டு அரும்பாடுபட்டார் என்றால், பாவாணர் பத்தாண்டு பாடுபட்டார் ! இயற்றமிழுடன் இசைத் தமிழ்த் தேர்ச்சியும், கருவி இயக்குதலும் தெளிந்தார். 'பழமொழிகள் பதின் மூவாயிரம்' தொகுத்தார்! பழமொழி தொகுத்துத் தரும் மாணவர்க்கு இத்தனை பழமொழிக்கு இவ்வளவு காசு எனக் காசு தந்தும் தொகுத்தார்! எப்பொழுது? 1939ஆம் ஆண்டிலேயே!

தமிழ் நாட்டு விளையாட்டுகள் பற்றிய அரிய தொகுப்புச் செய்தார். உழவடைச் சொற்கள், பழக்க வழக்கச் சொற்கள், குடிவழி குலவழிச் செய்திகள், இணைச் சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், வழூஉச் சொற்கள் தமிழிற் புகுந்த பிறமொழிச் சொற்கள், ஒவ்வொரு புலவர்க்கும் உரிய சிறப்புச் சொற்கள் இன்னவெல்லாம் தொகை தொகை யாய்த் தொடர் தொடராய்த் தொகுத்தார்.

அகர முதலி நூல்களே, எட்டுப் பேழைகள் அளவுக்கு இருந்ததைச் சுட்டி ஒருவர் வியப்புறுகிறார்! சென்னை அகரமுதலியில் இடம்பெற வேண்டிய விடுபாட்டுச் சொற்கள் தருதற்கும், அதனைச் செப்பப்படுத்து தற்கும் தம்மையன்றிப் பிறர் ஒருவர்க்கு இயலாது என்று சொல்லும் 'மதுகை' பாவாணர்க்கு இருந்ததென்றால், அவரே சொற்களஞ்சியமாக வும், சொல்லாய்வுத் திறவோராகவும் இருந்தமையால் கூறியதன்றிச் செருக்கெனச் சொல்ல முடியுமா?

தமிழ்மொழியளவில் பாவாணர் புலமை அமைந்ததோ? அடிகளாரின் மும்மொழிப் புலமை, பரிதிமாற் கலைஞரின் மும்மொழிப் புலமை, கால்டுவெலார், ஞானப்பிரகாச அடிகளார் பன்மொழிப் புலமை - இன்ன முன்னோடிகள் போலப், பாவாணர் பெற்ற பன் மொழிப் புலமை இணையற்றதாம். திரவிட மொழிகள் இந்திய மொழிகள் உலக மொழிகள் ஆகியவற்றில் பெருமொழி களாய் அமைந்த 23 மொழிகளின் இலக்கண அறிவும் பெற்றவர் பாவாணர் என்னின் 58 மொழிகளில் வேர்ச்சொல் காட்டியவர் என்னின் அப்படிச் சொல்லத் தக்கார் ஒருவர் எவர் இம்மண்ணில் இருந்துளர்? 'மூளைக் கூர்ப்புடைய ஒருவர் எளிமையாக ஐம்பது மொழிகளைப் படித்துக்கொள்ளலாம் என்று பாவாணர் கூறுவது பட்டறிவின் வெளிப்பாடு என்பதற்குத் தடையுண்டா?

பாவாணர் ஆய்ந்து ஆழ்ந்த துறையும் வாழ்ந்து பணி செய்த துறையும் ஒரே தமிழ்த்துறையாயிற்று. பிறதுறை வகையால் பெற்ற அறிவும் தமிழாய்வுத் துறைக்கு ஊட்டமும் ஊற்றமும் தருவதாகவே அமைந்தது. பொருளியல் தேடும் தனிப்பயிற்சி வகைக்கோ, தனித்தொழில் வகைக்கோ, மக்களின் வருவாய்த் துறை வகைக்கோ தம் பொழுதில் ஒரு சிறு பகுதியையும் செலவிடுதல் இல்லாமல் காலமெல்லாம் தமிழாய்வுக்கே பயன்படுத்தினார். எத்தகைய எளிய முயற்சியால் அரிய தேட்டுகளைத் தேடிக்கொள்ளும் ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் மலிந்து கிடப்பதைக் காணும்போதுதான் பாவாணரின் ஆய்வின் 'ஒருமை' உண்மையாய் விளங்கும்.

ஆய்வுத் தூண்டல்

அரத்தப்பழம் (ஆப்பிள்) நிலம் நோக்கி வீழ்தல் ஐசக்கு நியூட்டனார்க்கு முன்னர் நிகழ்ந்ததில்லையா? நியூட்டனாரும் அதற்கு முன்னர் அவ்வாறு விழக்கண்டிராரா ! எங்கும் என்றும் நிகழும் நிகழ்ச்சிதானே அது. ஆயினும் அன்று தூண்டிய தூண்டலே புவியீர்ப்புக் கொள்கையை உலகுக்குத் தந்தது! இவ்வாறு கிட்டிய தூண்டல் நியூட்டனாரை உந்தியது போல் மற்றையோரை உந்தாமை ஏன்? அவரை உந்தியதும் ஏன்? அவ்வுந்துதலை உணரும் பக்குவம் நியூட்டனாருள் அப்பொழுதில் முனைந்து நின்றதே காரணியமாம்.

சுடர் விளக்கு ஆயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதுபோல், பழம் வீழ்தல் தூண்டலாயிற்று. மறைமலையடிகளார் 1898 ஆம் ஆண்டுக்கு முன்னரே 'தனித்தமிழ்த் தீஞ்சுவை உரைநடையிற் பெரிது பழகியமையைத் தாமே குறிப்பிடுகிறார். தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர், "வடசொற்கலவா உனது உரைநடையே இனிதாயும் எவர்க்கும் எளிதில் பொருள் விளங்கத் தக்கதாயும் இருத்தலால் உனது நடைப் படியே எழுது; எனது உரைநடையைப் பின்பற்றாதே" என்றதையும் கூறுகிறார்.

1903இல் வெளியிட்ட முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையில், "இந்நூலின் ஐந்நூறு சொற்களில் ஒன்பதே வடசொற்கள்; இரண்டு திசைச்சொற்கள். ஆகலின் நூற்றுக்கு இரண்டு விழுக்காடே பிற சொற்கள்" என்றும்,

1906இல் வெளியிட்ட பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையில், இந்நூலின் 1369 சொற்களில் பதினொரு சொற்கள் வடசொற்களும், ஒரு சொல் திசைச் சொல்லுமாக நூற்றுக்கு ஒன்று விழுக்காடே பிற சொற்கள்" என்றும் கூறுகிறார்.

இந்நூலின் பிறபதிப்புகளில் தாம் கையாண்டிருந்த வடசொற்களையும் களைந்து பதிப்பிக்கிறார். ஆகலின், அடிகளார் தனித்தமிழ் இயக்கம் காணும் பக்குவநிலையை அல்லது முதிர் நிலையைப் படிப்படியே இருபானாண்டுகள் எய்திய பின்னரே, தனித்தமிழ் இயக்கம் காணும் தூண்டுதல் உண்டாகிச் சிறப்புற்றதாம். பண்படுத்தா நிலத்தில் எத்தகைய பயன்வித்து விழுந்தாலும் பயனாவதென்ன?

1916ஆம் ஆண்டு. அடிகளாரின் அருமை மகளார் நீலாம்பிகையார்க்கு அகவை 13. வள்ளலார் பாடிய, "பெற்றதாய்தனை மகமறந்தாலும், பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்" என்பதைக் குயிலென இசைத்த அடிகளார், நீலா! இப்பாடலில் தேகம் என்றுள்ள வடசொல் ஒன்றனையும் நீக்கி அவ்விடத்தில் 'யாக்கை'என்னும் தமிழ்ச்சொல் பெய்யப் பெற்றிருக்குமானால் இச்செய்யுளின் ஓசை இன்பம் எவ்வளவு மேம்பட்டதாக இருக்கும் ! பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழின் இனிமை குறைகின்றது. அன்றியும் நாளடைவில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலைபெற்று அச்சொற்களுக்கு நேரே வழங்கிவந்த நம் அருமைத் தமிழ்ச்சொற்கள் மறைந்து விடுகின்றன"என்றார்.

"அப்படியானால் நாம் அயன்மொழிச் சொற்களை விலக்கித் தனித்தமிழிலேயே பேசுதல் வேண்டும். அதற்கான முயற்சிகளைக் கைவிடாது மேற்கொள்ள வேண்டும்" என்றார் நீலாம்பிகையார்! அடிகளார் உள்ளத்தில் கிடந்த தனித்தமிழ்முகை, அப்பொழுதில் மலர்ந்து மணம் பரப்புவதாயிற்று!

பாவாணர், ஆய்வுக்குரிய மூலங்களைத் தன்னகத்துக் கொண்ட ஆழ் கடலென விளங்கினார். ஆனால், அதற்கொரு தூண்டல் வேண்டுமே! அவரே அந்நிலையைக் குறிப்பிடுகின்றார்:

"பள்ளியிறுதி, இடைநடுவு, கலை இளைஞர் முதலிய பல்வகைத் தேர்வுகட்கும் உரிய தமிழ்ச் செய்யுட் பாடங்களுக்குத் தொடர்ந்து உரை அச்சிட்டுவரும் சில உரையாசிரியர்கள், தமது வரை இறந்த வடமொழிப் பற்றுக் காரணமாகத் தென்சொற்களை யெல்லாம் வட சொற்களாகக் காட்டவே இவ்வுரை எழுந்தனவோ என்று தனித்தமிழர் ஐயுறுமாறு, கலை-கலா; ஆவீறு ஐயான வடசொல்; கற்பு - கற்ப என்னும் வடசொல்;

சேறு - ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு; உலகு - லோகம் என்னும் வடசொல்லின் திரிபு ; முனிவன் -மோனம் என்னும் வடசொல் அடியாய்ப் பிறந்தது; முகம் - வடசொல்; காகம்-காக என்னும் வடசொல்; விலங்கு- திரியக்ஸ் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு - எனப் பல தூய தென் சொற்களையும் வடசொற்களாகத் தமது உரைகளில் காட்டிவரு வது பத்தாண்டுகட்குமுன் என் கவனத்தை இழுத்தது. உடனே அச்சொற் களை ஆராயத் தொடங்கினேன்" என்பது. இது ஒப்பியன் மொழிநூல் முகவுரையில் உள்ளது. ஒப்பியன் மொழிநூல் 1940இல் வெளிவந்தது. அதற்குப் பத்தாண்டுகளின் முன்னரே பாவாணர் கவனம் சொல்லாய் வில் இழுக்கப்பட்டுள்ளது. அது, ஏறத்தாழ 1930 என்க.

ஆராயத் தொடங்கிய பாவாணர் தாம் ஆய்ந்த வகையையும் ஆய்வின் முடிவையும் தெளிவாக விளக்குகிறார் :

(வடமொழி என உரையாசிரியர்களால் சொல்லப்பட்ட) அவற்றின் வேர்களையும் வேர்ப் பொருள்களையும் ஆராய்ந்தபோது அவையாவும் தென் சொல்லென்றேபட்டன. அவற்றை முதலாவது வடமொழிக்கும் தென் மொழிக்கும் பொதுச் சொற்களாவும், போலிப் பொதுச் சொற்களாகவும் கொண்டு இவ்வுண்மையை வேறொரு மொழி யினின்றும் ஒருபோகு முறையான் உணர்த்துமாறு, ஆங்கிலத்திற்கும் தமிழுக்குமுள்ள பொதுச் சொற்களை ஆராயத் தொடங்கினேன்.

சேம்பர்க, ஸ்கீற்று என்பவர்களின் ஆங்கிலச் சொல்வி யலகராதி களைப் பார்த்தபோது ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் பொதுவான சில ஆங்கிலச் சொற்கள் அகப்பட்டதுடன் அவற்றின் வாயிலாகவே, அவற்றின் மூலமாகவோ இனமாகவோ உள்ள சில இலத்தீன் கிரேக்கச் சொற்களும் அகப்பட்டன. பின்பு இலத்தீன் கிரேக்கு அகராதிகளைத் துருவினேன். வேறுசில சொற்களும் எனக்குத் துணையாயின. அவற்றுள் Navis (நாவாய்), Amar (அமர் - அன்பு கூர்) முதலிய இலத்தீன் சொற்களும் Telos (தொலை-தூரம்), Palios (பழைய) முதலிய கிரேக்குச் சொற்களும் எனக்குப் பெரிதும் வியப்பை ஊட்டின. இவற்றுடன் தமிழ், இந்திய ஐரோப்பிய மூல மொழிக்கு மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறி யிருப்பதையும், அவரும் குண்டட்டும் வடமொழியிலுள்ள திராவிடச் சொற்கள் சிலவற்றை எடுத்துக் காட்டியிருப்பதையும், பண்டைத் தமிழகம் தென் பெருங்கடலில் அமிழ்ந்துபோன குமரி நாடென்றும், அந்நாட்டிலேயே தமிழர் தலைசிறந்த நாகரிகத்தை அடைந் திருந்தனர் என்றும் தமிழ்த் தொன்னூல்கள் கூறுவதையும், மாந்தன் முதன்முதல் தோன்றினது இலெமுரியா (Lemuria) - குமரிநாடு, என்று வியன்புலவர் ஹெக்கேல் கூறியிருப்பதையும், தமிழ் உலகமொழிகள் எல்லாவற்றிலும் எளிய ஒலிகளைக் கொண்டு இயற்கைத் தன்மை உள்ளதாய், அதன் சில பல சொற்கள் பல மொழிகளிலும் கலந்து கிடப்பதையும் சேர நோக்கின

போது தமிழின் தொன்மை, முன்மை தாய்மை முதலிய தனிப்பண்புகள் புலனாயின. பின்பு, மொழிநூற்றுறையில் ஆழ இறங்கினேன்" என்கிறார்.

"மொழிநூல் என்பது உலகமொழிகள் எல்லாவற்றையும் தழுவும் பொதுக்கலை. உலகமொழிகள் எல்லாவற்றையும் ஆரியம் (Aryan) சேமியம் (Semitic) துரேனியம் (Turanian) என்னும் முப்பெருங் குலங்களாகப் பிரித்துள்ளார் மாக்கசுமுல்லர். அம் மூன்றும் ஒரு மூலத்தினின்றும் கவைத்திருக்க வேண்டும் என்று அவரே திட்டமாய்க் கூறிவிட்டார். அம் மூலத்திற்குத் திராவிடம் மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியுள்ளார். இக் கூற்றை என்னால் இயன்றவரை முயன்று மெய்ப்பித்திருக்கிறேன்" என்று தம் ஆய்வுச் செலவியலையும் முடிவையும் கூறுகிறார் பாவாணர். இவ்வாய்வின் தொடக்கம் 1931இல் உண்டாகிவிட்டது என்பதைப் பாவாணர் இயற்றிய செந்தமிழ்ச் செல்விக் கட்டுரை ஒன்று நிறுவுகிறது. அக்கட்டுரை 'மொழியாராய்ச்சி' என்பது மக்கள் முதன் முதலில் பேசிய மொழி தமிழே, என்பதை அக் கட்டுரை முகவுரையில் தருகின்றார் பாவாணர். மொழி மரபினை மரம் ஒன்றை உவமை காட்டுதல் வழியே நிறுவுகின்றார் :

உலகத்திலுள்ள மொழிகள் எல்லாம் துரேனியம், செமிட்டியம், ஆரியம் என முப்பெருங் கவை (பிரிவு)களாய் அடங்கும். அவற்றுள் ஒவ்வொரு கவையும் பற்பல கிளைகளாய்ப் பிரியும். ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு மொழித் தொகுதியாகும். இவற்றுள் துரேனியக் கவையில் திராவிடக் கிளைக்குத் தலைமையாகக் கருதப்படுவது அமிழ்தினும் இனிய தமிழ் மொழியே.

ஒரு மரத்தில் சிறு கிளைகட்கு நேர் இயைபு இன்றேனும் அவற்றைத் தாங்கும் பெருங் கவைகட்கு அடிமரத்துடன் நேர் இயைபு இருப்பதுபோல, உலக மொழித் தொகுதிகட்குள் சிறு பிரிவுகட்கு நேரியைபு திட்டமாயுள்ளதாம். எல்லாக் கிளைகட்கும் மூலமான ஓர் அடிமரம் இருப்பதுபோல எல்லா மொழிகட்கும் மூலமான ஒரு தாய்மொழியும் இருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒரு தாய் வழியினராதலின் அவர் வழங்கும் மொழிகளும் ஒரு தாய் வயிற்று வழியிலாதல் வேண்டும்.

உலகத்தில் மக்கள் முதல்முதல் தோன்றின இடம் கி.மு. 20000 ஆண்டுகட்குமுன் இந்துமாக் கடலில் அமிழ்ந்து போனதும் தலைச் சங்கம் இருந்ததுமான குமரி நாடே. ஆத்திரேலியா, தென்னிந்தியா, தென்னாப்பிரிக்கா என்ற மூன்றும் தொடக்கத்தில் நிலத்தால் இசைந்திருந்தனவென்று மேனாட்டு அறிஞர்கள் கண்ட உண்மையே இதற்குப் போதிய சான்றாம். ஆகவே, மக்கள் முதன்முதற் பேசியமொழி தமிழே யாதல் வேண்டும் - என்பது பாவாணர் தரும் மொழிநூல் மரபின் எழிற்காட்சி.

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சொற்களை அகரப்படுத்திக் காட்டுகிறார் பாவாணர்; அவற்றுள் சில :

Abba - அப்பன்
Add - அடு, அடை, அடுக்கு
Ah, Aha - ஆ!
Alum - அளம்
Amour, L. amor - அமர், to love.
Animal, L. anima, Gr. anemos - ஆன்மா
Aorta, Gr. aeiro - ஏர், எழுச்சி
Arch - அரசு
Axle - அச்சு
Baby - பார்ப்பு, பாப்பா
Back - பிறக்கு (இடைக்குறை)
Bandy - பண்டி
Bag - பக்கறை
Bar - பார், பாரை
Bed - படை, படுக்கை
Bill. L, bulla - புள்ளி
Bottle - புட்டில்
Buttock - புட்டம்
Calf - களபம்
Can - கெண்டி
Canton - கண்டம்
Cash - காசு
Catamaran - கட்டுமரம்
Clay - களி
Comedy - கோமாளி
Cotton - கொட்டை, பஞ்சு
Cow - கோ
Cry - கரை
Culture - கல், பகுதி.
Daddy - தாதை
Economy - சிக்கனம்
Every - ஒவ்வொரு
Ginger - இஞ்சி
Hang - தூங்கு
Hook - கொக்கு
Iron - இரும்பு
Kid - குட்டி
Kill - கொல்
Lemon - எலாமிச்சை
Maid - மாது
Man - மன்
Meal - மெல்லப்படுவது
Metre - மாத்திரை
Mud - மண்
Nerve - நரம்பு
Nut - நெற்று
Pain - பையுள்
Path - பாதை
Price - பரிசு
Pussy - பூசை, பூனை
Putty - புட்டி
Rice - அரிசி
Sandal - சாந்தம், சந்தனம்
Sharp - கூர்ப்பு (ஆன)
Speech - பேச்சு
Tank - தாங்கல், குளம்
Tissue - தசை
Value - விலை
Want - வேண்டு
War - போர்

ஆய்வாளிக்கு உண்டாகும் நெருக்கடி

பாவாணரின் மொழியாய்வைக் கேட்டும் கற்றும் மகிழ்ந்த புலமையாளர் சிலரே! சினந்தும் வருந்தியும் இருந்தோரும் மறுத்துரைத் தோரும் பலர். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் ஆகியவற்றில் பாவாணர் கட்டுரை வெளிவந்ததாகலின் அம்மறுப்புகளையும் பாவாணர் அறிந்தே இருந்தார். அதைப்பற்றியும் ஒரு தெளிந்த அமைதியிலேயே தம் கருத்தைச் செலுத்தினார்.

ஒரு நாட்டில் ஒரு புதுக்கலை தோன்றும்போது அதில் பலர் அவநம்பிக்கை கொள்வதும், அக்கலையைக் கூறுவாரை வெறுப்பதும் இயல்பே. மொழி நூற்கலை உலகில் தோன்றி இரு நூற்றாண்டுகளாயினும், இன்னும் அது குழவிப் பருவத்திலேயே இருப்பதையும், இந்தியர்க்குப் பெரும்பாலும் தெரியாது இருப்பதையும் நோக்குமிடத்து, எனது மொழிநூல் முடிபை வெறுப்பாரை நோக்கி வருந்துவதற்கு எள்ளளவும் இடமில்லை.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் உலக முழுமைக்கும் மொழி நூற்கதிரவனாய் விளங்கிய மாக்கசு முல்லரைக் கூடப் பலர், விதப்பாய் அமெரிக்கர் குறை கூறியும் கண்டனம் செய்தும் வந்தனர், அதற்கு அவர் அணுவளவும் அசையவில்லை.

ஒரு கலையின் தொடக்கத்தில் அதைப்பற்றி எழும் நூல்களிற் பல பிழைகள் நேர்வது இயல்பு. அவற்றை அறிஞர் எடுத்துக் கூறுவதும் ஆசிரியர் அவற்றைத் திருத்திக்கொள்வதும் அக்கலை வளர்ச்சிக்கு இன்றியமையாத கடமைகளாகும். இதனால் சில போலிப் பிழைகள் விளக்கம் பெற்று உண்மை வடிவம் கொள்ளும். பொறாமை ஒன்றே காரணமாகக் கூறும் சிலரின் வெற்றொலிகளும் ஒரு நிலையில் அடங்கி விடும். உண்மையைப் பற்றிக்கொண்ட ஆராய்ச்சியாளன் ஊக்கமாய் உழைப்பின் முதலிலும் இடையிலும் தவறினாலும் இறுதியில் வெற்றி பெறுவது திண்ணம்" என்கிறார்.

"ஓர் உண்மை ஆராய்ச்சியாளன் ஒருநாளும் ஆராயாது இருக்க முடியாது. அவன் ஆராயாவிடினும் அவன் உள்ளம் ஆராயும், அதற்குக் கனவென்றும் நனவென்றும் ஊண்வேளையென்றும் உறக்கவேளை என்றும் இல்லை. சொல்லாராய்ச்சியும் மொழி ஆராய்ச்சியும் எனக்கு இயல்பான இன்பந்தரும் கலைகள், வினைபற்றி எனக்கு எல்லா நாளும் வேலைநாள். விழைவு பற்றி எனக்கு எல்லா நாளும் விடுமுறைநாள்" என்பது 'என் அண்ணாமலை நகர் வாழ்க்கை'யில் எழுதியது (54).

அகரமுதலித் துறையில் இருக்கும்போதும், "நான் ஏழு நாளும் பத்து மணிநேர வேலைக்காரன் என்றும்", மொழி நூற்கல்வியும் ஆராய்ச்சியும் எனக்கு இன்பமான பாடத்துறை அதனால், நான் இன்று பெறும் சம்பளம் 'கரும்பு தின்னக் கூலி'யாகும். ஆதலால், வேலை

செய்யாது காலத்தைக் கழிக்கவோ வேறு வேலை செய்யவோ இயலவே இயலாது" என்றும் எழுதினார்.

எடிசனார் வழக்கம்போல ஆய்வகத்திற்குப் புறப்பட்டார். அவர் நண்பர் ஒருவர் வந்து 'எங்கே புறப்பட்டு விட்டாய்' என்றார். 'ஏன்? வழக்கம்போல் என் ஆய்வகத்திற்குத்தான் போகிறேன்' என்றார்! "என்ன இன்றுமா? உன் திருமணம் இன்று அல்லவா!" என்றார். 'ஓ! மறந்து விட்டேன்' என்றார் எடிசனார்!

துணைவியார் எடிசனாரிடம், 'நாம் தேனிலவுக்கு எங்கே போகலாம்' என்றார். 'எங்கும் இல்லாத இன்ப நிலையம் ஒன்றிருக்கிறது; அங்கே போகலாம்' என்றார் எடிசனார்; மனைவியார் மகிழ்ந்தார். வழக்கம்போல் ஆய்வகத்திற்குப் புறப்பட்டார் எடிசனார்; 'தேனிலவு' என்றார் அம்மையார். 'எனக்கு இன்ப நிலையம் என் ஆய்வகமே' என்று சென்றார் எடிசனார். திருமணநாளை நினைவூட்டிய அன்பர், ஆய்வகத் தாழ்க்கோலைப் பறித்துக்கொண்டு போய்விட்டார். எடிசனார் என்னவோ போல் ஆனார்; சோர்ந்தார்; வியர்த்துக் கொட்டியது; உடனே உடல் காய்ந்தது; மூச்சுத் திணறினார்; படுத்து விட்டார். போன நண்பர் நாள் முழுவதும் திரும்பவில்லை. இருவரும் தேனிலவு சென்றிருப்பர் என எண்ணித் தம் செயலுக்கு மகிழ்ந்தார். எடிசனாரின் இனிய துணைவியார் ஓடோடி வந்தார்; 'தேனிலவு வேண்டா; தாழ்க்கோல் வேண்டும்' என்று நிலைமையைச் சொல்லி வாங்கிச் சென்றார். எடிசனார் ஆய்வகத்துள் கால் வைத்தார்; நெற்றிக்காயல் இறங்கியது; உடல் தண்ணிதானது! நோய் போன இடம் தெரியவில்லை! ஆய்வு ஒளியில் நோய் போன இடம் தெரியவில்லை! ஆய்வு ஒளியில் நோய் இருள் பதுங்கி ஒழிந்தது! ஓர் உண்மை ஆய்வாளி நிலையென்ன? பாவாணர் செய்தியோடு எடிசனார் வாழ்வை ஒப்பிட்டுக் காணின் உண்மை விளக்கமாம்! அறிவியல் என்ன! மொழியியல் என்ன! ஆய்வு, ஆய்வு தானே!

பாவாணர் இயற்றியுள்ள நூல்களின் பெயர்களை அறியவே அவர்தம் ஆய்வுப் பொருள்கள் எவை என்பது வெளிப்பட விளங்கும். நூற்பெயர்கள் அனைத்தும் நூற்பொருளை அடக்கியனவாகவே விளங்கியவையாகலின்.

நூல்கள் காலவரிசையில்

சிறுவர் பாடல் திரட்டு (1924),

மருதநிலப் பாடல் (1925),

கிறித்தவ கீர்த்தனம் (1932),

துவாரகை மன்னன் அல்லது பூபாரந்தீர்த்த புண்ணியன் (1932),

கட்டாய இந்திக் கல்விக் கண்டனம் (1937),

கட்டுரைக் கசடறை (1937),

கட்டுரை வரைவியல் (1939),

வேர்ச் சொற் சுவடி (1940),

ஒப்பியன் மொழி நூல் (1940),

இயற்றமிழ் இலக்கணம் (1940),

சுட்டு விளக்கம் (1943),

திரவிடத் தாய் (1944),

தொல்.எழுத்து.நச்.குறிப்புரை (1944)

தொல்.சொல்.சேனா.குறிப்புரை (1946),

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949),

உயர்தரக் கட்டுரை இலக்கணம் (1950-51),

பழந்தமிழாட்சி (1952),

முதல் தாய்மொழி (1953),

தமிழ் நாட்டு விளையாட்டு (1954),

தமிழர் திருமணம் (1956),

சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியின் சீர்கேடு (1961),

பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும் (1966),

The Primary Classical Language of the World *(1966)*,

இசைத்தமிழ்க் கலம்பகம் (1966),

தமிழ் வரலாறு (1967),

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் (1968),

வண்ணனை நூலின் வழுவியல் (1968),

திருக்குறள் தமிழ் மரபுரை (1969),

இசையரங்கு இன்னிசைக்கோவை (1969),

தமிழர் மதம் (1972),

தமிழர் வரலாறு (1972),

வேர்ச் சொற் கட்டுரைகள் (1973),

மண்ணில்விண் (1978),

தமிழ் இலக்கிய வரலாறு (1979)

என்பன.

பாவாணர் நூல்கள் அனைத்தும் ஒருமொத்தமாகத் தமிழ்மண் பதிப்பகத்தின் வழியே வெளிவந்தது. பின்னர் அவர் வரைந்த கட்டுரைகளையெல்லாம் திரட்டியும் வெளிவந்தன. பழமொழி பதின்மூவாயிரம்,

இசைத்தமிழ்ச் சரித்திரம், சொல்லியல் நெறிமுறை என்பன பாவாணரால் எழுதி முடிக்கப்பட்டும், அச்சீடும் இல்லாமல் படியும் இல்லாமல் ஒழிந்தவை. தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள் என்பது செல்வியில் வெளிவந்து கட்டுரை அளவில் நின்றதும் நூலாயிற்று.

பாவாணர் எத்தனை எத்தனை துறைகளில் ஆழ்ந்து ஆய்ந்து நூல் எழுதினார் என்பதைக் காட்டும் சான்றுகள் இவை.

தமிழ்ச் சொல்லாய்வில் புகுவார்க்கு ஆணை மொழியாய் இருக்க வேண்டியவை தொல்காப்பிய நூற்பாக்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"

என்பது, தமிழில் இடுகுறியளவான் அமைந்த சொல் எதுவும் இல்லை; எல்லாச் சொல்லும் அடிப்படைப் பொருள் உணர்த்தும் காரணச் சொற்களே என்பது முதல் ஆணை! இதனால் 'இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின' என்னும் பின்னூலாம் நன்னூல் வழியில் தமிழ்ச் சொல்லாய்வில் தலைப்படுவார் தட்டுத் தடையுண்டு முட்டுற்றுக் குனிவர்; அவர் இவ்வாய்வை விடுத்து வேறு வேலை செய்தல் மொழிக்கு ஆக்கம் ஆகும்.

தொல்காப்பிய மற்றொரு நூற்பா:

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"

என்பது ஒவ்வொரு சொல்லும், சொல்லும் அடிப்படைக் காரணம் மேலோட்டமாகப் பார்த்த ஒரு பார்வையால் தோன்றிவிட மாட்டா! ஆழ்ந்து சென்று அறிந்துகொள்ள வேண்டும் என்பது. இதனை, 'ஆராய்ந் தாலும் தெரியவே தெரியாது' எனப் பொருள்கொண்டு மறைமலை யடிகள், பாவாணர் ஆகியோர் ஆய்வுக்கு எதிரிடைப் பட்டோர் பெரும் பெரும் பதவிகளிலும் நிலைகளிலும் வீற்றிருந்த பெரியவர்கள்! அவர்கள் முரணாய்வையும், திரிபாய்வையும் மறுக்கவே பாவாணர்க்குப் பெரும் பொழுது ஒழிந்ததுண்டு! நல்லது செய்தலும் அல்லது கடிதலு மாக ஆய்வாளர்களுக்கு இரண்டு கடமைகள் முந்து வந்து நின்றுவிடு கின்றனவே!

பாவாணர் சொல்லாய்வுகளை மேலோட்டமாகக் கொண்டு மூவகையாகப் பகுத்து ஒவ்வொன்றைப் பற்றியும் சில குறிப்புகளைக் காணலாம். இம்மூவகை:

1. சொல்லாய்வு
2. வேர்ச்சொல்லாய்வு
3. ஒப்பியல் ஆய்வு

என்பன.

சொற்களை எட்டு வகையாகப் பகுத்துக் கொண்டு ஆய்கிறார் பாவாணர் அவை ;

1. அணியியற் சொற்கள்
2. வரலாற்றுச் சொற்கள்
3. மெய்ப் பொருட் சொற்கள்
4. ஒரு பொருட் பல சொற்கள்
5. பல பொருள் ஒரு சொற்கள்
6. வழக்கற்ற சொற்கள்
7. பொருள்திரி சொற்கள்
8. ஒழுக்க வியற் சொற்கள்

என்பன.

1. அணியியற் சொற்கள்

ஆடவன் பெண்டு ஆகிய இருபாலருள் பெண்டு மிக மெல்லியள் ஆதலின் 'கொடி' எனப்படுவாள். குறிஞ்சி நிலப்பெண்ணின் பெயர் கொடிச்சி.

பல தலைமுறையாகத் தொடர்ந்து வரும் குலத் தொடர்ச்சி கொடியும் மரமும் போல நீண்டும் தொடர்ந்தும் இருத்தலின், அதனைக் 'கொடி' என்றும் 'கொடிவழி' என்றும் 'மரபு' என்றும் கூறுவது வழக்கம். தொடர்ந்து வரும் பழக்க வழக்கமும் மரபே. ஆயன் ஆக்களைக் காப்பதுபோல அரசன் மக்களைக் காத்தலால் அரசனுக்குக் 'கோவன்' என்று பெயர். கோவன், 'கோன்' 'கோ' எனத்திரியும். கிறித்தவக் குருமார் மேய்ப்பர் எனப்படுவர்.

கொண்டாடுதல் - ஒரு பொருளைக் கையிற்பற்றி அல்லது தலைமேற் கொண்டு கூத்தாடுதல். தந்தை தன் குழந்தையையும், பத்தன் தான் வழிபடு கடவுள் உருவையும் கொண்டு ஆடுதல்.

திண்டாடுதல் - திண்டு (சிறுதிண்ணை) களில் ஏறிச் சோற்றுக்குக் கூத்தாடுவது. "அவன் சோற்றுக்குத் திண்டாடுகிறான்."

கட்டாயம் - கட்டவேண்டிய ஆயம் கட்டாயம். வரிகட்டுதல் போன்ற கண்டிப்பு.

2. வரலாற்றுச் சொற்கள்

மாந்தன் தோன்று முன்னும் மக்கள் பெருகு முன்னும் ஞாலத்து நிலமெல்லாம் மரம் செடி கொடியாய் இருந்தமையால் உலகுக்குப் 'பொழில்' என்பது பெயர்.

தழையுடைக்குப் பின் மாந்தர் உடுத்தது மரவுரி; அதற்குச் 'சீரை' என்பது பெயர்; அப்பெயரே சீலை எனத் திரிந்தது.

மாடே மக்களின் பெருஞ் செல்வமாக இருந்ததால் மாடு என்பது செல்வப் பெயராயிற்று.

தாய்வழிச் சொத்துரிமை 'தாயம்'

சம்பும் அளமும் சேர்ந்தது சம்பளம்; சம்பு - சம்பாநெல் ; அளம் - உப்பு.

கூலி - கூலமாகத் தந்தது.

'அட்டைக்குழி', 'இருளுலகம்', 'அளறு' என நரகிற்கு உள்ள பெயர்களால், பண்டைக் காலத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட வகை தெரியும்.

3. மெய்ப் பொருட் சொற்கள்

எல்லாப் பொருள்களும் உயிர், உயிருள்ளது, உயிரில்லது ஆகலின் உயிர், மெய், உயிர்மெய் என வழங்கினர். உடம்பை உய்ப்பது உயிர். உயிரை உடைய மெய் உயிர்மெய். உடல், உடம்பு, குடம்பை, கூடு, மெய், யாக்கை, முடை, கட்டை - என்பன அறிவுக் கூர்ப்பால் இடப்பட்ட பெயர்கள்.

கடவுள் - எல்லாவற்றையும் கடந்தவன். இயக்குபவனும் ஆவன்; வீடு - விடுதல் ; வீடுபேறு. பிறப்பு என்பது பிள் என்னும் வேரிலின்றும், இறப்பு என்பது இறு என்னும் வேரினின்றும் பிறப்பன.

4. ஒரு பொருட் பல சொற்கள்

ஒரு பொருட் பல சொற்கள் எல்லாம் நுண்பொருள் வேறுபாடுடையன.

'களவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்'
'தந்தப் பல்லக்கும் சிவிகையும் தாங்கி'
'கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராவும்'

இத்தலைப்பில் 60 வகைகளைக் குறிக்கிறார் பாவாணர்.

மாலை வகை

கண்ணி - இவ்விரு பூவாக இடைவிட்டுத் தொடுத்த மாலை.

தார் - கட்டிமாலை

தொங்கல் - தொங்கல் விட்டுக் கட்டிய மாலை

கதம்பம் அல்லது கத்திகை - பலவகைப் பூக்களால் தொடுத்த மாலை

படலை - பச்சிலையோடு மலர் விரவித் தொடுத்த மாலை

தெரியல் - தெரிந்தெடுத்த மலரால் ஆய மாலை

அலங்கல் - சரிகை முதலியவற்றால் விளங்கும் மாலை

தொடலை - தொடுத்த மாலை

பிணையல் - பின்னியமாலை

கோவை - கோத்த மாலை

கோதை -கொண்டை மாலை

சிகழிகை - தலை அல்லது உச்சி மாலை

சூட்டு - நெற்றிமாலை

ஆரம் - முத்துமாலை.

சண்டை வகை

சண்டை - இருவர் செய்யும் போர்

மல் - இருவர் தம் வலிமை காட்டச் செய்யும் போர்

கலாம் - பலர் செய்யும் போர்

கலகம் - இரு குழுவார் அல்லது கூட்டத்தார் செய்யும் போர்

போர் - இரு நாட்டார் அல்லது அரசர் செய்யும் போர்

பூசல் - போர் ஆரவாரம்

சமர் - இரு படைகள் கலந்து செய்யும் போர்

ஞாட்பு - செறிந்து செய்யும் போர்

மலைவு - பூச்சூடிச் செய்யும் போர்

செரு - பகைவரை அழிக்கும் போர்.

5. பலபொருள் ஒரு சொற்கள்

கேழல் - பன்றி, யானை

வாரணம் - கடல், சங்கு, கோழி

புல் - புல், கம்பு, மூங்கில்

குருகு - நாரை, கொக்கு, அன்னம், துருத்தி.

தும்பி - வண்டு, யானை

கவரொட்டி - ஒரு வகை ஈரல், விளக்கு, புறா, விளம்பரத்தாள்.

6. வழக்கற்ற சொற்கள்

ஆங்கிலம் எத்துணையோ சொல்வளம் மிக்கதாயினும் தமிழிலுள்ள பூட்டன், சேயான், ஒட்டன், பகல், வெயில், காய், பிஞ்சு முதலிய பல பொருள்களை உணர்த்தத் தனிச்சொல் கொண்டிலலை.

நீண்ட காலமாக உறவாடாத மக்கள் அயலாராகத் தோன்றுவது போன்றே நீண்ட காலமாக வழங்காத சொற்களும் அருஞ்சொல்லாய்த் தோன்றுகின்றன.

தள்ளுவதை 'நூக்குதல்' என்பது வடார்க்காட்டு வழக்கு.

தொடையைக் 'குறங்கு' என்பது இராமநாதபுர வழக்கு. காளிக்கு ஆட்டுத் தொடையைப் படைத்தலை அம்மனுக்கு குறங்கு கொடுத்தல் என்பர்.

சின்ன என்பதை 'நொய்ய' என்பது குடந்தை வழக்கு.

இளம்பிஞ்சைத் 'தவப்பிஞ்சு' என்பது திருச்சி வழக்கு.

திருவாசகம் இன்றில்லையேல் 'சாழல்' 'தெள்ளேணம்' முதலிய சொற்களை வேறெங்குக் காண முடியும் என வினாவும் பாவாணர்.

"பாழான மண்ணிற்கும் படையான சிதலுக்கும்
படியாதார் நெருப்பிற்கும் பதினெட்டாம் பெருக்கிற்கும்
பற்பல பூச்சிக்கும் பகைவரின் சூழ்ச்சிக்கும்
இரையான கலைநூல்சொல் எத்துணை? எத்துணை?"

என இரங்குகிறார். வழக்கற்ற சொற்கள் 150ஐ அகரப்படுத்தித் தந்ததுடன் 'வழக்கற்ற சொற்களையெல்லாம் ஒரு தனிச் சுவடியாக வெளியிட இந் நூலாசிரியன் கருதுதலின் ஈண்டுமிக வேண்டிய சொற்களே காட்டப் பெறும்' என்கிறார்.

7. பொருள்திரி சொற்கள்

உயர்பு குறித்தல் - 'இறைவன்' 'கோயில்' என்பவை அரசனைச் சார்ந்தவையாய் இருந்து கடவுளுக்கு உயர்ந்தவை.

இழிபு குறித்தல் - 'பண்டாரம்' - பலபொருள் சரக்கறை; அவை உடையான்; அது, துறவுக்கோல இரவலன் பெயராயிற்று.

பொது - 'பள்ளி' - 'படுக்கையிடத்தைக் குறித்துப் பின் பலவகை இடப்பெயராயிற்று.

வரையறுப்பு - பிள்ளை, குறி, குட்டி என்பவை பொதுமை நீங்கி வரையறுப்பிற்கு உட்பட்டவை.

விரிப்பு - செம்பு பலவகைத் தாதுக்களாலும் செய்யப்படும் கலத்திற்கு ஆயது.

தோடு - ஓலையை மட்டும் குறியாமல் காதணிகளையெல்லாம் குறிப்பது.

8. ஒழுக்கவியற் சொற்கள்

நல்லார் - நல் - நல்கு - நல்குபவர்.

காவலன் - காத்தல் கடனுடையான்.

கணவன் மனைவி - கண்ணாளன், கண்ணாட்டி.

செம்மல் - செம்மையாய் ஒழுகுபவன்.

பெரும் பிறிது, திரப்பு, நல்கூர்தல் - மங்கல வழக்கு.

பாவாணர் நூல்கள் அனைத்திலும் சொல்லாய்வில்லாமல் இருப்பதில்லை. இது, சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் நூலின் குறிப்புகள் மட்டுமே கொண்டது.

வேர்ச் சொல்லாய்வு

'சொல்வேர்காண் வழிகள்' என்பது பாவாணர் கட்டுரைகளுள் ஒன்று. அது செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்தது (41.316).

புலவர் பட்டம் பெற்றமையாலோ, கல்லூரிப் பதவி கிட்டியமை யாலோ, மேலை அறிஞர்கள் எழுதிய மொழி நூல்களைக் கற்றமை யாலோ வேர்காண் ஆற்றல் வந்துவிடாது என்று கூறும் பாவாணர் **'கல்வி வேறு ஆராய்ச்சி வேறு'** என்பதைத் தெளிவிக்கிறார்.

சொற்பிறப்பியல் என்பது சொற்களின் உண்மையான வரலாற்றைக் கூறுவதேயன்றி ஒலிமுறை தழுவியும் உன்னிப்பாகவும் குறிக்கோள் கொண்டும் கூறுவது அன்று என்கிறார்.

நெறிமுறைகளை அறியார் செய்யும் வேர்ச்சொல் ஆய்வு பின் வரும் எழுவகை வழுமுடிவுகளையே தரும் என எடுத்துக் காட்டுடன் விளக்குகிறார்.

1. ஒலிமுறைச் சொல்லியல்

பாராளுமன்று ; பார் ஆளும் மன்று ; Parler (to Speak) என்னும் பிரெஞ்சு வினை முதனிலையும் Ment என்னும் ஈறும் கொண்டது ஆங்கிலச்சொல். ஆதலால் இரண்டும் வெவ்வேறாம்.

2. உன்னிப்புச் சொல்லியல்

வடு - வடை (நடுவில்) துளையாகிய குற்றமுள்ளது). இது சரியன்று.

வள்-வட்டை - வடை, வ, வடா, இதுவே உண்மையான பொருள்.

3. குறிக்கோட் சொல்லியல்

முத்து, முத்தம், வ. முக்தா (சிப்பியில் இருந்து விடுதலை பெற்றது) இது சரியன்று.

முத்து - உருண்டையானது, (முற்றித் திரண்டது) இதுவே உண்மையான பொருள்.

4. அடிப்பட்ட சொல்லியல்

உண்மை - உள்ளத்தோடு பொருந்தியது. (கருத்தொடு)

வாய்மை - வாயொடு பொருந்தியது. (சொல்லொடு)

மெய்ம்மை - உடம்பொடு பொருந்தியது (செயலொடு - இவை சரியன்று.

உண்மை - உள்ளது; வாய்மை - தேற்றமாய் வாய்ப்பது; மெய்ம்மை. கண்கூடானது - இவ்வாறு கொள்வதே பொருத்தமானது.

5. நகையாட்டுச் சொல்லியல்

தோசை - சுடும்போது இருமுறை 'சை' என்று ஓசை கேட்பது; இது வேடிக்கை.

தோய்தல் - மாவு புளித்தல். தோய் - தோயை தோசை, இது பொருந்தியது.

6. பொருந்தப் புகல்வுச் சொல்லியல்

பெருச்சாளி - பெரிய பணப்பை போன்றது. பெருத்த எலி என்பது உண்மை.

7. அறிவார - வாரச் சொல்லியல்

கீழ் கிழக்கு ; ஞாலம் உருளும்போது கிழக்கு நோக்கிச் செல்வது; இது கணியர் திறமாகக் கூறுவது கீழ்க்கோடியில் பள்ளமாயிருப்பது இது உண்மையானது.

இலக்கண அறிவுடைமை, மொழிநூலறிவும் மொழியாராய்ச்சியும், சொல்லியல் அறிவுப்பேறு, அயன்மொழி அறிவு. பெரும்பால் தமிழ்ச் சொற் பொருளறிவு, தமிழ் ஒலியியல்பு அறிதல், எழுத்துக்களின் திரிபுகளை அறிதல், சொற்றிரிபறிதல், சொற்களின் திருந்திய வடிவறிதல், பல பொருள் ஒரு வடிவுச் சொற்களைப் பகுத்தறிதல், சொற்களைச் செவ்வையாகப் பிரித்தல், பொருள்களின் சிறப்பியல்பு அறிதல், பொருள் வரிசையறிதல், ஒப்புமையமைப்பு அறிதல், வரலாற்றறிவையும் ஞாலநூல் அறிவையும் துணைக்கோடல், இடுகுறி தமிழில் இல்லையென்றுணர்தல், பகுத்தறிவைப் பயன்படுத்துதல், அஞ்சாமை, நடுநிலை, பொறுமை என்னும் இருபது திறங்களும் சொல்வேர் காண்பார்க்கு வேண்டும் என்பார் பாவாணர்.

உலகெங்கும் பரவியுள்ள மூல மொழிகளுள் முதன்மையானது தமிழே. அது தோன்றிய இடம் மாந்தன் பிறந்தகமாகிய குமரிநாடே என்பதை மெய்ப்பிக்கும் வகையில் முதற்கண் எழுதப்பட்ட நூல் முதல் தாய்மொழி. உணர்வொலி (ஆ,ஊ) ஒப்பொலி (சப்பு - சப்பிடு - சாப்பீடு ; சவக்கு - சவை - சுவை) குறியொலி (உச்சு, ஊம், பேபே) வாய்ச்செய்கை ஒலி (ஊ-ஊது ; அவ்வு-வவ்வு-கவ்வு) குழவி வளர்ப்பொலி (ங்கு, மிய்யா, ளொள்ளொள்) என்னும் குறிப்பொலிக் காண்டமும் சுட்டொலிக் காண்டமும் கொண்டது முதல் தாய்மொழி.

வாயை ஆவென்று விரிவாகத் திறந்து சேய்மையைச் சுட்டும் போது ஆகார ஒலியும், ஈயென்று பின்னோக்கி இழுத்துச் சேய்மைக்குப்

பின்மையாகிய அண்மையைச் சுட்டும்போது ஈகார ஒலியும், ஊவென்று முன்னோக்கிக் குவித்து முன்மையைச் சுட்டும்போது ஊகார ஒலியும் பிறக்கும். இம்மூவகையின் அன்றி வேறு வகையில் ஒலித்தல் இயலாது. ஆதலால் சுட்டொலிகள் மூன்றும் கணிதம் போல் அளவைப்பட்டனவும் திட்டமானவும் எவ்வகையிலும் மாறாதனவும் ஆகும்.

நெடிலின் குறுக்கம் குறில் ; குறிலின் நீட்டம் நெடில் ; ஆகலான் ஆ,ஈ,ஊ எனினும் அ, இ, உ எனினும் ஒன்றே. குழந்தை நிலையில் இருந்த முந்தியல் மாந்தன் வாயில் நெடில்களே முந்திப் பிறந்திருத்தல் வேண்டும்.

மூவகை : சுட்டுகளையும் ஆ, ஈ, ஊ எனக் கூறுவதே நெடுங் கணக்கு மரபு ஆயினும் சொற்பெருக்க வகைச் சிறப்பு நோக்கி ஊ, ஈ, ஆ என்னும் முறையில் கூறப்படும் என்கிறார் பாவாணர். ஊகாரச் சுட்டின் விரியே நூலாக (21-323) அமைகின்றது. ஈகார ஆகாரச் சுட்டுகள் (323-331) சுருங்கி அமைகின்றன ஊகாரச் சுட்டின் சிறப்பு அத்தகையது.

ஊகாரச் சுட்டு முன்மையைக் குறிப்பது, முன்மைக் கருத்தினின்று தோன்றற் கருத்தும், அதனின்று முற்பட்ற் கருத்தும், அதனின்று முற் செலவுக் கருத்தும், அதனின்று முறையே நெருங்கல் தொடுதல் கூடல் வளைதல் துளைத்தல் புகுதல் கருத்துக்களும் தோன்றும். தோன்றல் முதல் துருவல் அல்லது துளைத்தல் வரையுள்ள கருத்துகள் எல்லாம் ஒரு கழல் சக்கரமாகும்.

'உல்' என்னும் வேர்ச்சொல் வழியாக வளைதற் கருத்தில் உண்டாகும் சொல் விரிகளைப் பாவாணரின் வேர்ச்சொற் கட்டுரை ஒன்றன் வழியே திரட்டாகக் காணலாம்.

உல்-உலம் = உருண்டு திரண்ட கல் ; திரட்சி.

உல்-உலம்-உலவு-உலவுதல்= உலாவுதல், சுற்றுதல், திரிதல்.

உலவு-உரவு-உரவுதல் = உலாவுதல்.

உல்-உல-உலக்கை=உருண்டு திரண்ட கருவி, ஒரு படைக்கலம், வெருகன்கிழக்கு.

உலண்டு = உருண்டு திரண்ட கோற்புழு.

உல-உலவை = சுழன்றடிக்கும் காற்று, ஊதை (வாத) நோய்.

உலவு - உலகு = உருண்ட உலகு.

உலகு-உலகம் = ஞாலம், மக்கள், உயிரினங்கள், உயர்குணம், ஒழுக்கநடை,

உலம் வருதல் = சுழலுதல், உழலுதல்.

உலம்வரல் - உலமரல் = உழலுதல், துன்பம்.

உல் -உலா - சுற்றிவரல், நகர்வலம், உலாமடல்.

உலா - உலாம் = உவம உருபு.

உலா - உலாவு = உலாவுதல்.

உலா - உலாத்து - உலாத்துதல்.

உலாத்துக்கட்டை - கதவு நின்றாடும் சுழியாணி.

உலாத்தி = ஒரு குருவி.

உலாஞ்சு = தலை சுற்றுதல்,

உலுக்கு -உலுக்குதல் -அசைத்தல், உலுப்புதல், உலுத்துதல்.

உல்-உள்-உழல் -உழலுதல் = சுழலுதல்.

உழல்-உழலை = சுழன்றுவரும் செக்குலக்கை; கணையமரம்.

உழற்சி - சுழற்சி.

உழற்றுதல் = சுழற்றுதல்.

உழல் - உழறு - உழறுதல் = அலைதல்.

உழிதல் = அலைதல், வளைதல்.

உழி - உழிஞை = அரணம் முற்றுவோர் சூடும் கொற்றான் மாலை,

உழிதருதல் = திரிதல்.

உல்-உர்-உருள் = உருளுதல்.

உருள் = சக்கரம், சகடமீன்

உருள் - உருளி=வட்டம், சக்கரம்.

உருளை = சக்கரம், உருண்டைகிழங்கு.

உருளை - உருடை = வண்டி

உருள் - உருண்டை = உருண்ட பொருள், கவளம் திரட்சி.

உருண்டை உண்டை

உருள் - உருட்டு - உருட்டை, சக்கரம், திரட்சி, ஏமாற்றுகை.

உலம் - அலம் - அலவன்.

-இவ்வாறே அலம், அசை, அயர், ஆல், ஆலத்தி, ஆளத்தி, ஆடு, ஆடி, ஆடை, என வளைதற் கருத்துச் சொற்களாக விரியும்.

வேர்வழிச் சொற்கள் சிலவற்றைக் கண்டு தெளியும் போதுதான் தமிழ்மொழி அமைப்புற்ற வரலாற்றின் அருமை புலப்படும். என்ன அரிய கட்டொழுங்கில் வளர்ந்துள்ள இயன்மரபு மொழி இது என்னும் இறும்பூது பாவாணர் நூல்களைக் கற்கும்போது கற்பவர்க்கு உண்டாகு மானால், அதனைக் கண்டுபிடித்துக் காலமெல்லாம் இன்பத்தளிர்ப்பில் இருந்த பாவாணர்க்கு உள்ளகத்தில் இன்பமேயன்றித் துன்பம் என்ன இருந்திருக்க முடியும்?

உல் என்னும் வேர் குல், கல், துல், நுல், புல், முல் என மொழி முதல் எழுத்துகளொடு கூடிவருவதும் பிறவாறு திரிவதும் ஆகிய

வற்றைத் தமிழ் வரலாறு இயனிலைப்படலத்தில் விரிவாகக் கூறுகிறார் பாவாணர், அதன் விரிவாகவே வேர்ச் சொற் கட்டுரைகளும், தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்களும் கூட்டுச் சொற்களும் தொடர்கின்றன.

ஒப்பாய்வு

திரவிடத்தாய் என்பதில் விரிந்த அளவில் தமிழ் திரவிடச் சொற்களின் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. முதல் தாய்மொழியிலும் தமிழ் வரலாற்றிலும் தமிழ் உலக மொழிகளோடு ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

பால் வாங்கிக் கொண்டு நடந்து வரும்போது எதிரேவந்த மிதிவண்டிக்காரர் பாவாணரை மோதிக் கீழே தள்ளிவிட்டு 'மன்னிகை' என்னும் பொழுதிலும் 'மன்னிக்க' உருதுச் சொல்; 'பொறுத்துக்கொள்க' என்று சொல்க என்று கூறிய பாவாணர் "வழுக்கி வீழினும் சொல்லும் நா ஒப்பியலாய்வே" என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் என்பது தெள்ளத் தெளிந்த செய்தி.

ஆங்கிலம் கிரேக்கம் இலத்தீனம் ஆகிய மொழிகளில் சென்று வழங்கும் தென்சொற்கள் ஆயிரக் கணக்கின என்பதை ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சொற்களை எடுத்துக்காட்டி 1931 இலேயே நிறுவியவர் பாவாணர். அதன்மேல் ஐம்பான் ஆண்டுகள் அதே உழைப்பில் ஈடுபட்டவர் பாவாணர். அவர் ஆய்வே முற்றாகப் பார்த்தல் அன்றி ஒருசிறு சுவடியிலோ, ஒரு மொழியிலோ காட்டிவிடுவதற்கு இயலாது.

வடமொழிக்குச் சென்றதும் மூலமாய் உள்ளதுமாம் சொற்றொகுதித் திரட்டே வடமொழி வரலாறு. இவ்வாறு உலகமொழிகளுக்கெல்லாம் தமிழ் மூலமாதலையும் முதலாதலையும் பாவாணர் வழியில் தனியொரு பட்டியலிட்டுக் காட்டுதல் உலகோரைத் தமிழின் பக்கம் திருப்புவதற்கு ஓர் அரிய தூண்டலாகும். அதனை அறிஞர்கள் மேற்கொள்ளல் இன்றியமையாக் கடமையாகும்.

அப்பா, அம்மா என்னும் சொற்கள் உலகமொழிகளில் தம் வடிவிலும் திரிபு வடிவிலும் வழங்குவதைப் பாவாணர் பல நூல்களில் குறிக்கிறார். பூனை என்னும் உயிரி அடிக்கடி முகம்பூசுவதால் 'பூசு' 'பூசை' என்று வழங்கப் பட்டதையும் உலகமெல்லாம் அப்பெயர் வழங்குமாற்றையும் தமிழிலக்கிய வரலாற்று முன்னுரையில் பாவாணர் குறிப்பிடுகிறார். சொல்லாய்வு அன்றிப் பாவாணர் ஆய்வுகளில் தனிச்சிறப்பான இடம் பெற்றதும் நன்கனம் நிலைநாட்டப் பட்டதுமாம் ஆய்வு 'குமரிக் கண்டம்' பற்றியதாகும். அதனைத் தமிழ் வரலாறு, வடமொழிவரலாறு, தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றின் முன்னுரை

களிலே மிக விரிவாக ஆய்ந்து பல்லாற்றானும் நிலை நாட்டுகிறார். அவர் எழுதிய நூல்களில் இறுதியாக வெளிவந்த தனிநூல் தமிழ் இலக்கிய வரலாறு. அதன் முன்னுரையில் மறைந்த குமரிக் கண்டம். குமரிக் கண்டமே மாந்தன் பிறந்தகம், குமரிநாடே தமிழன் பிறந்தகம், குமரி நாட்டுத் தமிழர், குமரிநாட்டு நாகரிகம், குமரிநாட்டு இலக்கியம், தமிழர் பரவல், ஆரியர் திரும்பல் எனப் பத்துத் தலைப்புகளில் விரிவாக ஆய்கின்றார். பாவாணர் உரையாட்டின் போது சொல்லிய 'சொல்லியல் நெறிமுறை' ஒன்று எண்ணத் தக்கது :

தோகை என்பது பலபொருள் ஒருசொல். மயில் தோகை, மயில், மயில்போலும் மங்கை, நெல் கரும்பு ஆகிய பயிர்களின் பக்கத்தாள் ஆகியவை தோகையின் பொருள்களாக வழக்கில் உள்ளன, இவற்றைச் சொற் பிறப்பு வரலாற்று முறையில் வரிசைப்படுத்த வேண்டுமானால் அடிப்படை முறைகள் இரண்டைக் கொள்ள வேண்டும்.

ஒன்று, இயங்குதிணை, நிலைத் திணை ஆகிய இரண்டனுள் நிலைத்திணைப் பெயரீடே முன்னது என்பதும், அதன் வழியது இயங்கு திணைப் பெயரீடு என்பதும் ஆகும்.

மற்றொன்று, கருத்துப் பொருள் காட்சிப் பொருள் என்னும் பொருள் வகைகளுள் காட்சிப்பொருள் முன்னது என்றும் கருத்துப் பொருள் பின்னது என்றும் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வகையில், தோகைக்குரிய பொருள்களை ஆராய்ந்தால் முதற்கண் நெல் கரும்பு ஆகியவற்றின் தோகையும், மயிலின் தோகையும், அத்தோகை உடைமையால் மயிலும் மயில்போலும் சாயல் உடைமை யால் மகளிரும் தோகைப் பெயர் பெற்றமை விளக்கமாகும் என்றார்.

பாவாணர் சொல்லியல் நெறிமுறைகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணிக் காலத்தில் வரைந்தும் வெளிவராமலும், கைக்கு எட்டாமலும் போய்விட்டது, அவர் கண்ட சொல்லியல் நெறிமுறை பொதுவகையில் எல்லா நூல்களிலும் சிறப்பாகத் தமிழ் வரலாற்றிலும் இடம் பெற்றுள. அவற்றை ஓர் அறிஞர் தொகுத்து, பாவாணர் வழி ஆய்வுடையார் கூடிய குழு ஒன்று மேற்பார்வையிட்டுத் தனி நூலாக வெளிவருமானால் சொல்லாய்வு செய்வார்க்கெல்லாம் கையிடைக் கனியாய் உதவும்.

அண்மையில் வெளிவரும் தேவநேயத்தின் முகப்புப் பகுதியில் பாவாணர் காட்டிய சொல்லியல் நெறிமுறைகள் பல எடுத்துத் தொகுத்துக் காட்டப்பட்டுள, ஆங்குக் காண்க. பாவாணர் வாழ்வியல், பொருளியல், அரசியல், குமுகாயச் சீர்திருத்த இயல் இன்ன பல இயல் திறங்களில் தோய்ந்த பெருஞ் சிந்தனையாளர் என்பது ஆங்காங்கு

அறியக்கிடப்பினும் அவற்றின் திரட்டுப் பாகாக அமைந்து விளங்கும் ஒரு நூல் மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை என்பதாகும்.

வள்ளுவர் கூட்டுடைமை, தமிழ்நாட்டு அரசின் கடமை, தமிழ் நாட்டு அரசின் தனிக்கடமை, நடுவணரசின் கடமை, உலகக் கூட்டரசு, முடிவுரை என்னும் ஆறுபகுதிகளைக் கொண்டது மண்ணில்விண், அதன் முடிவுரையில் பிறவிக் குலப்பிரிவினை ஒழிப்பு, வரலாற்று மறைப்பு நீக்கம், உலகக் கூட்டரசு என்பவற்றை வலியுறுத்துகிறார்.

"புதுமொழி வகையில் ஆங்கிலமும் முதுமொழி வகையில் தமிழுமே உலகப் பொதுமொழிகளாக வளர்ந்தோங்கும்" எனவும் "திறமைக்குத் தக்க முயற்சி ; தேவைக்குத் தக்க நுகர்ச்சி ; இதுவே கூட்டுடைமை" எனவும், ஒன்றிய நாட்டினங்கள் (UN) உண்மையில் ஒன்றாத நாட்டினங்களாய் இருப்பதால் உலகக் கூட்டரசு இன்றியமை யாதது" என்றும், "அறிவியற் குறியீடுகளையெல்லாம் தமிழில் மொழி பெயர்க்கப் போதிய சொல்லில்லை என்றோ, ஒரு வகையாலும் மொழி பெயர்க்க முடியாது என்றோ சொல்வது அறியாமையின்பாற்பட்டதே. தம்மைப் போற் பிறரையும் கருதித் தமக்குத் தெரியாததெல்லாம் பிறருக்கும் தெரியாதென்று கொள்வது பலரின் பிறவிக் குணமாயுள்ளது" என்றும், "தமிழ் தூய்மையை உயிர்நாடியாகக் கொண்டிருப்பதனாலும், மேன்மேலும் பல அயற்சொற்களை இடைவிடாது மொழி பெயர்க்க வேண்டி இருப்பதனாலும், தனிப்பட்ட புலவரும், மாணவர் குழாங் களும் அறிஞர் குழுக்களும் ஒரு பொருட்கு வெவ்வேறு சொல்லை ஆக்கி வழங்குவதனாலும், அவற்றுள் எதை ஆள்வதென்று பொதுமக்கள் மயங்குவதனாலும், ஏற்கெனவே அரசினால் அமர்த்தப்பட்ட மொழி பெயர்ப்புக் குழு ஒரு துறைக்கே சிறப்பாக உரியதாய் இருப்பதனாலும், தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத பொதுச் சொற்களையெல்லாம் அவ்வப்போது புனைந்து வழக்காற்றுப் படுத்துதற்குப் பலதுறை யறிஞரைக் கொண்ட ஒரு நிலையான சொல்லாக்கக் குழுவை அரசு ஏற்படுத்துவது நன்றாகும்" என்றும் கூறுகிறார்.

"எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேம்படும்" என்பதைப் பல்கால் கூறுவார் பாவாணர். அதுபோல் உண்மை மேம்பட்டு நின்று பாவாணர் ஆய்வு வளம் உலகப் பொருளாவதாக!

❖❖❖❖

குறிப்புகள்

தாம் பயின்ற தமிழ் இலக்கணப் புலமை அனைத்தையும் மொழித்துறையில் செலுத்தித் தமிழகமெங்கும் சுற்றி ஆங்காங்கே வழங்கி வரும் தமிழ்ச் சொற்களை யெல்லாம் ஆய்ந்து தணியாத பேருணர்வு கொண்டாரெனில் அவரது தோலாப் புலமையை என்னென்று இயம்புவது?

மொழியியல் துறையின் முதல்வர் பாவாணரெனில் மிகையாகாது. பாவாணர் அவர்களின் விரிந்த அறிவுத் திறத்தையும் சொல்லுக்குச் சொல் அடிப்படை காணும் ஆற்றலையும் பொருள் காணும் நுண்மையையும் பாவாணரின் நூல்கள் எடுத்தியம்புகின்றன.

- பாவலர் குறிஞ்சிக் குமரனார்

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர்,
சென்னை - 600 017